
# நல்லைநகர்ச் செவ்வேள்

## வானொலி வர்ணனை




செ. கணபாலசிங்கன்

உ

கணபதி துணை

# நல்லைநகர்ச் செவ்வேள்

## வானொலி வர்ணனை

50

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

செ. தனபாலசிங்கன், B. A. (Lond.)

அச்சுப்பதிவு:
ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு—1976
உரிமை நூலாசிரியர்க்கு உரியது.

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

விலை: ரூபா 6-00

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| ஆசியுரை | ... | v |
| அணிந்துரை | ... | vii |
| முன்னுரை | ... | xxvi |
| தேர்த்திருவிழா வர்ணனை ஆரம்பம் | ... | 1 |
| ஆக்கம் தரும் அழிவு | ... | 2 |
| தேரின் பொருள் | ... | 4 |
| ஊன நடனம் | ... | 5 |
| தேரின் தத்துவம் | ... | 6 |
| சறுக்குக்கட்டை | ... | 7 |
| தேரின் கீழ் அண்டம் | ... | 8 |
| தேரின் பீடம் | ... | 8 |
| தேரின் நான்காம் தட்டு | ... | 9 |
| தேரின் கலசம் | ... | 10 |
| தேரின் குடை | ... | 11 |
| ஆறுமுக தத்துவம் | ... | 12 |
| ஒளி தரும் முகம் | ... | 13 |
| அருளும் முகம் | ... | 14 |
| வேள்வி காக்கும் முகம் | ... | 14 |
| மெய்ஞ்ஞானத் திருமுகம் | ... | 15 |
| வீரத்திருமுகம் | ... | 15 |
| இன்பமுகம் | ... | 16 |
| ஆறுமுகமான பொருள் | ... | 17 |
| காலைப்பிடித்தால் கைமேல் அருள் | ... | 20 |
| ஆடிவரும் முருகன் | ... | 22 |
| வடம் பிடிக்க வாருங்கள் | ... | 22 |
| காவடி ஆட்டம் | ... | 25 |
| அர்ச்சனை செய்தல் | ... | 26 |
| தேங்காய் உடைத்தல் | ... | 27 |
| பச்சை சாத்துதல் | ... | 27 |
| முருகன் அழகு | ... | 28 |

| | | |
|---|---|---|
| நல்லைநகர் ஆறுமுகப் பெருமான் | ... | 33 |
| நல்லைநகர் முத்துக்குமாரன் | ... | 35 |
| நல்லைநகர்ப் பழநி ஆண்டவன் | ... | 36 |
| நல்லைநகர் வேற்பெருமான் | ... | 38 |
| நல்லைநகரில் ஒரு பிள்ளையார் | ... | 40 |
| நல்லூரில் நாம் காணும் முருகன் | ... | 41 |
| நல்லூரில் நாவலரின் புராணபடனம் | ... | 45 |
| நல்லைப்பதியில் ஒரு கலியுகவரதன் | ... | 46 |
| அடியார் பரவசம் | ... | 51 |
| முருகனின் அருட்காப்பு | ... | 54 |
| முருகா வருக வருக | ... | 60 |
| வாராதிருக்க வழக்கு உண்டோ | ... | 62 |
| நல்லூரில் தித்திக்கும் அமுது | ... | 64 |
| அடியார் நடுவுள் இருக்கும் அருள் | ... | 68 |
| நல்லைநகர்ச் செவ்வேளின் பெருங்கொடை | ... | 72 |
| நல்லூர்த் தேர்விழாக் காட்சி; நிறைவுரை | ... | 73 |
| தீர்த்தோற்சவ வர்ணனை | ... | 74 |
| முருகனின் சக்திகள் | ... | 74 |
| பஞ்சகிருத்தியத்தில் அருளல் | ... | 76 |
| விநாயகர் எழுந்தருளல் | ... | 76 |
| அஸ்திரதேவர் வருகை | ... | 78 |
| பரமானந்த சாகரம் | ... | 78 |
| சண்முக தீர்த்தம் | ... | 80 |
| அடியார்களின் பக்திப் பரவசம் | ... | 82 |
| பஞ்சமூர்த்திகள் தீர்த்தம் ஆடல் | ... | 83 |
| விழாக்களின் உட்பொருள் | ... | 87 |
| கிரியைகளுக்கு ஒரு விளக்கம் | ... | 87 |
| வாழ்த்து | ... | 89 |
| துதிப்பாடல்கள்:- திரு. கி. வா. ஜகந்நாதன் | | |

உ
முருகா

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

அறங்காவலர் அளிக்கும்

# ஆசியுரை

கலியுக வரதனும் கந்தப்பெருமானுடைய புகழ் சைவ உலகம் முழுவதும் பரவியது. அவனுடைய அருளோ அண்டங்களுக்கு அப்பாலும் நிறைந்தது. அங்கு இங்கு எனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள முருகன் நல்லூரில் அடியவர்க்கு எளியனுய் எழுந்தருளியுள்ளான். அவன் அருள் வெள்ளத்தில் அழுந்தி ஆனந்தம் அடைவோர் எண்ணில்லாதவர்கள். நேரில் தரிசித்தவர்களின் நெஞ்சை விட்டு நீங்காத கோலத்தவன் இந்தக்குமரன்; அழகன்.

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் நடைபெறும் நித்திய நைமித்திக பூசைகளைக் கண்டு ஆனந்திப்பவர் ஈழத்தின் நாலாபக்கத்திலும் உள்ளனர். ஒருதரம் தரிசித்தோர் உள்ளத்தினை விட்டு நீங்காத நிகழ்ச்சிகள் பல இங்கு இடம் பெறுகின்றன. நெஞ்சை விட்டு நீங்கிய நிகழ்ச்சிகளையும் நினைவுக்கு கொண்டு வந்து அடியவர்களைப் பக்தி வலையில் படுத்தும் மிக உயர்ந்த பணியை இலங்கை வானொலி கடந்த சில வருடங்களாகச் செவ்வனே செய்து வருகின்றது. இங்கு வருடந்தோறும் நிகழும் தேர்த்திரு விழா தீர்த்தத் திருவிழாக்களை நேர்முக வர்ணனை செய் வதன் மூலம் வானொலி நிலையத்தார் விழாக்களை முன்னர் தரிசித்தவர்களையும் தரிசிக்காதவர்களையும் மனத்தால் நல்லூரான் திருமுன்பு கொண்டு வருகிறார்கள்.

வானொலியில் திருவிழா நிகழ்ச்சிகளை நேர்முக வருணனையாகச் செய்வது ஒரு தனிக்கலை; அது திருவருள் கூட்ட வரும் பெருங் கலை; அன்பர் திரு. செ. தனபால சிங்கன் அவர்களுக்கு இது முருகன் அருளால் கை வந்த

கலை என்றுதான் சொல்ல வேண்டும். அவரது வருணனைகள் வெறும் நிகழ்ச்சிக் கோவையாக மட்டும் அமையாமல் தத்துவார்த்தங்களையும் உள்ளடக்கியனவாக இருப்பதால் தனித்தன்மை வாய்ந்தவை. பசுவின் பால் மருந்தாகவும் அதுவே உணவாகவும் அமைவதைப் போலே இவரின் வருணனைகள் தத்துவங்களையும் நிகழ்ச்சிகளையும் மனத்தில் பதிக்கின்றன. இந்த வகையில் திரு. தனபாலசிங்கன் செய்து வரும் பணி திருவருள் பொங்கி வரும் தெய்வப் பணி. இது எனது அபிப்பிராயம் மட்டுமல்ல முருகன் அடியவர்கள் எத்தனையோ பேர் சொல்லியதும் கூட.

திரு. தனபாலசிங்கன் பலகாலம் செய்து வந்த வருணனைகள் புத்தக உருவில் வெளிவருவதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறேன். வேண்டிய நேரத்தில் ரதத்தில் ஆரோகணித்து வரும் முருகனையோ, அருள் பாலிக்கும் நல்லைக் கந்தனையோ பக்தியுடன் காணத்தக்க வகையில் இந்நூல் பக்தர்களுக்கு நிச்சயம் உதவும்.

என்றுமே முருகனுக்குத் தன்னை ஆளாக்கிய திரு. தனபாலசிங்கன் வாழ்க! வளர்க அவர் பணி!! என வாழ்த்துகிறேன். அவர்களுக்குத் திருவருள் நலன் மும்மையிலும் கிடைக்க வேண்டுமென நல்லைக் கந்தன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

அறங்காவலர்.

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.
21 - 4 - 1976

உ

முருகன் துணை

# அணிந்துரை

'கலைமகள்' ஆசிரியர்
வாகீச கலாநிதி, வித்துவான்
திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., M. O. L.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது தமிழ் மூதாட்டியின் அறிவுரை. திருநாவுக்கரசரோ கோயில் இல்லாத ஊர் திருஇல் ஊர் என்றும், அடவி காடென்றும் கூறினர். "திருக்கோயில் இல்லாத திருஇல் ஊரும்...... அவையெல்லாம் ஊர் அல்ல, அடவி காடே" என்பது அவருடைய திருவாக்கு. திரு இல் ஊர்—திருமகள் இல்லாத ஊர். திருமகள் இல்லாத ஊரில் அவளுடைய தமக்கை எழுந்தருளி இருப்பாள். காடு வேறு, அடவி காடு வேறு. காட்டில் முனிபுங்கவர்கள் வாழ்வதுண்டு. கொடிய விலங்கினங்களே வாழும் காடு அடவி காடு. நாவுக்கரசர் கோயிலுக்குப் போகாத மக்களைக் குறிப்பாக இழித்துச் சொல்கிறார். கோயில் இல்லாத ஊர் அடவி காடு என்றால் அதில் குடியிருப்பார் கொடிய விலங்கினங்கள் என்றுதானே கொள்ள வேண்டும்?

திருவள்ளுவர் இன்னும் ஒருபடி மேலே போகிறார். இறைவனை வணங்காத தலை பயன் இல்லாத தலை என்கிறார். ஆனால் அதற்கு உவமை சொல்லும் போதுதான் அவருடைய குறிப்புப் புலனாகிறது.

"கோள்இல் பொறியிற் குணம்இலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்கிறார். காது கேட்காவிட்டால் அது காது ஆகாது. கண் பார்வையின்றிக் கண்மணி முதலியவற்றுடன் இருந்தால் அது கண் ஆகாது. தோல் பரிச உணர்ச்சியை இழந்தால் அது தோல் ஆகாது. சுவையை இழந்த நாக்கு

நாக்கு ஆகாது. மணம் அறியா மூக்கு மூக்கு ஆகாது; ஐந்து இந்திரியங்களும் தமக்குரிய வடிவை உடையனவாக இருந்தாலும் உணர வேண்டியவற்றை உணராமல் இருந்தால் அவை இந்திரியங்கள் ஆகா. பொதுவாகக் கோள் இல் பொறி என்று சொன்னாலும், பொறி என்பது பால் பகா அஃறிணைப் பெயராதலின் ஐம்பொறிகளையுமே கொள்ள வேண்டும்; மனிதர்களில் ஒரு பொறி இல்லாதவர்களும், இரண்டு பொறி இல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஐம்பொறிகளும் தொழிற்படாதவர் யாரும் இல்லை. ஐம்பொறிகள் வடிவுடன் இருந்தும் ஞானேந்திரியங்களாகிய அவை உணராமல் இருக்கும் நிலை உயிருடன் உள்ள மக்களிடம் இல்லை. பிணத்துக்குத்தான் ஐந்து பொறிகள் தோற்றம் அளித்தாலும் அவை தமக்குரிய நுகர்ச்சியை இழந்து வாளா இருக்கும். ஆதலின் கோளில் பொறி என்பதற்கு, பிணத்தினிடம் உள்ள பொறிகள் என்று பொருள் செய்வது நயமாக இருக்கும். அவற்றை உவமையாக்குவதால் தலையையும் பிணத்தின் தலை என்று கொள்ள வேண்டும். 'இறைவனை வணங்காத தலை பிணத்தின் தலை' என்பதையே குறிப்பாக அருளினார் திருவள்ளுவ தேவர். கடவுளை வணங்காதவர்கள் பிணம், விலங்கு, சீதேவி சேராதவர்கள் என்று பெரியோர்கள் சொன்னதாகவே நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால்தான் தமிழ் நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் கோயில் இருக்கிறது, ''கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்'' என்று பழமொழி எழுந்தது. ''ஊரான் ஓர் தேவ குலம்'' என்று இலக்கண உரைகாரர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள்.

நாகரிகம் என்பது நகரம், நகர் என்பதிலிருந்து உண்டான சொல். நகர் என்பது பழங்காலத் தமிழ் நூல்களில் திருக்கோயிலைக் குறித்து நிற்கும். ''முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே'', ''பூமுடி நாகர் நகர்'' என்று சங்க நூல்களில் வரும் பகுதிகள் இதைத் தெளிவிக்கும். தமிழ் நாட்டு வாழ்க்கை திருக்கோயிலைச் சுற்றியே வளர்ந்தது.

நகராகிய கோயிலை மையமாக வைத்துப் பேரூரும் சிற்றூரும் வளர்ந்தன. நகரைச் சார்ந்து வளர்ந்த வாழ்க்கையை நாகரிக வாழ்க்கை என்றனர்.

இவ்வாறு கோயிலுக்குத் தலைமை அளித்து வாழ்ந்த தமிழ் மக்கள் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டார்கள். முடியணிந்த மன்னனும் சென்று வலம் வந்து வணங்கினன். குடிமக்களும் சென்று வழிபட்டார்கள். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்த வந்த காரிகிழார் என்ற புலவர் ''நின் குடை மடங்கட்டும்'' என்று வாழ்த்துகிறார். ''குடை உலகெல்லாம் விரிந்து படரட்டும்'' என்று சொல்வதுதான் மன்னனுக்கு ஏற்ற வாழ்த்து. குடை, ஆட்சியின் அடையாளம். ''உன் ஆட்சி எங்கும் பரவட்டும்'' என்பதையே உருவக வகையால் அப்படி வாழ்த்துவது வழக்கம். காரிகிழாரோ நேர்மாறாக, ''உன் குடை மடங்கட்டும்'' என்றார். ஏன்? எங்கே மடங்க வேண்டும் என்பதை அவர் சொல்லும் போதுதான் நமக்கு உண்மை விளங்குகிறது.

''பணியியர் அத்தைநின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே''

என்று அவர் கூறுகிறார். 'முக்கட் செல்வரும் தவக்கோலம் உடையவருமாகிய சிவபெருமான் திருக்கோயிலை வலம் வரும்போது உன் குடை பணியட்டும்; மடங்கட்டும்' என்று சொல்கிறார். உலகத்துக்கே அரசனானாலும் சிவராசாவுக்கு முன் அவன் பணியவேண்டும். அவன் பதவிக்கு அங்கே பெருமை இல்லை. அதைக் காட்டும் குடையும் பணிய வேண்டும். உலகை ஆளும் கோன், இறைவன் திருக்கோயிலுக்குச் சென்று வலம் வந்து பணிந்தான் என்பதை இந்தப் புறநானூற்றுச் செய்யுள் புலப்படுத்துகிறது.

கலித்தொகையில் ஒரு காட்சி சில பாடல்களில் வருகிறது. மலையில் வாழும் தலைவி தன் சிறிய மகனைத் தன் தோழியிடம் விட்டு, ''இவனைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று வலம் வந்து வணங்கச் செய்து விட்டு அழைத்து

வா'' என்கிறாள். தோழி அவ்வாறே அழைத்துச் செல்லும் போது அந்தக் குழந்தையை, அவன் தந்தையின் அன்பைப் பெற்ற பரத்தை காண்கிறாள். அவனைத் தழுவிக் கொஞ்சி, ''நானும் உன் தாய்தான்'' என்று சொல்கிறாள். அவள் அந்தக் குழந்தையைக் கொஞ்சிப் பாராட்டுவதனால் சிறிது நேரம் ஆகிறது. கோயிலுக்குப் போன குழந்தை இன்னும் வரவில்லையே என்ற கவலையோடு வீட்டில் தாய் எதிர்பார்த்திருக்கிறாள். அவர்கள் வீட்டை அடைந்தபோது, ''ஏன் இவ்வளவு தாமதம்?'' என்று கேட்கிறாள். தோழி நிகழ்ந்ததைச் சொல்கிறாள். மருதக்கலியில் இந்தச் செய்தி இரண்டு பாடல்களில் வருகிறது. இதனால் குடிமக்கள் இளமைப் பருவத்திலேயே திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்பதும், தாய்மார்கள் தம் குழந்தைகள் இறைவனை வழிபட வேண்டும் என்று எண்ணி அந்தப் பழக்கத்தை உண்டாக்கினார்கள் என்பதும் தெரிய வருகின்றன.

பல்லவர்களும் சோழர்களும் பாண்டிய மன்னர்களும் நாயக்க மன்னர்களும் திருக்கோயில்களை விரிவாகக் கட்டி வைத்தார்கள். அரண்மனைகளைப் பெரியவையாகக் கட்டிக் கொள்ளாமல் அரன் மனைகளாகிய கோயில்களைக் கட்டினார்கள். குடிகளுக்குக் கடவுளுணர்ச்சி பெருகுவதற்கு வழி கோயிலைச் சிறப்புற அமைத்தல் என்பதை அறிந்தே அவ்வாறு செய்தார்கள். திருக்கோயில்களைக் கட்டி மூர்த்திகளை நிறுவியதோடு அமையாமல், அந்தக் கோயில்களில் நித்தியமாகிய பூசையும், நைமித்திகமாகிய விழாக்களும் நடத்தச் செய்தார்கள். அவ்வாறு நிகழ்த்துவதற்கு வேண்டிய நிவந்தங்களை வழங்கினார்கள்.

சங்க நூல்களிலேயே விழாக்களைப் பற்றிய செய்திகள் வருகின்றன. ஒவ்வோர் ஊரிலும் இறைவன் திருக்கோயில் இருந்தால் விழாக்களும் நடந்திருக்க வேண்டும் அல்லவா?

''ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்''

என்று திருமுருகாற்றுப்படை சொல்கிறது. விழாவைச்

சீர்கெழு விழவு என்பதை நோக்க வேண்டும். சீர்-சிறப்பு. விழாவுக்கே சிறப்பென்பது ஒரு பெயர்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

என்ற திருக்குறளில் நைமித்திகமாகிய விழாவைச் சிறப் பென்றும், நித்தியமாகிய பூசையைப் பூசனை என்றும் குறிக்கிறார் திருவள்ளுவர்.

இறைவனுடைய திருவிழாவைக் காணுதல் பெரும் புண்ணியம். விழாக்கள் பல வகை. பட்ச விழா, மாத விழா, ஆண்டு விழா என்று அவை பல வகைப்படும். சில விழாக்களில் குறிப்பிட்ட மூர்த்தியே உலா வருவார். திருவாதிரைக்கு நடராஜா வருவர்; பிரதோஷத்தில் பிரதோஷ விநாயகர் எழுந்தருளுவார்; மூல மூர்த்தி ஒரு வராக இருந்தாலும் உற்சவ மூர்த்திகள் பலராக இருப்பர். திருக்கோயிலுக்கு வராதவர்களுக்கும் அருள் செய்ய அவர்கள் வீட்டு வாயிலுக்குச் சென்று அவர்களை ஈர்த்து வழிபடச் செய்யும் கருணையை விழா ஊர்வலம் காட்டும்.

"நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல்"

என்பது திருவிசைப்பா.

மதுரைக் காஞ்சியில் ஏழுநாள் ஒரு விழா நடந்ததை யும் ஏழாவது நாள் தீர்த்தவாரி நிகழ்ந்ததையும் மாங்குடி மருதனார் சொல்கிறார்.

"கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி"

பலவகை விழாக்களிலும் மிகச் சிறந்த விழா திருத்தேர் விழா. அதைப் பிரம்மோற்சவம் என்பார்கள். அந்த விழாவை ஜனநாயக விழா என்று சொல்ல வேண்டும். பழங்காலத்தில் திருக்கோயிலுக்குள் செல்லாதவர்கள் சிலர் இருந்தார்கள். சென்றாலும் கருப்பக் கிருகத்திற்குள் புக முடியாதவர்கள் பலர். திருத்தேர் விழாவிலோ யாவரும் சேர்ந்து வடந்தொட்டு இழுக்கலாம். நூற்றுக்கணக்கான

மக்கள் தேர் வடத்தைத் தொட்டு இழுத்து, ''நாமும் தேர் இழுத்தோம்'' என்று மன ஆறுதல் பெறலாம்.

சிவாலயங்களில் திருத்தேரில் எழுந்தருள்பவர் சோமாஸ்கந்தமூர்த்தி. இறைவன், இறைவி, இடையே முருகன் ஆகிய மூவரும் ஒரு மூர்த்தியாகக் காட்சியளிக்கும் திருக்கோலம் அது. உமையும் ஸ்கந்தனும் சேர்ந்து பொருந்திய திருவுருவம் உடையவர் என்பது அந்தத் திரு நாமத்துக்குப் பொருள். இறைவன் குடும்பம் உடையவனாக எழுந்தருளுகிறான். குடும்பத்தோடு வாழும் மக்களுக்கு அருளைப் பொழியவும் யாவரும் பெண் பிள்ளைகளுடன் நன்னெறியில் வாழ வேண்டும் என்பதைப் புலப்படுத்தவும் அவன் 'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கின'னாக எழுந் தருளுகிறான். அருளைத் தன்னிடத்தே அடக்கிக் கொண்ட சிவபெருமான் அதனை வெளிப்படுத்துகிறான்; அந்த அருளே உமை வடிவில் ஒளிர்கிறது; அது பின்னும் விரிந்து குழந்தை வடிவில் பாய்கிறது. அந்தக் குழந்தையே முருகன். ஆகவே மரம் பூத்துக் கனி குலுங்க நிற்பது போல அருளின் முழுப்பயனும் அடைய வைக்கும் திருக்கோலம் சோமாஸ் கந்த மூர்த்தி. எல்லோருக்கும் வரையறையின்றி அருள் பொழியும் விழா, திருத்தேர்விழா.

## 2

ஈழநாட்டில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பல. முருகனை வேலில் ஆவாகனம் செய்து அதனையே முருகனாக வழிபடும் முறை தமிழ்நாட்டில் பழங் காலத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது.

''உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம்''

என்ற சிலப்பதிகார அடியில் வரும் வேற்கோட்டம் வேலை நிறுவி முருகனாக வழிபடும் திருக்கோயிலைச் சொல்கிறது. ஆனால் இன்று அந்த வழக்கம் ஈழநாட்டில்தான் இருந்து வருகிறது. செல்வச்சந்நிதி, உரும்பராய், நல்லூர் முதலிய இடங்களில் வேற்கோட்டத்தைப் பார்க்கிறோம்; அவ்வாறு

வேற்கோட்டம் அமைந்த நல்லூர் யாழ்ப்பாண நகரத்துக்கு அணிமையில் இருப்பதனால் நகரமக்களின் அபிமான ஸ்தலமாக விளங்குகிறது. ஐந்தாம் சமயக் குரவர் என்ற சிறப்பையுடைய சிவத்திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் திருவவதாரம் செய்த நகர் அது. அங்கே எழுந்தருளியுள்ள செவ்வேளுக்குப் பல்வகை விழாக்கள் நடைபெறுகின்றன. திருத்தேர்விழா ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் மிகச் சிறப்பாக நிகழ்கிறது. மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு வந்து தரிசித்து நலம் பெறுகிறார்கள். அன்னதானம் முதலிய அறங்களைச் செய்யும் காலமாக அது விளங்குகிறது. பல்வகைப் பண்டங்களை விற்றுப் பொருள் ஈட்டவும் அவ்விழா வணிகர்களுக்கு வாய்ப்பை அளிக்கிறது. காதலர்களும் இல்வாழ்வாரும் வந்து தரிசித்து மனம் ஒன்றி இன்புற்று வாழும் அருளைப் பெறுகிறார்கள். முருகனுடைய திருக்கோலம் கண்டு மனம் உருகிக் கண்ணீர் வார நின்று, வடந்தொட்டு இழுத்து உடலம் புளகம் போர்ப்ப இறைவன் திருவருள் நலத்திலே கரைந்து வீட்டு நெறியிலே செல்லும் பக்தர்கள் பலரை அங்கே காணலாம். இவ்வாறு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் வளர்க்கும் பெருவிழாவாகவும் அது அமைகிறது. தேரோட்டமும் தீர்த்தமும் மக்களின் கண்ணையும் கருத்தையும் மேனியையும் தூய்மை செய்கின்றன. மக்கள் சாதி, இனம், செல்வநிலை, பிராயம், பால் ஆகிய வேறுபாடுகளை மறந்து யாவரும் முருகப் பெருமான் நினைவு மயமாக ஒன்று படுகிறார்கள். வறண்டிருந்த ஆற்றிலே மணற்பரப்பிலே குழி இருக்கும்; மேடு இருக்கும். கல் இருக்கும்; முள் இருக்கும். மலர் விழுந்திருக்கும்; அழுக்குப் பொருள்களும் இருக்கும். ஆனால் ஆற்றில் நீர் வந்து விட்டால் குழியோ மேடோ தெரியா. எல்லா வேறுபாடுகளும் மறைந்து போக ஒரே சமநிலையில் நீர் இருக்கும். இந்த விழாவில் பக்தி வெள்ளம் பாய்ந்து, மற்ற நேரங்களில் மனிதர்களுக்கிடையே காணப்படும் வேற்றுமைகள் எல்லாம் மறைய, எங்கும் எவரும் ஆண்டவனுடைய அருள் நினைவோடே நிற்கிறார்கள். இந்த அற்புதத்தை வேறு எங்கே காண முடியும்?

சில ஆண்டுகளாக விழாவுக்கு வர இயலாத மக்களுக்கும் இங்கே நிகழும் நிகழ்ச்சிகளை அகக் கண்ணால் கண்டு களிக்கும் வகையில் நேர்முக வருணனையைத் தக்கவர்களைக் கொண்டு செய்வித்து நலம்புரிகிறது இலங்கை வானொலி நிலையம். என்னுடைய உழுவலன்பர் திரு. தனபாலசிங்கன் இந்த நேர்முக வருணனையைச் சில ஆண்டுகள் நிகழ்த்தியிருக்கிறார். முருகனிடத்தில் முறுகிய அன்பும், தமிழ் நூல்களையும் தத்துவ நூல்களையும் அறிந்த அறிவும், பிறருக்குத் தெளிவாக விளங்கும் வண்ணம் எடுத்துச் சொல்லும் ஆற்றலும் உடைய அவர் நேர்முக வருணனையை நிகழ்த்தும் போது கேட்டுக் கிளுகிளுத்தவர் பலர். திருவிழாவுக்கு வந்து தரிசித்தவர்களை விட நேர்முக வருணனையைக் கேட்டு மகிழ்ந்தவர்கள் பன்மடங்கு அதிகமானவர்கள். அப்படிக் கேட்டவர்களிற் பலர், ''அடுத்த ஆண்டு இந்த விழாவுக்கு நாமும் போய்த் தரிசிக்க வேண்டும்'' என்ற ஆவலைக் கொள்வது இயல்பு.

நேர்முக வருணனையாகப் பேசிய அனைத்தும் அப்போது மாத்திரம் கேட்கும்படி அமைந்து, பிறகு காற்றோடு கலந்துவிடும். அதை எப்போதும் யாவரும் அறிய வேண்டும் என்ற எண்ணத்தால், அந்த வருணனையை எழுதிச் செப்பம் செய்து புத்தக வடிவில் தருகிறார் அன்பர் திரு. தனபாலசிங்கன்.

தேர் விழாவில் நிகழும் பல செயல்களை விரிவாகச் சொல்கிறார். அவற்றால் புலனாகும் கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார். தேர் விழாவின் உட்கருத்தையும், தேரின் உறுப்புக்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பதையும், அப்போது நடைபெறும் கிரியைகள் எவற்றைப் புலப்படுத்துகின்றன என்பதையும் தெளிவாக்குகிறார். அவற்றைப் படித்தால், இந்த விழா வெறும் கோலாகலக் காட்சி அன்று என்பதும், ஆன்மாவைப் பரிசுத்தமாக்கி இறைவன் அருளைப் பெறுவதற்கு வழிகாட்டும் நிகழ்ச்சி என்பதும் தெரிய வரும். அடுத்தபடி ஆறுமுக தத்துவத்தை விளக்கு

கிறார் ஆறுமுகத்துக்குரிய பல பொருள்களைச் சொல்கிறார்; அவற்றின் செயல்களை மேற்கோளுடன் விளக்குகிறார்.

அர்ச்சனை செய்தல், தேங்காய் உடைத்தல், பச்சை சாத்துதல் ஆகியவற்றின் உட்பொருளை விளக்குகிறார். முருகன் அழகை வருணிக்கிறார். நல்லூரில் எழுந்தருளி யிருக்கும் பழனியாண்டவன் வரலாற்றையும், வேற்பெரு மான் பெருமையையும், அங்குள்ள பிள்ளையாரையும் நமக் குக் காட்டுகிறார். நாவலர் பெருமான் கந்தபுராணப் படனம் செய்ததை நினைப்பூட்டுகிறார். அடியார்களின் பரவச நிலையை விரித்துரைக்கிறார்.

தீர்த்தோற்சவ வருணனை தனியே இருக்கிறது. சண் முகதீர்த்தத்துக்குப் பிள்ளையார், முருகன், அஸ்திரதேவர் எழுந்தருள்வதும், அஸ்திரதேவர் திருமஞ்சனம் ஆடும் போது யாவரும் நீர் ஆடுவதும், வானொலியாளர் கூட நீராடுவதும் அங்கே வருகின்றன. ஒலி பரப்பும் கருவி கூட நீராடித் தூய்மை பெறுகிறதாம்!

இது ஏதோ ஒரு தலத்தில் நிகழும் நிகழ்ச்சியை வரு ணிக்கும் வெறும் வருணனை அன்று. திருத்தேரின் தத்து வத்தையும் முருகப்பெருமானுடைய சிறப்பையும் அன்பர் களின் பக்தி உணர்ச்சியையும் கருத்துத் தெளிவோடு எடுத்துக் காட்டும் பயனுள்ள நூல் இது. தம்முடைய கருத்துக்கு அரண் செய்ய அங்கங்கே கந்தபுராணப் பாடல் களை எடுத்துக் காட்டுகிறார். தேவார திருவாசகப் பாடல் கள் வருகின்றன. யோகசுவாமிகளின் திருவாக்கும் இடை யே ஒலிக்கின்றது. திருமுருகாற்றுப்படையும் கந்தர் கலி வெண்பாவும் துணை செய்கின்றன. சமயக் கருத்துக்களை இலக்கியச் சுவையோடு விளக்கும் இந்த நூலைப் படித்து விட்டு நல்லூர்த் திருத்தேர்விழாவைக் கண்டால் ஒவ்வொரு காட்சியையும் கூர்ந்து அவதானித்து இன்புற முடியும். முன்பு தரிசித்தவர்கள் படித்தால் தாம் கண்டவற்றை நினைப்பூட்டிக் கொள்ளலாம்.

நல்லூருக்கு வரமுடியாதவர்கள் படித்தால் வந்து கண்டது போன்ற உணர்வைப் பெறலாம். முருகன் சம்பந்தமான பல அரிய கருத்துக்களை உணரலாம். பல சமய உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. தனபாலசிங்கனுக்கு இலக்கிய உலகமும் சமய உலகமும் இந்தப் புத்தகத்தை உருவாக்கித் தந்ததற்காக நன்றி பாராட்ட வேண்டும்.

வாழ்க அவர் திறமை; வளர்க அவர் எழுத்தாற்றல்;

வெல்க அவர் முயற்சிகள்!

கி. வா. ஜகந்நாதன்
5-1-76

உ

# வாழ்த்து

## திரு. கி. வா. ஜகந்நாதன்

நல்லைநகர்ச் செவ்வேள் விழாவின் நலங்களெலாம்
வல்லபடி வானொலியில் வன்னித்தான்—சொல்வளமும்
தண்டமிழி னிற்புலமை தானும் உடையன்நேர்
கண்டதன பாலசிங் கன்.

தேர்விழவின் தத்துவமும் தெய்வத் திருக்கோயில்
ஏர்மலியும் தத்துவமும் இன்னவென—ஆர்படித்துப்
பார்த்தாலும் நற்பயனைக் கொள்ளப் பதிப்பித்தான்
நேர்த்தியுடன் இந்நூல் நினைந்து.

தெளிவாகக் கற்றுத் தெளிவாகச் சிந்தித்
தெளிதினிலே யாரும்அறிந் தின்ப—ஒளிபெறவே
செய்யும் சுகுணன் தனபால சிங்கனலம்
பெய்ய வளர்க பெரிது.

நால்வர் தமிழாய்ந்து ஞானநூ லாராய்ந்து
சால்பு மிகுந்து தழைக்கின்ற—நூல்பெரிதும்
கற்ற தனபால சிங்கன் கவினலங்கள்
பெற்று மிகஉயர்க பேர்.

மதுரைப் பல்கலைக்கழகம்

முன்னாள் துணைவேந்தர்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

அளிக்கும்

# அணிந்துரை

முருகன் தமிழ்க்கடவுள்; தமிழர் கடவுள். சிவனைக் கூறாத தொல்காப்பியர் சேயோனாகிய முருகனையே கூறுகிறார். சிவனும் முருகனாகவே தமிழருக்குக் காட்சி அளிக்கின்றான். ''உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறும் பெருமாளே'' என அருணகிரிநாதர் பாடுவது போல், கடவுள் எங்கே எங்கே எவர் எவர் வழிபட்டாலும் அக் கடவுள் தமிழ் முருகனே ஆம். தமிழ்தான் முருகன் எனலாம்.

தொல்காப்பியம் கூறுவது மட்டுமா? சங்க இலக்கியம் முருகனையும் முருக வழிபாட்டையும் குறிக்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகனிடம் நம்மைக் கொண்டு செல்வது. இது பத்துப்பாட்டில் முதற்பாட்டு. பரிபாடல்களில் முருகனை வழிபடும் பாடல்கள் வருகின்றன. பின்னே வந்தவர் என்று கொள்ளப்பட்டாலும் பாரதம் பாடிய பெருந்தேவனார் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்தை முருகன் பாட்டாகவே பாடியுள்ளார். சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகள் தமிழர்க்கு இயல்பான சமரச நோக்கோடு சேயோன் மேய மைவரை உலகத்து வாழும் குன்றக் குறத்திப் பெண்கள் போலவே அன்போடு அகம் நெக்கு உருகி முருகனைப் பாடும் குன்றக் குரவையைப் பாடியாடுகின்றார்.

பின்னே பக்தி யுகம் பிறந்த போது நாயன்மார்களும் ஆழ்வார்களும் முருகனைத் தம் பாடல்களில் குறிக்

கின்றார்கள். சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் முருகனைக் குறிப்பதோடு விட்டு விடாது நேர்முகமாக்கிப் பாடும் பாடல்களும் உண்டு. பதினொராம் திருமுறையில் திருமுருகாற்றுப்படை இடம் பெற்றுள்ளது. ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவில் முருகனைப் பற்றிய இசைப்பாக்களும் உள்ளன. பெரிய புராணத்தில் முருக நாயனார் என உயர் குலத்து நாயனாரும் வருவதால் முருகன் என்ற பெயரைச் சிறந்த பெயராக மக்களுக்கு இடுவதும் பெரு வழக்காக இருந்தது என அறியலாம்.

மெய்ஞ்ஞான ஆராய்ச்சி சங்கரர் வழியும் இராமானுசர் வழியும் மெய்கண்டார் வழியும் பரவிய பின்னர், சகலாகம பண்டிதர்கள் கோயில் வழிபாட்டை ஆகம வழியே வரையறுத்த பின்னர் முருகனை வழிபடும் கோயில் முறையும் அவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் கௌமார சமயமும் நிலைபெற்றன. பதினொராம் நூற்றாண்டுக்குப் பிற்படாத இளம்பூரணர் குமரக் கோட்டம் என்ற சொல்லை மேற்கோள் காட்டுவதால் முருகன் கோயில்கள் காஞ்சி முதலிய இடங்களில் எழுந்து பெயர் பெற்று இருத்தல் வேண்டும். அதற்கு முன், முருகனைப் பழங்காலத்தில் அவனுடைய ஞானசக்தியாம் சிறந்த அடையாளமான வேலைக் கருவறையில் வைத்துக் கோயில் கட்டி வழிபட்டு வந்தார்கள். சிலப்பதிகாரம் வேற்கோட்டம் என்று சுட்டுவதால் இந்தப் பழமை விளங்கும். பின் முருகனின் பல கோலங்களைக் கருவறையில் வைத்து வழிபடும் கோயில்களும் உண்டாயின. சிவனை வழிபடுவோர் சிவனார் திருமகன் முருகன் எனக் கொண்டு முருகன் கோயிலையும் சிவன் கோயிலின் உட்கோயிலாகக் கட்டி வணங்கி வந்தார்கள்.

வடமொழியிலும் கந்தபுராணம் உண்டு. முருகனுடைய வரலாறு பரிபாடலில் வேறுவகையாக வருகிறது. காளிதாசனது குமாரசம்பவமும் முருகன் வரலாறு கூறுவதேஆம். இவற்றைத் தழுவிக் கச்சியப்பர் 14 ஆம் நூற்றாண்டில் கந்தபுராணத்தை விரிவாகப் பாடி முருக வழி

பாட்டைத் தத்துவப் பெருவழிபாடாக நிலை நாட்டினார். இதன் அழகைக் கண்டவர்கள் சில பகுதிகளை வடமொழியில் மொழி பெயர்த்து ஸ்காந்த புராணத்தில் சேர்த்து அப்புராணத்தை மிகப் பெரிதாக்கி உள்ளார்கள் என்று கருத இடமுண்டு. முருகனுக்கு எனவே மிகப் பெரிய புராணமும் தமிழில் கிடைத்து விட்டது அல்லவா? இதனைச் சுருக்கித் தருமபுரத்துச் சம்பந்த சரணாலயர் பாடியுள்ளார்.

கச்சியப்பரை அடுத்து அருணகிரிநாதர் கோயில்கள் தோறும் சென்று தேவாரம் பாடிய மூவர்களைப் போன்று முருகனைத் திருப்புகழ் என்ற பெயரில் தாம் வளர்த்த இசைத் தமிழாம் திருப்புகழ் பாடி முருக வழிபாட்டைப் பொது மக்கள் வழிபாடாக இனிக்கச் செய்தார். அவர் பாடிய கந்தர் அனுபூதியும் கந்தர் அலங்காரமும் அழகும் ஆழமும் இனிமையும் இறைமையும் வாய்ந்தன. திருவகுப்பு ஒன்றும் கந்தர் அந்தாதி ஒன்றும் பாடினார். ஆனால் மற்றவையே எல்லோரும் பாடி மகிழ்பவை. ஞானியாராகிய சிற்றம்பலநாடிகள் அருளிய திருச்செந்தூர் அகவல் அறிவும் அன்பும் ஊறுவது.

பின் எழுந்த விரிவான நூல்களும் புராணங்களும் முருகன் வணக்கம் கூறத் தவறவில்லை. பலவகைப் பிரபந்தங்களும் முருகன் மேல் தோன்றின. சிவப்பிரகாசரது திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி, குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா முதலியன தலைசிறந்தன. பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தமே மனத்தை உருக்குவதாக உள்ளது. வரலாற்று முறையே, அந்தகக்கவி வீரராகவமுதலியார் பாடிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், குமரகுருபரர் மிக மிக உருக்கமாகவும் இலக்கிய நயம் ததும்புவதாகவும் பாடிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தர் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், மார்க்கசகாயரது திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், பின்வந்த திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் முதலியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சிவப்பிரகாசரின் மைத்துனராகிய சாந்தலிங்கத்தின் சீடரான குமாரதேவரின் ஞானப் புதல்வரான சிதம்பர சுவாமிகள் நிட்டை கூடி நீண்ட அநுபவத்தை முருகப் பேரின்பமாகவே திருப்போரூர்ச் சந்நிதிமுறை என்ற புது நூல் வழியே பாடியுள்ளார். தத்துவப் பேராழம் இருந்தாலும் எல்லோரும் இனிதே பாடி ஆண்டவனிடம் முறையிட்டு அருள் பெறும் வகையில் இதில் வரும் பிரபந்தங்கள் அமைந்துள்ளன. இதனை ஒட்டி விசாகப் பெருமாள் ஐயரின் தந்தையாரான கந்தப்பையர் திருத்தணிகைச் சந்நிதி முறை பாடி ஆண்டவன் திருவருள் பெற்றார்.

கந்தப்பையர் திருத்தணிகை முருகனிடம் ஈடுபட்டதற்குக் காரணம் சிவஞான சுவாமிகளின் மாணவரான கச்சியப்ப முனிவர் திருத்தணிகை முருகனைப் பற்றிய திருத்தணிகைப் புராணம் பாடியதே எனலாம். இந்தப் புராணம் சங்கப்பாக்களின் எதிரொலியாகவும் தொல்காப்பியத்தின் விளக்கமாகவும் சைவசித்தாந்தத்தின் வழிகாட்டியாகவும் ஆகமத் திறவு கோலாகவும் சிறந்த தமிழிலக்கியமாகவும் விளங்குவதோடு முருகனிடத்து இடையறாத அன்புச்சுடரை ஏற்றி வைக்கும் கைவிளக்காகவும் சிறந்து ஓங்குகின்றது. தேவராயர் பாடிய கந்தசட்டிக் கவசம் ஆறுபடை வீடுகளைச் சுட்டிப் பாடுகிறது. அதனைப் பலரும் பாராயணம் செய்து வருகின்றனர்.

பல பிரபந்தங்கள் முருகன் மீது இடைவிடாது வரத் தொடங்கின என்றாலும் அவற்றில் எல்லாம் சிறந்தது நாட்டுப்புறப்பாடல் வகையில் காவடி எடுத்து ஆடுவாரது தாளம் பிறழாத பலவகை ஆட்டங்களுக்கேற்ற காவடிச்சிந்து என்ற புதுவகையான இசைப்பாடல் முறையில் முருகன் மேல் அண்ணாமலைரெட்டியார் பாடிய காவடிச் சிந்து நூலேயாகும்.

திருவருட்பிரகாச வள்ளலார் திருவருட்பாவில் திருத்தணிகை முருகன் மீதும் சென்னை கந்தக் கோட்டத்தின் மீதும் பாடிய பாடல்கள் கல்நெஞ்சையும் உருக்குவன;

பெருவழக்கில் உள்ளவை. கீர்த்தனை முதலிய இசைப் பாடல்களையும் அகப்பொருள் சுவை ததும்புவனவாயும் பேரின்பப்பொருள் தோன்றுவனவாகவும் அவர் பாடியுள்ளார்.

இந்த நூற்றாண்டில் முருக பக்தராகிய தண்டபாணி சுவாமிகள் பாடிய பாடல்கள் பல. பாம்பன் சுவாமிகள் முருகனைப் பற்றி 6666 பாடல்கள் பாடியுள்ளார். குமார சுவாமியம் எனக் கந்தபுராணத்தைத் தூயமுறையில் அமைத்துள்ளார். அவருடைய சண்முக கவசத்தைப் பலர் பாராயணம் செய்து வருகின்றார்கள்.

தேசியகவி சுப்பிரமணியபாரதியார் புதியநாட்டுச் சுவை ததும்ப வீரக்குரலில் ''வேல் வேல் சக்திவேல்'' என்று பாடியுள்ள பாடல் இன்றும் நமக்கு வீரத்தை ஊட்டுகிறது. அவர் வழிவரும் பெரியசாமித்தூரன் இசைப்பாடல்களாகவும் கி. வா. ஜகந்நாதன் போன்றோர் இயற்பாடல்களாகவும் பாடி முருகன் பாடற் றுறை ஆற்றை ஆழமாக்கி வருகின்றார்கள்.

கந்தபுராணப் பண்பாடு யாழ்ப்பாணத்தில் இன்று நிலைநிற்கின்றதென்றால் அதனை வளர்த்திட்ட பெருமை நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களையே சாரும். கந்த புராணத்தை வசனரூபமாகத் தொடங்கியும் மூலத்தைப் பதிப்பித்தும் அவர் ஆற்றிய தொண்டு மிகமிகப் பெரிது. கந்தபுராண நவநீதம் என்ற நூலை காசிவாசி ஸ்ரீ சி. செந்திநாதையர் திறம்பட எழுதியுள்ளார். யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்துக்கு நல்ல உரை எழுதி இருக்கிறார்கள். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கந்தபுராணம் தக்ஷகாண்டத்துக்கு அருமையான உரை எழுதிப் பரிசு பெற்றிருக்கிறார். இன்னும் பலர் யாழ்ப்பாணத்திலே கந்த புராணப் பெருங் கடலில் இறங்கிப் பல முத்துக்களை எடுத்துத் தந்திருக்கிறார்கள். அவை எல்லாம் விரிக்கிற் பெருகும்.

நண்பர் தனபாலசிங்கனார் வற்றாத இந்த முருகப் பேராற்று இலக்கியத்தில் குளித்துத் திளைத்து அவையே ஆகிப் பாடியும் பேசியும் எழுதியும் மகிழ்பவர். அவர் ஈழநாட்டு நல்லறிஞர்; செந்தமிழ் அருட் செல்வர். ஈழ நாட்டுத் தமிழில் சில இடங்களில் பழமை மணம் நிலை நின்று மணக்கும் கந்தபுராணம் தமிழ் நாட்டில் எழுந்த புராணமே ஆனாலும் அதனை இடைவிடாது பாராயணம் செய்யும் பழக்கம் பரவியுள்ளது - பரவி நின்றது ஈழநாட்டில்தான். எனவே, கந்தபுராணத்தில் தம் உள்ளத்தை இழந்து அதன் கதை அழகிலும் தத்துவ ஆழத்திலும் ஈடுபட்டுக் கந்தபுராணச் சிந்தனைகள் என்ற ஏற்றம் மிக்க நூலை நாட்டுக்கு அளித்துத் தனபாலசிங்கனார் உயர்ந்தார்.

ஈழநாட்டில் மற்றொரு பழமையான மணமும் வீசும். பழங்காலத்தில் முருகன் கோயில் வேற்கோட்டமாகவே விளங்கியது எனச் சிலப்பதிகாரத்தின் வழியே அறிந்தோம். அந்தப் பழைய வேற்கோட்டத்தை ஈழத்தில்தான் பெருங் கோயிலாகக் காண முடிகின்றது; நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அத்தகைய வேற்கோட்டமே.

அந்தக் கோயில் பல சிறப்புக்களை உடையது. அது வீற்றிருக்கும் ஊரின் பெயரே மிகப் பொருத்தம் உடையது. முருகப்பெரியோன் பழைய வேற்கோட்டத்தில் வீற்றிருக்கும் ஊர் நல்ல நல்லூர். ''நன்று பெரிதாகும்'' என்றபடி பெரியதற்கெல்லாம் பெரியதாகி சுப்பிரஹ்மணியம் வீற்றிருக்கும் நல்லூர் பழம் பெருமை மட்டுமா? தமிழையும் சைவத்தையும் ஈழத்தில் நிலைநாட்டி தமிழ் நாட்டிலும் அச்சு வகையாகவும் பேச்சு வகையாகவும் உரை நடை வகையாகவும் வளர்த்த ஆறுமுகநாவலர் பெருமான் பிறந்த ஊரும் அந்த நல்லூர்தானே!

அவர் போற்றிய கோயிலும் அங்குள்ள கந்தசுவாமி கோயில்தானே! இந்தக் கோயில் இன்றும் ஈழநாட்டுத் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது; கோயிலுக்குப் போக முடியாதவர்கள் - போகாதவர்கள்

இவர்களையும் தடுத்தாட்கொள்ள அவர்கள் வீடு தோறும் எழுந்தருளுவது போலத் திருவிழா உலா வருகின்ருன் கந்தசுவாமி. அத்திருவிழாவில் தேர்த் திருவிழாவே மிகச் சிறந்தது; திருக்கோயிலே நம்முன் வருவது போல் தோன்று கிறது அல்லவா? அத்திருவிழாவன்று நாடே அவ்வூருக்குள் திரண்டு வரும். தேங்காய்கள் மலை போலத் திரளும். இந்த மக்களைக் கண்ட ஆண்டவன் அவர்களை விட்டுப் பிரியாத வன் போல அங்கங்கே நின்றும் பின் பைய இயங்கியும் செல்வான்.

இந்தப் பெருங் கூட்டத்தைக் கண்ட இலங்கை வானொலி நிலையம் வாராதவர்களும் இதுபற்றி அறியத் துடிதுடிப்பது அறிந்து அந்தத் தேர்த் திருவிழாவின் நேர்முக வர்ண னையை அளிக்க ஆண்டு தோறும் ஏற்பாடு செய்கின்றது. அதற்கு யாரைத் தேர்ந்தெடுக்கலாம்! நல்லூர் நாவலர் வளர்த்த தமிழிலும் சைவத்திலும் பேரன்போடு திளைத்து, நூல் பல இயற்றி, முருகனை வழிபடுவதிலும் சிறந்து, முருக இலக்கியத்தின் வடிவேயாய தனபாலசிங்கனுரையும் தேர்ந்தெடுக்கும்படி கந்தசாமியே வானொலி நிலையத்தார் உள்ளத்தே புகுந்து முடிவு செய்தான் போலத் தோன்று கின்றது.

அவர் பல ஆண்டு தந்த நேர்முக வர்ணனையை நாம் நினைத்த போதெல்லாம் பெற நூல் வடிவில் ஆசிரியர் தந்தருளுகிருர். நேர்முக வர்ணனை ''தேர் செல்கிறது; நிற்கிறது; மக்கள் அரகர ஒலி எழுப்புகின்றனர்; தேங் காய் உடைக்கின்றனர்'' என்று மட்டும் கூறுவது வழக்கம். தேர்த் திருவிழாவின் போது பல இடங்களில் தேர் நின்று விடும். அப்போது வருணிக்க ஒன்றும் இராது. ஆனல் தனபாலசிங்கனுரோ தேங்கி நிற்கமாட்டார். முருகப்பிரான் திருக்கோலம், அதன் தத்துவம், திருவிழாக் களின் உட்பொருள், கோயில் வழிபாட்டுமுறை, அவ்வழி பாட்டின் சைவசித்தாந்தக் கருத்து, அதனோடு ஒட்டிய கதைகள் இப்படி பலப்பல பேசி விளக்குவார். அவ்வவற் றிற்கு ஏற்றபடி முருக அன்பர்கள் பாடினவாக நாம்

மேல் விரித்து வந்த நூல்களிலிருந்து எல்லாம் மேற்கோள் களைக் காட்டுவார். எல்லாம் நம் உள்ளத்தில் பதிந்து இனிக்கும் பாடல்கள். அவருடைய அறிவின் அகலமும் அன்பின் ஆழமும் இலக்கிய உள்ளத்தின் உயர்வும் இந்த நூலில் எங்கும் காணலாம். வானொலிப் பேச்சு என்றால் இதுவே மேல்வரிச் சட்டமாக அமைகின்றது எனலாம்; ''தேர் செல்கின்றது; தேங்காய்கள் குவிகின்றன'' போன்ற பேச்சுக்கள் நூலாக வரும் போது இனிப்பதில்லை என அறிந்த ஆசிரியர் அவற்றை எல்லாம் விட்டு விட்டுத் தத்துவச் சாற்றையும் இலக்கிய பாகையுமே பிழிந்து எடுத்துக் காய்ச்சிப் பக்குவப் படுத்தித் தருகின்றார்; தமிழர்கள் இந்த நூலினை வாங்கி முருகப் பேரின்பத்தை உண்டு களிப்பாராக! தனபாலசிங்கனார் இனிதே நீடூழி வாழ்ந்து இத்தகைய தொண்டினை மேலும் சிறக்கச் செய்து வருவாராக! இன்னும் பல அருமைத் தமிழ்ச் செல்வங் களை ஈன்று சைவத் திருநாட்டுக்குச் சிறந்த திருப்பணிகள் பல புரிய அருளுமாறு எல்லாம் வல்ல நல்லைநகர்ச் செவ்வேளைப் போற்றுவோமாக!

வாழிதன பாலசிங்கன்; வாழி தமிழன்னை;
வாழி முருகன் வளமெல்லாம் - வாழி
இலங்கைத் திருநாடு; இன்புடனே நல்லூர்த்
தலங்கண்டே வாழிமக்கள் தாம்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

உ

# முன்னுரை

'திகடசக்கர' எனத் தொடங்கி நமது புராணத்தைத் தீந்தமிழிலே பாடுக'' என்று கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுக்கு முருகப்பெருமான் அடி எடுத்துக் கொடுத்திருக்கிறன். '''உலகெலாம்' எனத் தொடங்கித் திருத்தொண்டர் புராணத்தைச் செந்தமிழில் பாடுக'' என்று சேக்கிழாருக்குச் சிவபெருமான் அடி எடுத்துக் கொடுத்திருக்கிறன். ''அர்ச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பித்தனய் வந்த பெருமான் ஆணை இடுகிறன்; ''பித்தா என்றே பாடுக'' என்று அடியும் எடுத்துக் கொடுத்திருக்கிறன். இப்படி அடி எடுத்துக் கொடுத்த வரலாறுகள் பல. 'நல்லைநகர்ச் செவ்வேள் - வானொலி வர்ணனை' என்ற இந்நூலுக்கும் வள்ளிக்கு வாய்த்த பெருமான் - நீலச்சிகண்டியில் ஏறும் பெருமான் அடி எடுத்துக் கொடுத்திருக்கிறன் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆம்! அந்த நல்லைநகர்ச் செவ்வேள் தன்னுடைய திருத்தேர், தீர்த்தோற்சவ நிகழ்ச்சிகளை வானொலியில் வளமாரச் சொல்லவேண்டும் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தார் வாயிலாக எளியேனைப் பணித்தனன். ''யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்தது'' என்ற பெருங் குறிக்கோளுடனும் ''எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்'' என்ற சங்கற்பத்துடனும் வானொலி வர்ணனையைச் சில ஆண்டுகளாகச் செய்து வந்தேன். நல்லைநகர்ச் செவ்வேள் வானொலி வர்ணனையைச் செய்யும்போது என்னை நான் மறந்த நிலையும் உண்டு. 'உரை அவிழ உணர்வு அவிழ உளம் அவிழ உயிர் அவிழச்' சில போது நின்றிருக்கின்றேன்: வர்ணனைகள் காற்றில் கலந்து வானில் ஒன்றுகாது அதிட்டவச

மாகச் சிலவற்றை அன்பர்கள், உறவினர்கள் ஒலிப்பதிவு செய்து வைத்திருந்தார்கள். இன்ன இன்ன பேச வேண்டும் என்று சில குறிப்புக்களும் எடுத்து வைத்திருந்தேன். இவற்றை எல்லாம் ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்நூலை உருவாக்கி இருக்கின்றேன். வானொலியில் பேசியன இந்நூலில் விரிந்து பரந்து வருகின்றன. சில பாடல்களைப் புதிதாகவும் புகுத்தி இருக்கின்றேன். சுருக்கமாகச் சொன்னால், பேசிய அத்தனையும்தான் இந்நூலில் இடம் பிடித்து இருக்கின்றன என்று சொல்வதற்கு இல்லை; வானொலி வர்ணனை வளமாக இந்நூலுக்கு அடி எடுத்துக் கொடுத்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

பேசும் போது கேட்டதையே படித்தால், கேட்கும் போது இருந்த சுவை இருக்காது என்பது எளியேன் கருத்து. அதனால் சில இடங்களில் பேச்சு நடையை மாற்றி இருக்கின்றேன். கால எல்லைக்குள் உட்பட்டுப் பேசிய கருத்துக்களிற் சில மிகமிக நுட்பமானவை. அவற்றை விளக்குவது என்பது எளிதன்று, அநுபூதிமான்களின் திருவாக்குகளை மேற்கோளாகக் காட்டி விளக்கினாலும் பக்கம் பக்கமாக எழுதினாலும் அவை முற்றாக விளக்க முடியாதன என எளியேன் உணர்கிறேன். இந்த இக்கட்டான நிலையிலேயே இந்நூல் உருவாகி வருகின்றது. பேச்சைக் கேட்கும் அனுபவம் வேறு; கட்டுரையைப் படிக்கும் அனுபவம் வேறு. இவ்விரு அனுபவங்களையும் ஒரு சேர இணைக்கப் பாடுபட்டிருக்கிறேன்.

இந்நூலின் கைப்படியினை என் உழுவல் அன்பர்கள் திரு: இ. இரத்தினம் அவர்களும் திரு. மு. சிவராசா அவர்களும் படித்தார்கள். இருவரும் செந்தமிழ் அறிஞர்கள்; சைவச் செந்நெறிச் சீலர்கள். அடக்கமானவர்கள்; ஆழ்ந்த சிந்தனையாளர்கள்; இருவரும், 'நன்றாக இருக்கின்றது' என்று பாராட்டினார்கள். புலமையினாலும் பக்தியினாலும் ஒழுக்கத்தினாலும் ஓங்கி நிற்கும் இவர்களின் பாராட்டே போதும்! போதும்!!

இது ஒரு புது முயற்சி. இறைவன் அருள் எதனைச் செய்கின்றதோ அது நடக்கும். என் உள் நின்று இயக்கும் ஒருவனின் அருள்வழிப் படரும் எளியேன் எழுத்துக்களை என்னுடையவை எனப் பெருமை பாராட்ட நான் ஆர்? என் உள்ளம் ஆர்?

சிதறிக் கிடந்த பேச்சுக்களை எல்லாம் நூல் வடிவமாக்குவதற்கு என்னுடன் சேர்ந்து அயராது உழைத்த செல்வி கலாநிதி நமசிவாயம், என் மருமகள், பாராட்டுக்கு உரியவர். அவர் நிறை நலன்களுடன் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன். பேசியவை காற்றோடு கலந்து போகாது நின்று நிலைக்க உதவிய நல்லை நகர்ச் செவ்வேளின் திருவருளையும் வாழ்த்துகிறேன்.

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் அறங்காவலர் அவர்களைப் பற்றிச் சில சொல்லல் ஏற்புடைத்து. அறங்காவலருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பங்கள் சில எனக்குக் கிடைத்தன. சபலவிதையும் ஆசாபாசவிதையும் பயிராக முடியாத பாருங்கல்லாக அவர் உள்ளம் பரிணமித்திருக்கின்றது. 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்பது போலே அறங்காவலரின் சிந்தனையும் சொல்லும் செயலும் நல்லூரான் திருப்பணியை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன. பணிவுப்பெட்டகமாக - பழுத்த மனத்தினராக – பண்புசால் பெரியராக வாழ்கின்ற அறங்காவலரின் ஆசிமொழிகளைத் தாங்கி இந்நூல் வெளிவருவது ஊழின் வழி வந்தது.

மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தெய்வத் தமிழை உள்ளவாறு ஆராய்ந்து தோய்ந்து உணர்ந்தவர். அவர் பல்கலைச் செல்வர் - பன்மொழிப் புலவர். தொண்டின் திருவுருவம். அவரிடம் கற்றுப் பேரறிஞர்களாகியவர்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணங்களைத் திறனாய்வுக் கண்ணோடு - சமய தத்து

வங்கள் விளக்கம் பெறும் வகையில் - பேசியும் எழுதியும் வருபவர் தெ. பொ. மீ. அவர்கள். அவர் பழைய தலைமுறையின் பெருமகன்; புதுமை நெறி போற்றும் சீர்திருத்தவாது. அவர் அளிக்கும் அணிந்துரை அறிவுக்கு நல்விருந்தாகி நூலுக்கு ஏற்றம் தருகின்றது.

பிறருக்குப் பயனுவதற்கே தருக்கள் பழுக்கின்றன; ஆறுகளில் நீர் ஓடுகின்றது. பசுக்கள் பால் தருகின்றன. அது போலே பிறருக்குப் பயன்படுவதற்கே திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் வாழ்கின்றார்; கி. வா. ஜ. அன்பருக்கு அன்பன்; ஆன்மிக அறிவுச் செம்மல்; தன் பெருமை தான் அறியாத் தயாள சிந்தனையாளர். காலம் எல்லாம் பிறர்க்கு உரியராகி அன்பே உருவாகிச் சிந்தனைக் களஞ்சியமாக வாழ்கின்ற கி. வா. ஜ. ஐயா அவர்கள் என் முயற்சியைப் பாராட்டி அணிந்துரை வழங்குகின்றார். நல்லைநகர்ச் செவ்வேள் மேல் அவர் பாடிய துதிப்பாடல்கள் பிற்சேர்க்கையாக வெளி வருகின்றன; இவற்றுள் சில பாடல்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

என் உளக் கோயிலில் நீங்காது நிறைந்து நின்று வானொலி வர்ணனையைச் செய்ய ஒளி தந்து களி தந்த நல்லைநகர்ச் செவ்வேளின் திருவருளை என்னென்பேன்!

இத்தனைக்கும் காரண புருஷர்களாக இருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் கலாநிதி K. S. நடராசா, உதவிப் பணிப்பாளர் திரு. C. V. இராஜசுந்தரம், இயல், நாடக நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர் திருமதி ஞானகலாம்பிகை இரத்தினம் என்போர்க்கு முதற்கண் எம் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இந்நூலினை உருவாக்க என் உள்ளம் விழைந்தபோது தாமே அச்சேற்றித் தருவதாக முன்வந்தவர் ஸ்ரீ லங்கா அச்சக உரிமையாளர் திரு. நா. தெய்வேந்திரம், யாழ்ப்பாணத்து யோகசுவாமிகளின் அன்பையும் அருளையும்

பெற்ற திரு. தெய்வேந்திரனுர் சிவசம்பாத்தியம் உடையவர். வேலுடைய திருக்கரத்து முருகன் அன்பில் வீறிநிற்கும் அவருக்குச் சொல்லும் நன்றி சொல்லில் அடங்காது; சொல்லுக்குள் நிற்காது.

வானெலி வர்ணனையைக் கேட்ட அன்பர்களிற் பலர் தம் உவகைப் பெருக்கை நேரே சொல்லக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். கடிதங்கள் வாயிலாகவும் பாராட்டுக்கள் பல கிடைத்தன. எல்லோர்க்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எல்லாம் அந்த நல்லைநகர்ச் செவ்வேளின் திருவருள் என்று சொல்வதை விட வேறென்றும் சொல்லத் தோன்றவில்லை.

திரு. மு. வைத்தியலிங்கம் செந்தமிழ்க் காவலர்; பல்காலும் உறுதுணையாக இருந்து அவர் செய்யும் பேருதவிகள் எழுத்தில் அடங்கா.

அட்டைப் படங்களை வரைந்து உதவித் தன் கைவண்ணத்தைக் காட்டிவருபவர் அன்பர் திரு. S. சபாநாயகம்.

ஆர்வநெறியில் ஆற்றுப்படுத்திய எல்லோர்க்கும் நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கம் உரித்தாகுக!

17, 55 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை,
இலங்கை.

செ. தனபாலசிங்கன்

உ

# நல்லைநகர்ச் செவ்வேள் வாஞெலி வர்ணனை

தேர்த்திருவிழா வர்ணனை ஆரம்பம்:

வளம்நிறைந்த யாழ்ப்பாண நாட்டில் மக்கள்
மனம்உருகி வழிபட்டு விருப்பம் யாவும்
உளம்நிறையப் பெறவைக்கும் தேவே, விண்ணோர்
உயர்வாழ்வைப் பறிகொடுத்து நின்றே ஏங்கக்
களம்நிறைந்த அவுணர்களை மாய்த்து மீட்டும்
கவின்நிறைந்த வாழ்வுபெற வைத்த வள்ளால்
தளம்நிறைந்த கடம்பலங்கல் அணிந்த மார்பா
தயையாளா, நல்லூரிற் கந்தா, போற்றி!

வெற்றிவேல் முருகனுக்கு, அரோகரா!

நல்லைநகர்ச் செவ்வேளின் ஞானப்பூங்காவிலே நின்று பேசுகிறோம். இங்கே சிவத்தென்றல் வீசுகின்றது. திருவருள் நிலா எறிக்கின்றது. தேர்த்திருவிழா வர்ணனைக்கு அப்பாற்பட்டது. பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன் என்ற நிலையிலே நின்று கொண்டிருக்கிறோம். நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பெருங் குறிக்கோளுடன் பேசத்தொடங்குகின்றோம்.

வெற்றிவேற் பெருமான், அடியார்க்கு நல்ல பெருமான், அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமான் தேரிலே ஆரோகணித்து வருகின்ற எழில்மிகு காட்சியை நேரிலே பார்க்கும் பேறு பெற்ற நாம் கொடுத்துவைத்தவர்கள். நீங்களும் கொடுத்து வைத்தவர்கள். ஏன்? அந்தத் திவ்விய காட்சியை நாம் புறக்கண்ணால் பார்க்கிறோம்.

நீங்கள் அகக்கண்ணால் பார்க்கிறீர்கள். அவ்வளவுதானே! நாமும் பாக்கியசாலிகள்; நீங்களும் பாக்கியசாலிகளே! எங்கே நினைப்பினும், அங்கே முன் வந்து அருள் செய்பவன் அல்லவா முருகன்!

**செங்கேழ் அடுத்த சினவடி வேலும் திருமுகமும்**
**பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்**
**கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரன்என**
**எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து எதிர்நிற்பனே**

திருக்கை வடிவேலும் ஓராறு திருமுகங்களும் ஈராறு திருத்தோள்களும் பெ லிய எழுந்தருளி இருக்கும் குமரனை எங்கே நினைத்தாலும் அங்கே நமமுன் வந்து அவன் காட்சி தந்து நிற்பான்.

**திருவடி யும்தண்டை யும்சிலம் புப்சிலம்பு ஊடுருவப்**
**பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்**
**மருவடி வான வதனங்கள் ஆறும் மலர்க்கண்களும்**
**குருவடி வாய்வந்தென் உள்ளம் குளிரக் குதிகொண்டவே.**

என்று அருணகிரியார் பாடுகின்ற பாடலை நாமும் பாடிச் சண்முக தியானம் பண்ணினால் முருகப்பெருமானுடைய திருவுருவத் தோற்றம் ஆனந்த அனுபவத்தை உண்டாக்கும்.

**ஆக்கம் தரும் அழிவு:**

நித்திய நைமித்திகங்களிலே நித்தியத்தில் வரும் குறைகளைப் போக்க நைமித்திகங்கள் நடைபெறுகின்றன. நைமித்திகங்களைத் திருவள்ளுவர் சிறப்பு என்று குறிப்பிடுவார்.

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.**

என்பது அந்தத் திருக்குறள்.

நைமித்திகங்களில் தலையாயது தேர்த்திருவிழா. இதனைப் பிரமோற்சவம் என்றும் கூறுவார்கள். எல்லோரும்

கண்டு களிக்கும் பொன்னான விழா தேர்த் திருவிழா. அது யாவரும் வடம் தொட்டு ஈர்க்கும் விழா. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் அல்லது சம்ஹாரம் செய்ய வருகின்ற காட்சி தேர்த்திருவிழா. அவன் நம்மை அழிக்கின்றான் என்றால் பொருள் என்ன? நாம் எல்லாம் மலபந்தர்களாக வாழ்கின்றோம். முருகப்பெருமான் இரக்கமே வடிவாய் உள்ளவன்; ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவன். அந்தச் சர்வசீவ தயாபரன் நாம் ஓடு மட்டும் ஓடிக் களைத்து மீளும் பக்குவத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கின்றான். அவனுடைய செல்லக் குழந்தைகளாகிய நாம் மலபந்தத்தால் சிக்குண்டு கிடப்பதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை. அதனால் அழித்தல் தொழிலைச் செய்யத் தேரிலே இவர்ந்து வருகின்றான். மலம் அழிந்தால் தானே நிறைந்த வாழ்வு வந்து அமையும். பிரமன் கையால் எழுதினால் அதனை முருகன் காலால் அழிப்பான்!

**சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்**
**மால்பட்டு அழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்**
**வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்அவன்**
**கால்பட்டு அழிந்ததுஇங் குஎன்தலை மேல்அயன கைஎழுத்தே.**

தலைமேலே அயன் எழுதிய தலை எழுத்து அழிந்து போய் விட்டது என்றால் பிறவி ஒழிந்தது என்பது பொருள். பிறப்பு அற்ற சாசுவதமான இன்பம் கிடைக்க வேண்டுமானால் பிரமன் எழுதிய எழுத்து அழிய வேண்டும். அழிந்தது, அழிந்தது என்பன எல்லாம் ஆக்கம் தரும் அழிவுகள். சேல்பட்டுப் பொழில் அழிந்கதனால் வயல் வளமாயிற்று. பூங்கொடியார் மனம் முருகப் பெருமானின் கடம்ப மலர் மாலைகளுக்கு ஆசைப்பட்டு விரக தாபத்தினால் அழிந்தது. அதனால் மனம் அற்ற பரிசுத்த இன்பம் வாய்த்தது. வேல்பட்டு வேலையும் சூரனும் வெற்பும் அழிந்தமையினாலே சூரன் மயிலானான் அயன் கைஎழுத்து எம்பிரான் முருகனின் கால் பட்டு அழிந்ததனாலே பிறவி அற்ற முத்தி

இன்பம் விளைந்தது. பிறவி அழிந்து ஒழிய வேண்டுமானால் முருகன் திருவடி எப்போதும் நம் தலையில் படவேண்டும். அவன் தன் திருவடியை நம் தலைமேல் வைப்பதற்குத் தானே தேரின்மேல் இவர்ந்து வருகின்றான்.

தேரின் பொருள்:

தேர் ஓடினால் ஆணவம் மட்டுமா ஓடும்? எல்லாமே ஓடிவிடும். ஒரு பிள்ளைத்தமிழ் இங்கே நினைவுக்கு வருகின்றது.

பாரோடு பதினாலு லோகத்தில் உள்ளவெம்
பழியோடு பாவம் ஓடப்
பஞ்சமா ஓடக்கொடுமை அஞ்சிஓ டத்தமிழ்ப்
பாவலர்கள் வறுமைஓடச்

சூர்ஓட அவுணர்கள் பயந்துஓட வானவர்கள்
துன்பம் கலங்கிஓடச்
சொல்லோடு பழகாத பலவரோ டப்பழைய
தொண்டர்மன மாயைஓட

வாரோடு கொங்கைமட வாரோடும் இளைஞர்தம்
மனையோடு மேவிவாழ
வந்துதெரி சித்துளோர் பிணிஓட அங்கவர்
மனத்துயர் அனைத்தும்ஓடத்

தேரோடி வரும்வீதி திகழ்பண்ணை வாழவே
சிறுதேர் உருட்டிஅருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டிஅருளே.

ஆம்! முருகப்பெருமான் தேர் உருட்டி விளையாடினால் நமக்குத் துயர் ஏது? துன்பம் ஏது? எல்லாம் ஓடிவிடும்.

நம்முடைய வாழ்விலே தேர் நிலைத்த பண்பட்ட மேலாம் குறிக்கோள் உடைய ஓர் இடத்தைப் பெற்றிருக்கின்றது. தேர் என்ற வினை அடிக்குத் தேடு, ஆராய், அறி, தெரிந்து எடு, பயிற்சிமிகு என்றெல்லாம் பொருள்

உண்டு. நாம் எதனையும் தேர்ந்து எண்ணிச் செய்யும் செம்மை உளத்தினராகத்தானே வாழ்கின்றோம். நம்முடைய வாழ்வின் செம்மை நாம் தேர்ந்து எடுக்கும் தெய்வ நெறியிலும் செறிந்து கிடக்கின்றது என்பது சொல்லாமலே விளங்குகின்றது.

நான்கு சக்கரங்களையும் தேர்த் தட்டினையும் மேலே அமைந்த விதான அடுக்குகளையும் அவற்றின் உச்சியில் உள்ள கலசத்தையும் அதற்கு மேல் விண்முட்டப் பறக்கும் கொடியினையும் பார்த்தால் உயிர் இறைவனை அடையச் செய்யும் வழியின் அடிப்படையையும் அதற்கான உபாய நெறியின் அமைப்பையும் உய்த்து உணரலாம். தேரும் தேர் ஓட்டமும் இறைவனோடு உயிர் இரண்டறக் கலக்கும் பேரின்ப வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்து இருக்கின்றன.

தேரின் தோற்றம் முழுவதும் கொழுந்து விட்டெரியும் அக்கினியின் அமைப்புக்கு ஒத்ததாக உள்ளது. இக்கருத்தை உள்ளடக்கி உண்மைவிளக்கம் பஞ்ச கிருத்திய நடனத்தைப் பாடுகின்றது.

**தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.**

### ஊன நடனம்

படைத்தல் — உடுக்கு ஏந்திய திருக்கரம்
காத்தல் — அஞ்சல் என அமைந்த திருக்கரம்
அழித்தல் — அக்கினி ஏந்திய திருக்கரம்
மறைத்தல் — ஊன்றிய திருவடி
அருளல் — தூக்கிய திருவடி

இறைவனது ஐந்தொழில் ஆடல்களுள்ளே அக்கினி ஏந்திய திருக்கரம் அழித்தல் அல்லது சம்ஹாரத்தைக்

காட்டித் தருகின்றது என்பது இங்கே நினைவு கொள்ளற்பாலது.

நம்மிடத்திலே இருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களையும் அடக்கி நம்மை ஈடேற்ற அந்தப் பரம கருணாநிதி செவ்வி பார்த்துக்கொண்டிருக்கின்றான். அந்தப் பெருமானின் இரதோற்சவம் மலம் அடங்க நலம் வருவதைச் சொல்லித் தரும். தேர்மேல் இறைவன் ஆரோகணித்து அருள் புரிய வரும்போது மணிவாசகரின் திருவாசகத்தை நாமும் பாடலாம்.

**வான்கெட்டு மாருதம் மாய்ந்துஅழல்நீர் மண்கெடினும்**
**தான்கெட்ட லின்றிச் சலிபபறியாத் தன்மையனுக்கு**
**ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுஎன் உள்ளமும் போய்**
**நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.**

'நான்' கெட்டால் வாழ்வு வளமாகும்.

நம்மைத் தேர்ந்த வழியிலே செலுத்தும் தேரின் அரிய பெரிய தத்துவத்தை இங்கே சிந்தித்தல் சாலப் பொருத்தமாகும்.

**தேரின் தத்துவம்:**

தேர் உடலை ஒத்ததாகும். அண்டம், பிண்டம் இரண்டையும் விளங்கச் செய்வது தேர். காணப்படுகின்ற உலகம் அண்டம்; காணப்படுகின்ற சரீரம் பிண்டம்; அண்டத்தில் அமைந்திருப்பவை பிண்டத்திலும் பிண்டத்தில் அமைந்திருப்பவை அண்டத்திலும் அமைந்து கிடக்கின்றன.

தேர் ஓட்டம் மனித வாழ்க்கையைச் சித்திரிப்பதென்று சொல்லலாம். சரியை (தாச மார்க்கம்), கிரியை (சற்புத்திர மார்க்கம்) யோகம் (சக மார்க்கம்) ஞானம் (சன்மார்க்கம்) என்ற நான்கு பாதங்களும் நான்கு சக்கரங்கள். அப்பர் தாச மார்க்கத்திலும், சம்பந்தர் சற்புத்திர மார்க்கத்திலும், சுந்தரர் யோக மார்க்கத்திலும், மணி

வாசகர் சன்மார்க்கத்திலும் நின்று ஒழுகித் திருவடிப் பேற்றினைப் பெற்ருர்கள். இந்த நான்கு மார்க்கங்களில் ஒன்றிலாயினும் நாமும் நின்ருெழுகித் திருவருள் நலன் பெற்று வீடுபேற்றினைப் பெறலாம் என்பதை நான்கு சக்கரங் களும் சொல்லித் தருகின்றன.

சறுக்குக் கட்டை:

வாழ்விலே எத்தனை எத்தனை விதத்திலே நல்லன வும் தீயனவும் குறுக்கிட்டு நம்மைத் திசை திருப்பு கின்றன. செய்வன செய்து, தவிர்வன தவிர்த்து நல்வழி காணமுடியாத துர்ப்பாக்கியம் பெற்ற மக்களைத் தடுத்து நிறுத்தி இதுவே நீங்கள் போகவேண்டிய மார்க்கம், செல்லக் கூடாத வழியிலே செல்லவேண்டாம், போகாத இடந் தனிலே போகவேண்டாம் என்று காட்டிக் கொடுக்கவேண் டும்தானே!

தருமம் செய்க தவறுள பாவமாம்
கருமம் செய்யற்க என்பர் கருத்திலார்
இருமை தன்னையும் யாவர்செய் தாலும்மேல்
வருவ தொன்றிலை மாயம்வித் தாகுமோ.

என்று சுக்கிராசாரியரின் உபதேசம் செய்பவர்களும் இல்லாமல் இல்லை. எனவே,

உடம்புவரு வகைஅறியீர் உயிர்வகையை அறியீர்
உடல்பருக்க உண்டுநிதம் உறங்குதற்கே அறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்
இடம்பெறுபொய் வாழ்க்கையிலே இன்பதுன்ப மடுத்தே
எண்ணிஎண்ணி இளைக்கின்றீர் ஏழைஉல கீரே
நடம்புரிஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமினோ புண்ணியஞ்சார் வீரே.

என்று வழுக்கி விழுவோரை வழிப்படுத்த வேண்டியது நல் லறிஞர் கடன்.

தேர் ஓடும்போது சறுக்குக் கட்டையைப் போட்டுத் தடுத்து நிறுத்துகிரேம்; வழிமாற்றித் தேருக்குச் செல்வழி

காட்டுகிறோம். வாழ்க்கையிலேயும் சூழ்நிலை, சந்தர்ப்பம் காரணமாகத் திசைமாறித் தத்தளிக்கின்றபோது, சறுக்கி விழுகின்றபோது நேர்வழி காட்டும் சீரான தத்துவத்தைச் சறுக்குக் கட்டை போட்டுக் காட்டுகிறார்கள்.

## தேரின் கீழ் அண்டம்:

தேரின் கீழ் அண்டத்தைப் பார்த்தால் அங்கே நாம் ஒரு பாடத்தைப் படிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதைப் பார்க்கிறபோது அருணகிரியாரின் இரு பாடல் களாவது எமக்கு நினைவுக்கு வந்தால் நாம் பாக்கியசாலி கள். இதோ அந்தப் பாடல்கள்:

**சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்**
**மங்கா மல்எனக் குவரந் தருவாய்**
**சங்க்ரா மசிகா வலசண் முகனே**
**கங்கா நதிபா லக்ருபா கரனே.**

— அநுபூதி

**பால்என் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்**
**சேல்என் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்திருக்கை**
**வேல்என் கிலைகொற்ற மயூரம் என்கிலை வெட்சித்தண்டைக்**
**கால்என் கிலைமன மேஎங்ங னேமுத்தி காண்பதுவே.**

— அலங்காரம்

இவற்றை நாம் கடந்து அப்பால் செல்ல வேண்டும்.

## தேரின் பீடம்:

தேரின் பீடம் இறைவன் இருதயத்தில் எழுந்தருளி இருப்பதைக் காட்டித் தருவதாகும். சுவாமி தேர்மேல் ஆரோகணித்தபோது தேர் செல்கின்றது. சுவாமி அவ ரோகணித்தபோது தேர் நின்று விடுகின்றது. இதய கமலத்தில் இருந்து நம்மை இறைவன் வழிநடத்துகின் றான் என்பதைப் பீடம் காட்டித் தருகின்றது சிந்தையில் தெளிவு ஏற்பட்டால் அங்கே சிவன் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிப்பான்.

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்து
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த்து அகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையிற் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை ஆக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க இட்டனன் ..................
........................நின்

செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே.

— திருக்கழுமல மும்மணிக்கோவை

என்று பாடி வேண்டினல் இறைவன் எழுந்தருளி வருவான். ''சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி'' என்றுதானே அப்பர் பாடுகிறார். எனவே நம்முடைய இருதயத்திலே இறைவனை இருத்த வேண்டுமானல், காமக் குரோதாதிகளை அகற்றி உத்தமனர் வேண்டும் உள்ளக் கமலத்தைத் தூயதாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே

என்று திருமூலர் சும்மா பாடுவாரா?

தேரின் நான்காம் தட்டு:

நான்காவது தட்டு மனித இலட்சியங்களைக் காட்டுகின்றது. பற்பல வர்ணங்களும் அமைந்த இந்தத்

தட்டு நம்முடைய வாழ்வு உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டு விளங்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. கண்ட கண்ட பொருள்களிலே மனத்தை அலையவிடக் கூடாது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற ஒரு வாழ்வு நமக்கு வந்து அமையக் கூடாது. அமைந்தால் வாழ்வு சிதறிப் போகும் என்பதைச் சொல்லவா வேண்டும்?

**பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்**
**மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து**
**கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளி லாது கெட்டேன்**
**சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே.**

என்று அப்பரே பாடுவாரானால் நாம் எம்மாத்திரம்? நம்முடைய குறிக்கோள் திருவடிப் பேறாகவே இருக்கவேண்டும். அப்பர் பெருமான் குறிக்கோள் இலாது கெட்டேன் என்று நம்மைப் பாட வைத்துத் திருவடிப் பேற்றுக்கு அழைத்துச் செல்லும் செம்மை சிந்திக்க வேண்டியது. இவை எல்லாவற்றையும் தேரின் நான்காவது தட்டு சொல்லித் தருகின்றது.

**தேரின் கலசம்:**

தேரின் கலசம் (முடி) வாழ்க்கையிலே எந்த நெறி நின்று வாழ்ந்தாலும் மரணம் இல்லாப் பெருவாழவிலே-பிறவாப் பெருநெறியிலே வாழ்வு முடியவேண்டும் என்பதைக் காட்டித் தருகின்றது. நமக்கு வேண்டியது இறவாத இன்ப அன்பு. அந்த அன்பு வாய்க்கப் பெற்றால் பிறவாமை தானே வரும்; திருவடிப்பேறு அன்றி வேறு குறிக்கோள் இல்லாது வாழ்ந்தால் மரணம் இல்லாப் பெருவாழ்வு வாராமல் போகாது; போகாது. வழி என்ன? இறைவன் திருவடியில் மனம் ஒருமைப்பட்டு வேலும் மயிலும் துணை என்று இருந்தால் காலனுக்குச் சவால் விடுத்து மரணம் இல்லாப் பெருவாழ்வைப் பெற்றுவிடலாம். மரணம் இல்லாப் பெருவாழ்வு பெறும் வழியை அழகாகச் சொல்கிறார் இராமலிங்க சுவாமிகள்:

நினேந்துநினேந்து உணர்ந்துஉணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழும்கண் ணீரதனல்
உடம்பு
நனேந்துநனேந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனேந்துவனேந்து ஏத்துதும் நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனேந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

இப்படி இராமலிங்க சுவாமிகள் பாடினுல் ''மரணப் பிர மாதம் (பிரமாதம்-தவறு) நமக்கு இல்லேயாம் என்றும் வாய்த்ததுணே கிரணக் கலாபியும் வேலும் உண்டே'' என்று பாடுவார் அருணகிரிப் பரமகுரு. தேரின் முடியைப் பார்க்கிறபோது எமக்கு வேலும் மயிலும் துணே என்ற நினேவு வர வேண்டும். அந்த நினேவு நெஞ்சிலே நீங்காத இடம் பிடித்தால் மரணப் பிரமாதம் நமக்கு இல்லே; மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்.

**தேரின் குடை:**

தேரின் குடை வெற்றியின் சின்னம். ஆத்மசாந்தி அடைந்த நிலேயைக் காட்டுகின்ற வெற்றி அது. அந்த வெற்றி கிடைத்து விட்டால், ''நாமார்க்கும் குடி அல்லோம் நமனே அஞ்சோம்'' என்று வீறுடன் பாடலாம். தேரின் ஐந்து தட்டுக்களிலும் பொதிந்துகிடக்கும் பேருண்மைகளே-பெரும்பொருளே அறிந்து, நம்மை நாமே நல்ல வழியில் நடாத்திக் கொண்டால் ஆத்ம சாந்தி வாராமலா போகும்! உலகத்திலே வாழ்ந்தாலும் தாமரை இலேத் தண்ணீர் போலே உலகத்தைப் பற்றிய நினேவு இல்லாமல் வாழவேண்டும். வாழ்ந்தால் ஆத்மசாந்தி ஏற்படும். அப்போது,

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

என்று எக்களிப்புடன் நாமும் பாடலாம்.

**ஆறுமுக தத்துவம்:**

முருகப்பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேர்மேல் எழுந்தருளி வருகின்றான். சொரூப நிலையில் இருக்கின்ற ஆண்டவன் தடத்த நிலைக்கு வருகின்ற போது முதன்முதல் காட்சி தந்த திருவுருவம் ஆறுமுக சுவாமி. பூரணப் பொருளாக விளங்குகின்ற திருமுருகன் ஆறு திருமுகங்களுடனே அடியார்க்கு அருள் பாலிக்க வருகின்றான். ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் விளங்கித் தோன்றும் எம்பிரானுடைய தரிசனத்தில் நாம் உள்ளக் கிளுகிளுப்பை அடைகிறோம். அவன் இன்பம் பாய்ச்சிச் சாவாத நிலை தருகின்றான்.

சிவபிரானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று. இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாகத் திருவவதாரம் செய்தான் என்பது மற்றொன்று. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல் கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானின் கருணைப் பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன. மனிதனுடைய உடம்பில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகப் பெருமான் தனித் தனியே நின்று பாதுகாக்கின்றான். யோகிகள் அந்த ஆறு ஆதாரங்களில் அவனுடைய திருமுக மண்டலத்தைத் தரிசிக்கிறார்கள்.

ஆறுமுக தத்துவம் மிக மிகப் பழமையானது; மிக மிகப் புதுமையானது. எல்லாக் காலத்துக்கும் உரியது: அதுவே ஆதியானது; அந்தமானது. இன்ஞெரு வகையாகச் சொல்லப்போனுல் ஆதியும் அற்றது, அந்தமும் அற்றது: ''தனது தொல்லேத் திருமுகம் ஆறும் கொண்டான்'' என்று கந்தபுராணம் பாடிஞல்,

**ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்**
**ஆறு முகம்என்று தெளியேனே**

என்று திருப்புகழிலே அருணகிரிநாத சுவாமிகள் பாடுவார்.

வரிசையான ஆறுமுகத்தையும் நாம் கண்ணுலே கண்டு விட்டால் மட்டும் போதாது; கருத்தாலும் காணவேண்டும். ஆறுமுகத்தைப் பற்றிச் சொல்கின்ற பாடல்கஜா எல்லாம் கருத்தாகப் படிக்கவேண்டும். அப்போது பரமானந்த சாகரத்தில் அமுத மயமாக ஆறு திருமுகங்கஜாயும் காணும் நிலே உண்டாகும்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே எம்பெருமானுடைய ஆறு திருமுகங்களும் செய்கின்ற செயல்கஜா அழகாகச் சொல்கின்றுர்.

**ஒளிதரும் முகம்:**

**மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்**

உலகம் எங்கணும் பரந்து கிடக்கின்ற இருஜா எல்லாம் அறவே போக்கி ஒளி தருவது ஒருமுகம். சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்றும் உலகிலுள்ள இருஜாப் போக்கும் மூன்று சுடர்கள். அந்த மூன்று சுடர்களுக்கும் ஒளி தந்து இருஜாப் போக்க உதவும் முகம் ஒன்று. இன்னும் சொல்லப் போனுல், உயிரின் அறிவு, இச்சை, செயல்கஜா ஆணவமலம்

மறைக்கின்றது. புற இருள் பொருள்களை மறைத்துத் தன்னைக் காட்டி நிற்கும். ஆயின் ஆணவ மல இருள் பொருளை மறைத்துத் தன்னையும் காட்டாது நிற்றலின் அவ்விருளினும் கொடிய இருள் என்பார் மாஇருள் என்றார். ஆணவ மல மறைப்பினால் தன்னையும் உணராது மயங்கிக் கிடந்த உயிர் அம் மல மறைப்பு ஒழிந்து தூயநிலை எய்துதல் மறு இன்றி விளங்குதல் ஆகும். இச்செயலை முருகப் பெருமானின் ஒரு திருமுகத்தின் செயலாக வைத்துப் பாடுகிறார் நக்கீரர்.

**அருளும் முகம்:**

ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே

ஆர்வலர் அன்புமிக்கோர்; பக்தர்கள். அவர்கள் தன்னை வாழ்த்துங்கால் அவர்க்கு இனிமையாக ஒழுகி அவர்கள் பால் வைத்த காதலாலே மகிழ்ந்து, வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுக்கும் ஒரு திருமுகம். தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு நெறியினும் நின்று அன்பாலே வழிபடும் அடியவர்களுக்கு வேண்டுவனவற்றை ஒரு திருமுகம் வாரி வழங்குகின்றது. அடியார் தமக்கு வேண்டுவன இவை இவை எனக் கேளாதவிடத்தும் அவர்க்கு வேண்டுவன இவை எனத் தானே அறிந்து ஈந்தருளும் பேரருளாளன் முருகப் பெருமான்.

**வேள்வி காக்கும் முகம்:**

ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே.

மறைவழி நின்று வேள்விகளைச் செய்கின்றார்கள் அந்தணர்கள். அச்சான்றோர்களுடைய வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி காப்பது ஒரு திருமுகம். வேள்விக்கு ஆக்கம் தேடுவது அந்தத் திருமுகம். அந்தணர் அருள்

நிரம்பிய மேலோர்: அவர் செய்யும் வேள்வியாவன: கன்ம வேள்வி, தவவேள்வி, செபவேள்வி, தியானவேள்வி, ஞான வேள்வி என ஐவகைப்படும். இவை ஒன்றில் ஒன்று முறையே உயர்ந்த வேள்விகளாகும். ஐவகை வேள்வி களையும் இயற்றுவோர் இயற்றுங்கால் இடையூறுகள் உண்டாகாதபடி முருகனே முன்னின்று பாதுகாத்தருளு வான்; அவற்றுக்கு உரிய பலனையும் அவன் அளிப்பான்.

## மெய்ஞ்ஞானத் திருமுகம்:

ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே

அறிவே உருவமாக இருப்பவன் முருகன். அவன் ஞான பண்டிதசாமி; அவன் மெய்யடியார்களுக்குத் தோன்றுகின்ற ஐயங்களைப் போக்கித் தெளிவிப்பான். அப்படித் தெளி வாக்கும் செயலைச் செய்கின்றது ஒரு திருமுகம். சிறப் பாகச் சொன்னால் அத்திருமுகம் நூல்களால் காட்ட முடி யாது எஞ்சிய பொருள்களைத் தன் அன்பர்கள் காவல் உறும்படி ஆராய்ந்து உணர்த்தித் திங்கள் போலத் திசை விளக்கும். எஞ்சிய பொருள் வீட்டின்பம். மீண்டும் பிறவி யில் அழுந்தாவகை முருகப்பெருமான் காத்தருள்வான். இறைப்பொருள் தனது வியாபகம் எல்லாம் உயிர் உணர்ந்து இன்புறுமாறு உணர்த்துதல் திசை விளக்குத லாகும். ''காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி'' ஆட்கொள்வான் முருகப்பெருமான்.

## வீரத் திருமுகம்:

ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே

நல்லவர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குவான் முருகப்பெருமான். அசுரர்கள் தேவர்களுக்கு அன்று பெருந் துன்பம் விளைவித்தார்கள். அசுரர்கள் நம்மிடையே இன்றும் வாழ்ந்து கொண்டு நல்லவர்களுக்குத் துன்பத்தைத் தந்து கொண்டே இருக்கின்றார்கள். அவர்களை அடியோடு அழிக்கும் திறல் முருகப் பெருமானுக்கே உண்டு. இந்த வீரச் செயலை ஒரு திருமுகம் செய்கின்றது. தீவினையே தந்து தமக்கும் பிறர்க்கும் கேடு விளைவித்துக் கொள்ளும் இயல்புடையாரை அழித்து நன்னெறி காட்டுகின்றது ஒரு திருமுகம். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வது அவன் வேலை.

> **யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத**
> **அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்**
> **பரித்ராணய ஸாதூனும் விநாசாய ச துஷ்க்ருதாம்**
> **தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே**

''எப்பொழுதெல்லாம் அறம் நலிந்து மறம் மேல் எழுகின்றதோ அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கின்றேன்.

நல்லாரைக் காப்பதற்கும் கெட்டவரைக் கரந்து ஒடுக்குவதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகம் தோறும் நான் அவதரிக்கிறேன்.''

என்று கீதையும் முழங்குகின்றது.

**இன்ப முகம்:**

ஒருமுகம்
**குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே**

ஆறுவது திருமுகம் இன்பத்தை வழங்குகின்றது. அத்திருமுகம் குறவருடைய சிறுமியாகிய வள்ளியெம்பிராட்டியோடு மகிழ்தலைப் பொருந்திற்று என்பது பாடலின் பொருள்.

வள்ளி ஆன்மாக்களுடைய பிரதிநிதி; முருகப்பெருமானின் இச்சாசக்தி. காம நுகர்ச்சி இல்லாத கடவுள் இவ்வாறு மகிழ்தலைப் பொருந்துதல் உலகில் அன்பு கெழீஇய இல்வாழ்க்கையில் உயிர்கள் அமர்ந்து இன்பம் பெறும் பொருட்டேயாகும்.

தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ

என்னும் திருவாசகமும்

போகியாய் இருந்துஉயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும்ஓரார்

இடப்பாக மாதராளோ டியைந்துஉயிர்க்கு
இன்பம் என்றும் அடைப்பானும்

என்ற சிவஞான சித்தியார்ச் செய்யுள்களும் இக்கருத்தை அரண் செய்கின்றன.

எம்பிரான் முருகனுடைய முதல் முகம் இருளைப்போக்கி அருள் செய்யக் கடைசி முகம் இன்பம் தருகின்றது. இருளாகிய ஆணவ மலம் நீங்கப் பேரின்பம் வருவது இங்கே தெரிகின்றது.

**ஆறுமுகமான பொருள்:**

நாம் காண்கின்ற ஆறு திருமுகங்களையும் இவ்வாறு நக்கீரர் அழகாக வரிசைப் படுத்தி இருக்கிறார். இவற்றை இன்னொரு பாணியிலே அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழிலே பாடுவார்.

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
  ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
  குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
  வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீஅருளல் வேண்டும்
  ஆதிஅரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

நக்கீரரும் அருணகிரிநாதரும் இவ்வாறு முருகப்பெருமானுடைய திருமுகங்களை வரிசைப் படுத்திக் கொண்டே போகக் கந்தர் கலிவெண்பாவிலே குமரகுருபர சுவாமிகள் முருகனுடைய தெய்வத் திருமுகங்களை இன்னொரு வகையிலே வரிசைப் படுத்துகிறார்.

வெவ்அசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூ ரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் — விடுத்தகலாப்
பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் — நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் — தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்

என்பது கந்தர் கலிவெண்பா.

முருகப்பெருமான் ஆறு திருமுகங்களை உடையவனாக இருப்பதனாலே அவனுடன் சம்பந்தம் உள்ள பொருள்களையும் ஆறு ஆறாகச் சொல்வதில் ஒரு தனி இன்பம் உண்டு. அவனுடைய மந்திரம், சடாட்சரம் (சரவணபவ), ஆறு எழுத்துக்களுடன் கூடியது. அப்பெருமானை வழிபடுவோர் பூசிக்கும் சக்கரத்திலே ஆறு கோணங்கள் உண்டு. அவனுடைய அடியார்களும் அவனுடைய ஆறுமுகத்தையும் ஆறுதடவை நினைந்து திருநீற்றைப் பூசிக் கொள்கின்றார்கள்.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் — என்றுபூதி
ஆகம் அணி மாதவர்கள்

என்று திருப்புகழிலே அருணகிரிநாதர் பாடிப்பரவுவார். முருகனுக்கு உரிய படைவீடுகளும் திருப்பரங்குன்றம்,

திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோருடல், பழமுதிர்சோலை என ஆறும். அவனுடைய திருக்கை வேலுக்கும் ஆறுமுகம் உண்டு. கந்தசட்டியாம் கந்தன் பெருவிழாவும் ஆறு திருநாள்களைத் தானே கொண்டது:

ஆறு திருப்பதிகண்டு
ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி
கொண்டோனே

என்று கந்தர் கலிவெண்பாவிலே குமரகுருபரசுவாமிகள் பாடுகிறார்:

அருளார் முகமும் அடியார்க்கு அபயம் தரு பொற் கரமும் கருணைப் பொலிவும் கனிவாய் நகையும் திருமார்பு அழகும் திகழும் முருகனை நினைக்கும் போது சிவக்கனல் பளிச்சிடுகிறது. சக்தி மின்சாரம் விறுவிறுக்கிறது. ஆறுதல் அளிப்பது ஆறுமுகம். சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் ஆகிய ஆறு சமயங்களுக்கும் புகல் அளித்துக் காப்பது ஆறுமுகம். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறு உட்பகைகளையும் அழிக்கவல்லது ஆறு முகம். அன்பு, உண்மை, திண்மை, அறம், பொருள், அறிவு ஆகிய தெய்வத் தன்மைகளையும் தருவது ஆறுமுகம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மேல், கீழ் ஆகிய ஆறு திசைகளிலும் அருளை அள்ளி வீசிப் பொலிவது ஆறு முகம். கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப் பாய் இலங்குவது ஆறுமுகம். முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் பத்திநெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவ மாக்குவது ஆறுமுகம்:

**காலைப் பிடித்தால் கைமேல் அருள்:**

முருகப் பெருமான் தேர் மேல் எழுந்தருளி வருகின்ற காட்சியைப் பார்க்கின்றபோது கந்தபுராணப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவரும் தெரிதல் தேற்று திருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்னம் எல்லாம்

அன்று சூரனுடன் செய்த போரிலே போர்ப்படை வெள்ளத்தின் மத்தியிலே முருகப்பெருமான் எழுந்தருளிய போது கண்ட காட்சி இது. பக்தி வெள்ளத்திலே பாங்காய் முருகப் பெருமான் எழுந்தருளும் போதும் இப்பாடலையும் பாடலாம் என்றே தோன்றுகின்றது. சின்னங்கள் ஒலிக்கின்றன. ஆணவச் சூரர்களை எதிர்த்துப் போராட அவன் ஒய்யாரமாகப் புறப்பட்டிருக்கின்றான். அன்றும் அகன்றது ஆணவம்; இன்றும் அகலப் போவது ஆணவம். அவன் கால்பட்டு அழியப் போகின்றது தலைமேல் அயன் கையெழுத்து!

அஞ்ஞானம் நிறைந்த உலகத்திலே அவித்தியா வாசனையின் கோலாகல வெறி மூண்டிருந்தாலும் அவற்றை அழித்துத் தன் ஞான மணத்தைப் பரப்புவான் முருகன். உடலைப் பிணியாகிய பகையும் மனத்தைத் தீய நினைவுகளாகிய பகையும் அறிவை மயக்கமாகிய பகையும் வந்து கெடுத்து விடும். அப் பகைகள் யாவும் வேல் முருகன் என்றவுடனே வெருவி ஓடும். முருகனையும் வெற்றி வடிவேலையும் புகழ்ந்தால் இருள்சேர் இருவினையும் நிச்சயமாக மாய்ந்தொழியும். உலகினை வருத்தும் துன்பமும் கொடுமையும் இருளும் ஒழியவே ஒரு திருமுருகன் வந்து உதித்தனன். நம்மை வருத்தும் துன்பம் கடல் போன்றது. நம்மை ஒறுக்கும் கொடுமை மலை போன்றது. இவற்றை நசுக்குபவன் அந்த வெற்றி வடிவேலன்; வீரத்திருக்குமரன்; வண்ணப்பாலகன்.

சரவணப்பூம்பள்ளியிலே அறுவர் கார்த்திகைப் பெண்கள் அளித்த திருவமுது கடைவாய் ஒழுக அன்று அழுதான் முருகன். குழந்தை அழுத அரவம் கேட்டுக் கடலும் மலையும் சூரும் கலந்து அழுது கலங்கின. முருகன் 'திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பால் அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர் கொங்கை விரும்பி' அழுதான். அதைக் கேட்ட உடனே, ''பெரும்பாவியாகிய சூரபன்மனுக்கு இடம் கொடுக்கப்போய் அல்லவா நாம் அழிந்து படப்போகிறோம்'' என்று கடல் அழ ஆரம்பித்தது. அந்த வண்ணப் பாலகனின் வடிவேலினுல் சூரனுடைய கவசம் போல் இருக்கின்ற நாம் தவிடு பொடியாகப் போகின்ற காலம் வந்துவிட்டதே என்று கிரௌஞ்சாசுரனும் அழுவதற்கு ஆரம்பித்தான். 'நானே பிரமம்' என்று இறுமாந்து எண்ணில்லாத தீமைகளைப் புரிந்து கொடுமை செய்து வந்தோம், இனி நம்முடைய சுதந்திரமும் ஏகபோக வாழ்க்கையும் பறி போய்விடப் போகின்றனவே என்று சூரன் அழ ஆரம்பித்தான். சரவணப் பொய்கையில் படுத்து முருகன் அழுதான். அந்த அழுகையின் எதிரொலி போல் கடல் அழுதது; குன்று அழுதது; சூரன் அழுதான் என்று அழகு படச் சொல்கின்றார் அருணகிரியார்.

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர்கொங்கை
விரும்பிக் கடல்அழக் குன்றழச் சூர்அழ விம்மிஅழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என் றேதும் குவலயமே

இந்த அலங்காரப் பாடலிலே ஆண்டவனது அவதாரத்தையும் அவனது திருவிளையாடல்களையும் மிகவும் அலங்காரமாகப் பாடுகிறார் அருணகிரியார்.

முருகனது வருகை நமக்கு வாழ்வு தருவதற்கேயாகும். அவனை உள்ளத்தில் கொண்டிடில் நமது ஊறுகள் தேய்ந்திடும். வேலை எண்ணிடில் வீரம் பிறந்திடும். அவனை நெஞ்சில் இருத்திடில் நேரில் வருவான். நாம் கள்ளம்

இழைத்திடில் அவன் காலவேல் பாய்ந்திடும். காலைப்பிடித் திடில் அருளும் கைமேல் கிடைத்திடும்.

**ஆடிவரும் முருகன்:**

முருகன் தேர்மேல் ஆரோகணிக்க வரும்போது ஆடி ஆடி வருகின்ற காட்சி சொல்லில் அடங்காது; சொல் லுக்குள் நிற்காது. அவன் ஆடுகிற போது திருவருள் வெள் ளத்திலே உலகமே ஆடுகிறது:

ஓராறு முகம்ஆட ஈராறு புசம்ஆட
ஓங்குவடி வேலும் ஆட
உச்சிதக் குண்டலமும் கச்சித முடிஆட
ஒளிவான சுட்டி ஆடப்

பாரான தண்டையும் பாதச் சிலம்பாடப்
பணிந்திடும் பக்தர் ஆடப்
பன்னிரு கரம்ஆடப் பணிந்தபூ ஷணம்ஆட
பவளவெண் குடைகள் ஆடத்

தோராத மயில்ஆடக் கோழித்து வசம்ஆடத்
துலங்குநீர்க் காவி ஆடத்
தொண்டர்கள் முதலான சண்டிகேஸ் வரர்ஆடத்
தொந்தநவ வீரர் ஆடத்

தாராத நவமுனிவர் தாளுட நீயாடித்
தமியனேன் முன்பு வருவாய்
தகதகென மயில்ஏறித் திருநடனம் ஆடிவரும்
தணிகா சலக்க டவுளே.

என்ற பாடல் இங்கே நினைவுக்கு வருகிறது.

முருகப்பெருமான் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனின் புதல்வன் அல்லவா! எனவே, அந்தத் தகப்பன் சாமியின் ஆட்டத்தைப் பற்றிப் பேச நாம் யார்?

**வடம் பிடிக்க வாருங்கள்:**

'மறுவில் கற்பின் வாள்நுதல்' ஒரு புறமும் 'குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளி' மற்

றொரு புறமும் ஒய்யாரமாக இருக்க ஆறுமுகப்பெருமான் தேர்மேல் இவர்ந்து ஆடி ஆடி அசைந்து வரும் காட்சி வர்ணனைக்கு அப்பாற்பட்டது. பூரண சந்திரனைக் கண்டு கடலானது பொங்குவது போலே ஆறுமுக வேலனின் அழகு ஒழுகு திருக்கோலத்தைக் கண்டு அடியவர்களாகிய சமுத்திரம் ஆனந்த மேலீட்டால் பொங்கி அலை மோதுகின்றது.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

நண்ணினர்க்கு இனியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க்கு இறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற்கு அரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்

தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்
மேவலர்க்கு இடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க்கு எளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்

—கந்தபுராணம்

என்ற பிரார்த்தனை வானைப் பிளக்கின்றது. பாடுவார், பரவுவார், அஞ்சலி செய்வார் மத்தியிலே சித்திரத் தேர் ஆடி வருகிறது. அன்பு எனும் வடத்தினைப் பூட்டி அடியார்கள் ஆசையோடு ஆறுமுகப் பெருமானை இழுத்துச் செல்கிறார்கள். தேர்வடம் பிடிக்கும் பாக்கியம் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்க்கின்றவர்கள் அருகே நிற்கிறார்கள். அவர்கள் கையும் தலைமிசை புனை அஞ்சலியனவாகவும் கண்ணும் பொழி மழை ஒழியாதனவாகவும் ஆனந்த பரவசத்தில் அசைய முடியாமல் நின்றுகொண்டே பாடிப் பரவுகிறார்கள்.

செல்லூர் பொழில்சிறக்கும் செம்மைத் திருநகராம்
நல்லூரில் கந்தன் நயவிழவில் — புல்லி
வடம்பிடிப்பார் இவ்வுலக வாழ்வுஅகன்றால் முத்தி
இடம்பிடிப்பார் ஐயம் இலை.

என்ற பேருண்மையினுல் வடத்தைப் பிடித்துவிட வேண்டும் என்று வலிந்து அங்கும் இங்கும் ஓடிப் பார்க்கிருர்கள்.

நம்பன் முருகன்எழில் நல்லூர்த் திருத்தேரில்
உம்பர் புகழவந்து ஊர்கின்ருன் — பம்புமந்தக்
காட்சியினைக் காணக் கடுகி வருவீரேல்
மாட்சிமிக ஓங்கும் வளர்ந்து

நடம்பிடிக்கும் ஈசன்மகன் நல்லூர் முருகன்
இடம்பிடிக்கும் தேரில் இவர்ந்தான் — வடம்பிடிக்க
வாருங்கள் எல்லா வளமும் உறக்கவலை
தீருங்கள் உண்டு செயம்.

உள்ளத்தை ஈர்க்கும்எழில் உள்ளோன்நல் லூர்க்கந்த
வள்ளலின்று தேரில் வருகின்ருன் — அள்ளி
வடம்பிடிக்க வாருங்கள் வந்தால் துறக்கத்
திடம்பிடிக்க லாகும் இனிது

நல்லூர்வாழ் கந்தன் நணுகுகின்ருன் தேரின்மேல்
பல்லூர்வாழ் மக்கள் பரிந்துவந்தார் — எல்லீரும்
வாருங்கள் தேரின் வடம்பிடித்து மிக்ககளி
கூருங்கள் உள்ளம் குளிர்ந்து

செய்ய கதிர்வேலன் தேங்கடம்ப மாலையினுன்
ஐயன்எழில் நல்லூரில் ஆறுமுகன் — பையவே
தேரூர்வான் கும்பிட்டுத் தேரின் வடம்பிடித்தால்
பாரூர் பிறவி படும்

இவ்வாறு பாடிக்கொண்டு நிற்பவர்கள் தேரின் வடத்தைப் பிடிக்காமலா நிற்பார்கள்?

தேரின்மேல் கட்டிய சேவற்கொடி ஆடுகிற கோலத்தைப் பார்க்கிறபோது கம்பன் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது.

**மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து**
**செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்**
**கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்**
**ஐயனை ஒல்லை வாஎன்று அழைப்பது போன்ற தம்மா**

''செய்யவளாம் சீதை மிதிலையிலே இருக்கிறாள்; வா'' என்று ஐயனை அந்தக் கொடிகள் அழைத்தன. ''இங்கே திருவருள் பொங்கித் ததும்பிப் பூரணமாய் இருக்கின்றது. வாருங்கள்; வாருங்கள்'' என்று இந்தக் கொடி வாஞ்சையோடு அடியார்களை அழைக்கின்றது.

எள்ளுப்போட்டால் எள்ளு விழாத அடியார் கூட்டத்தின் நடுவிலே தேர் ஆடி அசைந்து கொண்டு வருகின்றது. குருடாயும் செவிடாயும் முடமாயும் முதுமையாயும் நோயுடன் கூடி அணுகமாட்டாது ஆவலோடிருக்கும் அடியார்களைத் தேடிச் சித்திரத் தேரிலே ஆரோகணித்துத் திருவருள் கொடுக்க வருகிறான் நல்லைநகர்ச் செவ்வேள்.

**நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே**
**ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை**
**கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்**
**செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.**

என்ற திருவிசைப்பா முருகனின் திருக்காதில் கேட்காமலா இருக்கும்!

**காவடி ஆட்டம்:**

காவடி கொண்டு ஆடுவார் பக்தியில் உன்மத்தராகி ஆடுகிறார்கள். ''தாதெய் தாதிமி தாதெய் தாதிமி தாதெய் தாதிமி'' என்ற தாளத்துக்கு ஆடுகிற ஆட்டம் அருள் ஆட்டம்; அப்பன் அருள் ஆட்டம். ஓடி விளையாடு பாப்பா முதல் ஆடி அடங்கிய தாத்தா வரை காவடி கொண்டு ஆடுகிறார்கள். ஆட்டத்துக்கு என்றே வாசிக்கின்ற மேளவாத்தியத்தை அருகே நின்று கேட்பவர்களும் ஆடத் தொடங்கி விடுகிறார்கள். எல்லாம் முருகன் அருள் ஆட்டம்; எத்

தனையோ அடியார்கள் தம்மேனி எங்கணும் வேலைப் பதித்து இருக்கிறார்கள். அலகினூடே ஏற்றப்படும் வேலாயுதம் அலகில் கவலை எல்லாம் போக்குகின்றது என்ற பெரு நம்பிக்கையினால் அலகில் உள்ள வேலுடன் முருகனை ஏத்திப் போற்றுகிறார்கள். உலகத்திலே அவர்கள் உடல் இருக்கிறது; உள்ளம் முருகனிடத்திலே இருக்கிறது. திரு வருள் உறைப்பிலே இருப்பவர்கள் வேறெந்த உறைப்பை யும் பொருட்படுத்த மாட்டார்கள்தானே! நேர்கடனை முடிக்கக் காவடி எடுப்பவர்கள் ஒரு புறம்; அடி அழிப் பவர்கள் ஒரு புறம்; அங்கப் பிரதட்சிணம் செய்பவர்கள் ஒருபுறம்; உச்சி வெயிலையும் பொருட்படுத்தாது உருண்டு உருண்டு அடியவர்கள் வருகின்ற காட்சி உள்ளத்தைத் தொடுகின்றது.

> நாளென் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
> கோளென் செயும்கொடுங் கூற்றென் செயுமகும ரேசஇரு
> தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
> தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே

என்ற அலங்காரப் பாடல் அடியவர்களின் இரத்தத்திலே ஊறி இருதயத்திலே அடிக்கிறது. தேரின்மேல் ஆரோ கணித்திருக்கும் முருகப்பெருமானுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும் என்று 'கியூ' வரிசையில் நின்று கொண்டிருககும் அடியார்களின முறுகிய பக்தியை என்னென்போம்!

**அர்ச்சனை செய்தல்:**

தாம்பாளத்தில் அர்ச்சனைக்குத் தேங்காய், பழம் முத லியன கொடுக்கிறார்கள். அர்ச்சகர் இவற்றை வாங்குகிறார். கத்தியால் தேங்காயை உடைக்கிறார். நைவேத்தியம் பண்ணுகிறார். கர்ப்பூர தீபாராதனை நடக்கிறது. அர்ச்சகர் - ஞானகுரு; கத்தி - திருவருட்சக்தி; கர்ப் பூரம்-ஞானம்; மூர்த்தி-சிவம்; தேங்காய்-ஆணவம்; பழம் முதலியன-கன்மமாயாமலங்கள். ஞானாசாரியரின் ஞானோப தேசத்தினால் திருவருட்சக்தி தோன்றி ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் அழித்து அவைகளை அர்ப்

பணம் செய்யச் சிவஞானம் தோன்றும். அந்த ஞானப்பிரகாசத்தினலே சிவத்தைத் தரிசிக்க வேண்டும் என்பதை முற்றுக முழுதாக அறிந்தவர்கள் இந்த மெய்யடியார்கள்.

**தேங்காய் உடைத்தல்:**

மலைபோலத் தேங்காய்களை நான்கு வீதிகளிலும் குவித்து வைத்திருக்கிறுர்கள். இவற்றை எல்லாம் சிதற அடித்துத் தத்தம் பக்தியை முருகனுக்குக் காட்டுகிறுர்கள். தேங்காயின் உள்ளே இருக்கும் இளநீர் அருள் வெள்ளம்; ஆன்மா தேங்காயின் பருப்பு; ஆன்மாவை உலக ஆசா பாசங்களாகிய மட்டை தும்பு போன்றன சுற்றி இருக்கின்றன. ஆன்மாவை ஆணவம் இறுகப் பிடித்திருப்பது போல சிரட்டை மிகவும் கடினமாகத் தேங்காயைப் பற்றிக் கொண்டு இருக்கின்றது. நாம் செய்த பாவங்கள் எல்லாம் திரண்டு தேங்காய் போல் உருண்டு இருக்கின்றன. அப்பெருமான் முன்னிலையிலே அப்பாவங்கள் எல்லாம் சிதறிப் போகின்றன என்ற பெருங்கருத்து அமையவே தேங்காயைச் சிதற அடிக்கிறுர்கள். முருகப்பெருமான் அருளினலேயே நாம் செய்த பாவங்கள் சிதறும் என்ற பெரிய தத்துவமும் தேங்காயைச் சிதற அடிப்பவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்?

**பச்சை சாத்துதல்:**

முருகனுக்குப் பச்சை சாத்தும் கைங்கரியம் ஆற்புதமானகாட்சி முருகனின் திவ்விய கோலம் பச்சையாகவே காட்சி தரும். செவ்வேள் பச்சையாகி விடுவான். தேவியர் இருவரும் பச்சையாகி விடுவார்கள். அர்ச்சகர்கள், கோயில் அறங்காவலர் எல்லோருமே பச்சையாகி விடுவார்கள். எல்லாம் பச்சை! எதுவும் பச்சை!! அருளுக்காகத் தவங்கிடக்கும் அடியார்களின் உள்ளமுமே பச்சையாகி விடும். எல்லா ஜீவராசிகளுக்கும் அருள் தரும் சதாசிவ மூர்த்தி தானே என்பதைக் காட்டி நிற்கும் பச்சைக் கோலம் பார்க்கப் பார்க்க அழகு சொட்டிக் கொண்டே நிற்கும்.

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்.

என்ற கந்தபுராணப் பாடல் இங்கே நினைவுக்கு வருகின்றது.

## முருகன் அழகு:

முருகன் அற்புதத் தெய்வம்; அழகுத் தெய்வம். ஆறுமுக கோலத்துடன் அவன் தரும் காட்சி சொல்லால் எவ்வாறு ஒருவர்க்குச் சொல்லமுடியும்? விளக்க முடியாத-பேச முடியாத நிலை. ஆனால் அப்பெருமானின் அழகு ஒழுகு கோலத்தைத் தரிசித்த அருளாளர்கள் நமக்குச் சொல்லாமல் சும்மா இருப்பார்களா? அவர்கள் தாம் கண்டனவற்றை சொல்லால் வடிக்கிறார்கள். இதோ கந்தர் சட்டி கவசம் காட்டும் சொல்லோவியம்.

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க

முருகன் எழுந்தருளுவான். முருகனின் மெய்யடியார்கள் இங்கே மற்றவர்களின் உடை அலங்காரத்தையும்

நடை அலங்காரத்தையும் பார்ப்பதாக இல்லே. முருகன் அருள் அலங்காரத்தையே பார்க்கிருர்கள்; பரவசப்படுகின்ருர்கள். முருகன் அழகைவிட வேருேர் அழகான பொருள் இந்த உலகத்திலே இருக்க முடியுமா?

முருகன் மங்காத அழகன்; மாருத அழகன்; அவன் என்றும் இளேயோன்.

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலேய பூதப் பொருபடையாய் — என்றும்
இளேயாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளேயாய்என் உள்ளத் துறை

என்பது ஒரு பழைய பாடல். அவனின் பேரழகுத் திருக்கோலத்தைக் குமரகுருபர சுவாமிகள் முத்துக்குமாரசுவாமி பிள்ளேத் தமிழிலே சொல்லாலே கோலம் செய்கின்ருர்.

வடிவின் அழகும் எழுத அரிய புயமும் நறிய செச்சையும்
மருமம் விரவு குரவும் அரையின் மணியும்
மணிகொள் கச்சையும்
கடவு மயிலும் அயிலும் ஒழுகு கருணே வதன பற்பமும்
கமல விழியும விழியும் மனமும் எழுதி எழுதி
நித்தலும்
அடிகள் எனஉன் அடிகள் பணியும் அடிய ரலது மற்றும்வே
றமரர் குழுவும் அகில மறையும் அரியும் அயனும்
முற்றும்நின்
முடியும் அடியும் உணர அரிய முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே

அவனுடைய அழகினேக் கண்டு களித்தவன் சூரபன்மன். முருகப்பெருமானுடைய பேரழகைப் பகைவனே போற்றுகின்ருன் என்ருல் நாம் என்ன சொல்ல இருக்கிறது? அப்பெருமானுடைய ரூப லாவண்யத்தை அண்ணுந்து பார்த்துக் குனிந்து பார்த்து நுகர்ந்த பேறு சூரனுக்கு உண்டு. அது அவன் செய்த பூர்வ புண்ணியம்; தவப்பலன்.

முருகனின் பேரெழிலை முற்முக முழுதாகச் சூரனுமே காணமுடியவில்லை. உலகம் மன்மதனைப் பேரழகன் என்று சொல்கின்றது. அந்த அழகனும் மன்மதன் எம்பெருமான் திருமுன் நிற்க முடியுமா? எல்லை காட்டிச் சொல்ல முடியாத அழகும் திருவும் உடைய அந்தப் பேரழகனின் திருவடியில் உள்ள அழகின் ஒரு பகுதிக்காவது ஆயிரம் கோடி மன்மதர்களுடைய அழகு திரண்டு ஒன்முகச் சேர்ந்து உருவம் எடுத்தாலும் ஈடாகுமா? பைத்தியகார உலகம் மன்மதனைப் பேரழகன் என்று சொல்கின்றதே! அப்பெருமானுடைய தூய அழகு சூரனுக்குத் தெரிகின்றபோது பெருமானின் திருவுருவத்துக்கு உவமை சொல்லமுடியுமா என்று திகைக்கின்முன். திருவடியில் அவன் கண்ட பேரழகு அவனைத் தூயவனுக்கி விடுகின்றது. அவனிடத்திலே தலை தூக்கி நின்ற நான் என்ற அகங்காரமும் எனது என்ற மமகாரமும் மறைகின்றன. எல்லாம் இறைவன் மயமாக அவனுக்குத் தோன்றுகின்றன. அறியாமை இருள் அகல்கின்றது. திருவடியிலே அவன் கண்ட பேரழகு திருவடி ஞானத்தையே உண்டாக்கி விடுகின்றது. முருகன் நினைவு ஒன்றே தலைதூக்கி நிற்கின்றது. மலச்சார்பு அற்ற திருவடியின் பேரழகை நேருக்கு நேரே கண்டு அநுபவித்தவனுக்குப் புதியதாகப் போதம் புகுகின்றது. பிரபஞ்சமே புதியதாகக் காட்சி தருகின்றது.

ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்டொன் முகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்ரு தெனறிடின் இனைய
தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.

முருகப்பெருமானின் தூய அழகை அநுபவித்தவன் வேறு எப்படிப் பாடுவான்? இறைவன் பேரழகைக் கண்ட மாத்திரத்திலே அவனுக்கு என்றும் இல்லாத உருக்கமும் உணர்வும் தலை எடுக்கின்றன. காலத்தினுலும் இடத்தினுலும் எல்லைகாட்டி அறியமுடியாத அருள் வடிவத்தை எத்தனை காலம் பார்த்தாலும் திருப்தி அடையமுடியாது

என்பதை உணர்கின்றான். கண்கள் பார்க்கின்ற பேரழகினாலே கருத்திலேயே மாற்றம் ஏற்படுகிறது. கருத்து இன்பப் பொங்கல் இடுகிறது. அகங்கார மமகாரப் பிழம்பாக விளங்கிய சூரனின் சூரத்துவம் மறைகின்றது. போதம் புகுந்தால் சூரத்துவம் போகாமல் இருக்கமுடியுமா, என்ன? அந்நேரத்திலே தன்னுடன் எம் பெருமான் போருக்கு எழுந்தருளி வந்தமை அருள் என்றே முடிபு கட்டிவிடுகிறான். போர்க்களத்தைத் திருக்கோயி லாக்கிப் போரைத் திவ்விய தரிசனமாக்கி எழுந்தருளிய எளிவந்த தன்மையை நினைந்து பார்க்கிறான். தான் பெற்ற பெரும்பேறு அது என்றும் தனக்கு அருள் செய்ய எம் பெருமான் எழுந்தருளி வந்திருக்கிறான் என்றும் வேறு எந்த வகையிலும் அருள்தர முடியாது என்று போருக்கு வந்து அருள்தர எண்ணி இருக்கிறான் என்றும் பெருமிதம் கொள்கின்றான்.

அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம் எத்திறம் நோக்கி னாலும்
கண்ணினால் அடங்காது உன்னில் கருத்தினால்
அடங்காது என்பால்
நண்ணினான் அமருக் கென்கை அருளென நாட்ட லாமே.

கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத காட்சியுடன் போர் செய்தமை தன்மீது வைத்த பெருங் கருணை என்றே பகைவனான சூரன் சொல்கின்றான்; அந்தப் பேரெழிலை வேறொருவரும் சொல்லமுடியாத அளவில் சூரனே சொல்லி விட்டான்!

இவற்றை எல்லாம் நன்றாக அறிந்தவர் அருணகிரி நாதர். திருச்செங்கோட்டு முருகனைத் தரிசிக்க வருகிறார். முருகனின் திருக்காட்சி தெரிகின்றது. இந்த இரண்டு கண்களினால் மாத்திரம்தானே பெருமானுடைய சுந்தரக் காட்சியைப் பார்க்கிறேன்? செங்கோட்டு முருகனைக் கண்டு தொழ அந்த நான்முகன் நாலாயிரம் கண்களைப் படைக்க வில்லையே என்று பாடுகிறார்.

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்திலனே அந்த நான்முகனே.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, செங்கோட்டுச் சிங்கார வேலனைக் கண்குளிரக் கண்டு தொழ நாலாயிரம் கண் வேண்டும் என்று அங்கலாய்க்கிறார் அருணகிரியார். அந்தச் செங்கோட்டுச் சிங்கார வேலன் மன்றுடி மைந்தன் அல்லவா! அந்த மன்று தொழுடிய வள்ளலின் அழகை அப்பர் பாடுகிறார்.

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டு வதேஇந்த மாநிலத்தே

நடராஜ மூர்த்தி—கனகசபை மேவு குருநாதன் காமுறும் அழகு அகிலாண்டங்களையும் வசப்படுத்தும்,

''மன்றுதொ ழுடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ழுடிய குமரற் போற்றுவாம்''
என்பது கச்சியப்பர் பாடல்.

அந்தத் தீர தீர தீராதி தீரப் பெரியோன்-தேவ தேவ தேவாதி தேவப் பெருமானின் பேரழகைப் பிள்ளைத் தமிழ் பாடுகின்றது. இதோ அந்தப் பிள்ளைத்தமிழ்:

கமலமட மங்கைவத னத்தழகு காண்பள்அக்
கரியமுகில் வண்ண னும்செங்
கண்ணழகு காண்பன்வளர் கலைவாணி சொல்லழகு
காண்பள்முக் கட்தா தையும்

விமலமுறு சொற்பொருளின் அழகு காண்பன்விதி
வியன்கரத் தழகு காண்பன்
வீறுதோள் அழகிந்திராணி காண்பள் உப்பர்
வேந்துவேல் அழகு காண்பன்

நிமலமன அடியரடி அழகு காண்பார்கவுரி
நின்றுபின் அழகு காண்பாள்
நின்னைத்த ஆதித்தன் வடிவழகு காண்பன்ஒரு
நீயுமவ ருடன்கு ழுமியே
அமலமென் னகையழகு காணலாம் சமயமீ
தம்புலீ ஆட வாவே
அம்புய தடங்குலவு கம்பைவளர் கந்தனுடன்
அம்புலீ ஆட வாவே

நாம் அழகு அழகு என்று அலைவதெல்லாம் ஒருநாள் அருவருப்பாகவும் போகலாம். ஆனல் இறைவன் திருக் கோலப் பேரெழில் என்றுமே குறையாதது; மங்காதது; மாருதது. அந்த அழகை இரசிக்கத் தொடங்கினுல் ஏனைய அழகுகளின் அலங்கோலம் தெரியும். முருகன் என்றுமே மாருத அழகும் மங்காத இளமையும் வளமான திருக்கோலமும் உடையவன். இளமையும் அழகும் ஒன்றி நிற்கும் போது பேரெழிலைப் பற்றிப் பேசவும் வேண்டுமா? முருகு என்பதன் பொருள் பேரழகு, தெய்வத்தன்மை, மணம், இளமை என்பனவாகும். இந்நான்கு அம்சங்களிலும் சிறந்து நிற்பதனுலேயே முருகன் என்ற பெயரே அப் பெருமானுக்கு வந்து அமைந்தது. இக் கருத்தை ''அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக'' என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே வர்ணிக்கிருர்.

நல்லைநகர் ஆறுமுகப்பெருமான்:

வேலழகா மயில்அழகா விண்ணோர்போற்றும்
மேனிநலந் தனில்அழகா கமலப்பூப்போற்
காலழகா மார்பழகா கைகள்என்னும்
கடிமலரால் பேரழகா மார்பிலார்முந்
நூலழகா இவையெல்லாம் கோயில்கொண்டு
நுனிப்போர்க்குள் சோதியென ஓங்கிநிற்கும்
வாலழகா வள்ளியணை மணவாளாசீர்
மல்குநல்லூர் தனில்நிலவும் கந்தாபோற்றி

அழகு ஒழுகு முருகனை இங்கே நல்லை நகர்த் திருக் கோயிலிலே காண்கிறோம்; கருணை முகம் ஓராறுடனும் காக்கும் கரம் ஈராறுடனும் ஆறுமுகப் பெருமான் தரும் காட்சி சொல்லொணாதது. நக்கீரர் காட்டி அருளிய ஒளி தரும் முகம், அருளும் முகம், வேள்வி காக்கும் முகம், மெய்ஞ்ஞானத் திருமுகம், வீரத் திருமுகம், இன்பமுகம் ஆறினையும் கண்டு பரவசம் அடைகின்றோம். ஏறு மயில் ஏறி விளையாடும் முகம், ஈசருடன் ஞானமொழி பேசும் முகம், கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம், குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம், மாறுபடு சூரரை வதைத்த முகம், வள்ளியை மணம் புணர வந்த முகம் என்ற திருப்புகழ் ஆறுமுகத்தையும் கண்டானந்தம் அடைகின்றோம். ஆறுமுக நாதனின் உதட்டிலே தவழும் புன்னகை பரவசம் ஊட்டுகின்றது. இடையிலே கச்சை, காலிலே வீரக்கழல், கழுத்திலே முத்தாரம், தோளிலே வாகுவலயம் மார்பிலே யக்ஞோபவீதம்; இவை மூர்த்தியின் திவ்வியரூப சௌந்தர்யத்தையும் வீரத்தையும் பறைசாற்றுகின்றன. மயில் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. சிங்காரவேலன் ஒய்யாரமாக நிற்கிறான். போகமுறும் வள்ளியும் புத் தேளிர் பூங்கொடியும் இருமருங்கும் எழில் பொழிய நிற்கிறார்கள். இந்த ஆறுமுகன் முன்னிலையில் நிற்கும் போது நான் என்ற அகந்தை அடியோடு நலிவுற்றுப் போகின்றது. வேல் ஏந்தி இருக்கும் அழகு ஒரு தனி அழகு. பார்த்துக் கொண்டிருக்கலாம் பல மணிநேரம்; நினைத்துக் கொண்டிருக்கலாம் பல வருடங்கள்; பாடலாம் பல்லாயிரம் தரம். பச்சை மயில் வாகனமும் பன்னி ரண்டு திண்தோளும் அச்சம் அகற்றும் அயில்வேலும் கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகிரணம் சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும் பார்க்கப் பார்க்க அழகு சொட்டிக் கொண்டே இருக்கின்றன. அவன் தேரிலே வரு கின்ற காட்சியைக் காணக் கண் பல்லாயிரம் வேண்டும். அவன் தங்கக் கவசம், கிரீடம், வைரவேல் எல்லாம் உடைய

ராஜ கம்பீர நாடாளும் நாயகன்; அவனே பரம் பொருள். நமக்கு ஆறுதலை அளிக்க அவன் ஆறுதலை காட்டி அருள்வான். அவன் எத்திசையும் நோக்கி அருள் சுரப் பான். புன்சிரிப்புக் கொஞ்சித் தவழும் ஆறு திருமுகமும் பன்னிரு திருப்புயமும் கொண்டு எழுந்தருளும் இச் சுந்தரக் கடவுளைக் காணாத கண் என்ன கண்? அது புண்கண்;

**நல்லைநகர் முத்துக்குமாரன்:**

கந்தப் பெருமான் அழகுத் தெய்வம்; அற்புதத் தெய் வம். முருகன் அழகனாகக் கோலக் குமரனாக உள்ளத்தில் எப்படி உருப்பெறுகிறான் என்றால் நல்லைக் கந்தனின் முத்துக்குமார சுவாமியின் அழகுத் திருக்கோலத்தைப் பார்க்கவேண்டும். முருகன் நல்ல அழகிய சுந்தர மூர்த்தி யாக வேலேந்திய கையுடன் வீறுடன் நிற்கிறான். தங்க மயமான பொன்னாடை புனைந்து இரத்தின கசிதமான அணிகளையும் அணிந்திருக்கிறான். தேவியர் இருமருங் கும் அன்னம் போலவும் மயில் போலவும் விளங்குகிறார் கள். இருவரும் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களுக் குத்தான் விலைமதிப்பு ஏது? இந்த முத்துக்குமாரசுவாமி யின் எழில்மிகு கோலத்தைப் பார்க்கிறபோது ஒரு பழம் பாடல் நினைவுக்கு வருகிறது:

முன்னம் நின் அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்ன முங்கிள்ளிய நாளல்லவே என்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போல்இரு பெண்கொண்ட
ஆண்பிள்ளைநீ
இன்னமும் சின்னவன் தானோ செந்தூரில் இருப்பவனே!

படிக்காசுத்தம்பிரான் திருச்செந்தூர் முருகனை இப்படிக் கேட்டிருக்கிறார். இன்னுமா இவன் சின்னப்பிள்ளை; நாம் முறையிடாமலே அறிந்து கொள்ளும் ஆற்றல், வயது என்பன இவனுக்கு இல்லையா என்றெல்லாம் அவர் அன்று கேட்ட வினாக்களை இந்த நல்லைநகர் முத்துக் குமார சுவாமியை நாமும் கேட்காமல் இருக்க முடியுமா?

நல்லைநகர்ச் செவ்வேள் இத்தனை சௌந்தர்யத்துடன் செல்வந்தனுக்குக் காட்சி தருகின்றபோது நம்முடைய குறைகளை எல்லாம் அவன் அறிந்து அவற்றைப் போக்கி நமக்கு வளவாழ்வு தருவான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

**நல்லைநகர்ப் பழநி ஆண்டவன்:**

திருக்குளத்துக்குத் தெற்குப் பக்கத்திலே வடக்கே பார்த்துக்கொண்டு நிற்கிறான் பழநி ஆண்டவன். வள்ளி என்ற வஞ்சியைக் காதலித்து அவள் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற நிலையையும் தினைப்புனம் காத்து நின்ற வள்ளியின் முன்னே கிழக்கோலம் புனைந்து சென்று அம்மங்கை தன் செங்கையால் தந்த தேனையும் தினைமாவையும் அருந்தி மகிழ்ந்த செய்கையையும் மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி அவளை மணந்து கொண்ட மாண்பையும் தண்டு கொண்டு கோவணாண்டியாக நிற்கின்ற இந்த ஆண்டிப் பண்டாரத்தைப் பார்க்கிறபோது நினையாமல் இருக்க முடியுமா?

கலகப்பிரியர் நாரதர் ஒரு மாங்கனியைக் கொண்டு வருகிறார். அதனைச் சிவபிரானிடம் கொடுத்து ஆசி பெறுகிறார். அப்பன் அதனைப் பார்வதியிடம் கொடுக்கிறார். விநாயகருக்கும் முருகனுக்கும் அந்த மாங்கனியைக் கொடுத்துவிட அன்னையின் உள்ளம் விழைகின்றது. ஆனால் சிவபிரான் ஒரு போட்டியை ஏற்படுத்தி அதனைக் கொடுக்க நினைக்கிறார். ''யார் இந்த உலகை முதலிலே சுற்றி வருகிறார்களோ, அவர்களுக்கே இந்தக் கனி'' என்று போட்டியையும் சொல்லி விடுகிறார். மூஷிக வாகனனான விநாயகர் வெற்றி பெறவே முடியாது என்று நினைக்கிறான் முருகன். மயில் வாகனத்தில் ஏறிக் கொண்டு புறப்படுகிறான் முருகன். விநாயகர் அன்னையையும் அத்தனையும் வலம் வருகிறார். மாங்கனிக்குக் கை நீட்டுகிறார். ''உலகம் சுற்றியாகி விட்டதா'' என்று கேட்கிறார் சிவபெருமான். ''உலகம் எல்லாம் தோன்றி நின்று ஒடுங்குவது உங்களிடம்தானே;

உங்களைச் சுற்றினால் உலகத்தைச் சுற்றியதாகாதா?'' என்று கேட்கிறார் விநாயகர். மிக மகிழ்ந்த சிவபெருமான் கனியைக் கொடுத்து விடுகிறார். உலகத்தை சுற்றி வந்த முருகன் இதனை அறிகிறான். அண்ணனைப் போல் தானும் ஞானவானாகி விடவேண்டும் என்று உடைமைகளைத் துறந்து கோவணாண்டியாகிப் புறப்பட்டு விடுகிறான். தாய் தன் பிள்ளை இளவயதிலேயே கோவணாண்டியான நிலையை நினைந்து சமாதானப் படுத்த வருகிறாள். ''அப்பா, நீயே ஞானப் பழமாக இருக்கும் போது உனக்கு வேறு பழமும் வேண்டுமா'' என்று சமாதானம் செய்கிறாள். முருகன் ஒருப்படுவானா? முன்வைத்த காலைப் பின்வையாத தீரன் அல்லவா அவன். பழநி மலையிலேயே நின்று விடுகிறான். இந்தப் பழநி ஆண்டவனைப் பார்க்க வேண்டுமானால் நல்லூரில் நடக்கும் மாம்பழத் திருவிழாவில் பார்க்க வேண்டும். ஆபரணாதிகளைக் களைந்து ஆண்டி வேடம் போட்டுக் கொண்டு வருகின்ற கோலம் கண்கொள்ளாக் காட்சி. இவன் மொட்டை ஆண்டியாகவே காட்சி தருகிறான்.

இங்கே ஒரு திருக்குறள் நினைவுக்கு வருகின்றது.

**வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டுஇயற் பால பல**

இவ்வுலகத் துன்பங்களிலிருந்தும் நாம் விடுபட வேண்டுமானால் உடைமை என்று கருதுகின்ற பொருள்களில் உள்ள ஆசையை விட்டுவிட வேண்டும். அவ்வாறு ஆசையை விட்டுவிடில் பெறவேண்டிய பேறுகளைப் பெறலாம்.

நம்மை ஆக்கம் உடையவர்களாக்கி விடவேண்டும் என்ற கருத்தினால் அல்லவா இந்த அற்புதக் கடவுள் கோவணாண்டியாகிக் காட்சி தருகிறான். பரமேஸ்வரன் பிக்ஷாடனனாகிக் கபாலம் ஏந்திப் பிச்சைக்குப் புறப்படுகிறானே! அன்னபூரணி வீட்டிலே இருக்க இவனுக்கு ஏன்

இந்தப் பிச்சை என்று தானே கேட்கத் தோன்றுகின்றது. ஆம்! அவன் நம்முடைய ஆணவத்தை அகங்காரத்தைக் கேட்டு அல்லவா தமருக ஒலியைக் கிளப்புகிறுன்! நம்மை ஆக்கம் உடையவர்களாக ஆக்கிவிட வேண்டும் என்பது அவனின் திருவுள்ளக் குறிப்பு.

**நல்லைநகர் வேற்பெருமான்:**

கருப்பக்கிரகத்திலே இடம் பிடித்திருக்கின்ற வேற் பெருமானைப் பற்றியும் சில சொல்லத்தானே வேண்டும்; வேல் ஞானசக்தியின் வடிவம். முருகன் அன்றி வேல் இல்லை. வேல் இன்றி முருகன் இல்லை. அது அவனது சக்தி. மல இருளைக் கெடுத்து ஞான ஒளியைக் கொடுத்து அருள் தருவது வேல். வேல் இன்றி வேறு துணை நமக்கு இல்லை. வேல் என்றவுடன் வீரம் நம்முன் வந்து நிற்கும். 'பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே' என்று அருணகிரிநாதர் பாடவில்லையா?

இளையபிரானுடைய வேல் அன்றும் இன்றும் பக்தர் களுக்குப் பாதுகாப்பாகவே நின்று நிலவுகின்றது.

துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுத லறக்களையும்
எனக்கொர்துணை யாகும்

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்தும்இரு புறத்தும்அரு கடுத்துஇரவு
பகல்துணைய தாகும்

என்று வேல் வகுப்பிலே பாடுவார் அருணகிரியார்.

கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி பாடிய அருண கிரியார், ''ஆடும் பரிவேல் அணிசே வலெனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்றுதானே வரம் கேட்கிறுர்.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன் கைவேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

— திருமுருகாற்றுப்படைப் பயன்

இத்துணைப் பெருமை பெற்ற வேல் நம்முடைய நாம மந்திரம். காமக்கணிகையர் கலவியிற் பட்டாலும் நாம வேலின் நன்மந்திரத்தை மறவேன் என்று குரல் எழுப்பி இருக்கிறார் அருணகிரியார்.

கட்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொட்டுண்டு அயர்கினும் வேல்மறவேன்

என்பது அவர் பாடல்.

நம்மைச் சூழ இருக்கும் பகைகளுக்கு எல்லை இல்லை. உடலைப் பிணி என்ற பகை வருத்துகின்றது. அறிவை மயக்கமாகிய பகை கெடுக்கின்றது. நம்மை வருத்தும் இப் பகைகளை விரட்டி ஓட்ட வேண்டுமானால் வடிவேலுடன் அந்த வண்ணப் பாலகன் வரவேண்டும். தூய உடல் நமக்கு வேண்டும். தூய மனம் நமக்கு வேண்டும். தூய அறிவும் நமக்கு வேண்டும். இவற்றை நமக்குத் தருவது ஞானவேல்.

வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளி வருகுது வேல்.

என்று பாடி வேலுக்கு ஏற்றம் கொடுக்கிறுன் பாரதி. வேலின் ஒளி சிவஞான ஒளி. சண்முகன் சக்தி ஞான வடிவேல். அது முத்தி தரும் மூவாமருந்து:

ஞானசக்தி எனும்வேலைக் கையிற்கொண்டாய்
நண்ணும் அந்த வேலினிலே நினை அமைத்து
மேனவிலும் ஆவாக னத்தைச்செய்து
விழைந்துபெரி யோர்போற்ற நல்லூரின்கண்
வானவரும் போற்றஇடம் கொண்டாய்நின்றன்
மகிமைக்கோர் அளவுண்டோ கலியுகத்தில்
ஊனமறக் கண்கண்ட தெய்வம்என்றே
உரைக்கின்ற பெருமானே போற்றிபோற்றி.

நல்லைநகரில் ஒரு பிள்ளையார்:

நல்லைக்கந்தன் ஆலயத்திலே தென்மேற்கு மூலையிலே அசைக்க முடியாத பிள்ளையார் அசையாத நம்பிக்கையை ஊட்டிக் கொண்டு இருக்கிறுர். ஓத வினை அகலும், ஓங்கு புகழ் பெருகும், காதற்பொருள் அனைத்தும் கைகூடும் என்ற நினைவினுல் இந்த வித்தக விநாயகனைக் குட்டிக் குட்டி அடியவர்கள் கும்பிடுகிறுர்கள், அவர்களின் அசையாத உள்ளத்திலே நீங்காத இடத்தைப் பிடித்திருக்கிறுர் இந்த மூத்த பிள்ளையார், அவர் அங்கே இருக்கின்ற இருக்கையைப் பார்த்தால் நாமும் அங்கே இருந்து விடலாம்போலத் தோன்றுகின்றது. தம்பியின் திருவிளையாடல்கள் அத்தனையையும் பார்த்துக்கொண்டு இருக்கின்ற அண்ணன் மாம்பழத் திருவிழாவிலே தம்பியுடன் போட்டிக்கு வந்து விடுகிறுன்; அவனைக் கோவணுண்டியாக்கிக் குளத்துக்கு அருகே அனுப்பி விட்டுத் தென்மேற்கு மூலைக்கே வந்துவிடுகிறுர், உயிர்ப் பைங்கூழ் தழைக்கக் கருணை மழை பொழியும்

வித்தக விநாயகன் தம்பியைக் கோவணாண்டியாக்கிக் காட்டுகிறான். அது அவன் நபமேல் வைத்த கருணை! மண்ணுலகத்தினில் பிறவி மாசற எண்ணிய பொருள் எல்லாம் எளிதில் முற்றுறத் தந்தருளும் பெருமான் ஓங்கார வடிவினன். அவன் வள்ளிக்கு வாழ்வு அளித்த கதைதான் நமக்குத் தெரியுமே!

**நல்லூரில் நாம் காணும் முருகன்:**

நல்லூரில் நாம் காணும் முருகனின் திருவிளையாடல்களுக்கு எண்ணிக்கை ஏது?

வள்ளி என்னும் வஞ்சியைக் காதலித்து அம் மங்கை தன் செங்கையால் தந்த தேனையும் தினைமாவையும் அருந்தி, வேடனாகியும் விருத்தனாகியும் வேங்கையாகியும் வேலனாகியும் கோலம் காட்டி ஈற்றில் மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி எந்த முருகன் அந்த வள்ளி நாச்சியாரை மணந்து கொண்டானோ அந்த முருகனைத் தானே நல்லையம்பதியில் நாம் இன்று பார்க்கிறோம்.

மையார் களத்தார் வரம்பெற்ற சூரனுக்குச்
செய்யாத ஏவல்எலாம் செய்தோம் நெறிநீதி
எய்யாத மானம் இவைஎல்லாம் தானிழந்தோம்
ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே.

என்று தேவர்கள் முகாரி இராகத்தில் கூக்குரல் எழுப்புகிறார்கள். தேவர்களை வன்சிறையில் அடைக்கிறான் சூரன். வான்சுமக்கும் தேவர்கள் மீன் சுமக்கிறார்கள். சிறையில் அகப்பட்ட சயந்தன் வாடி வருந்துகிறான்; இழந்த நிலையை எண்ணி எண்ணி ஏங்குகிறான்; வானவர்க்கு நேர்ந்த வசையினை நினைந்து நினைந்து கலங்குகிறான்; கண்ணீர் வடிக்கிறான். சிறையிருந்த சயந்தனும் வானவரும் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் வீர மகேந்திரத்துக்கு வேற்படையை வரவழைக்கின்றது. ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாண்ட அந்தச் சூரனை எந்த முருகன்

வேற்படை கொண்டு சம்ஹரித்தானே அந்த முருகனைத் தானே நல்லூரில் நாம் இன்று பார்க்கிறோம்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன்என் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி
லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ.

''ஆருயிர் விடினும் வானோர் அருஞ்சிறை விடுவ துண்டோ'' என்று வீரம் பேசிய சூரனுக்கு இவ்வாறு வாயாரப் புகழக் காட்சி தந்த அந்த முருகனைததானே இன்று நல்லையம்பதியில் நாம் வந்தித்து வணங்குகிறோம்.

அடியார்க்கு முருகன் அருள் செய்யும் கோலம் அழகிய குழந்தைக்கோலம்; பகைவரை மாய்த்து ஒழிக்க அப்பெரு மான் கொள்ளும் கோலம் வீரப்பெருங்கோலம் என்பதை சூரன் அன்று உணர்ந்தான். அதனை நாமும் இங்கே உணாகின்றோம்.

ஐந்து வயது அளவும் வாய் திறந்து பேச வகை அற்று வாயில்லாப் பாலகனாக இருந்த குமரகுருபர சுவாமி களின் திருவாக்கைத் திறந்து கந்தர் கலிவெண்பாவும் பிள் ளைத் தமிழும் ஏனைய பிரபந்தங்களும் கேட்க எந்தச் செந்தூர் முருகன் வாயூறி நின்றானோ அந்தக் குமரனைத் தானே நாம் நல்லைப்பதியில் நல்லைக் குமரனாகப் பார்ககிறோம்.

குடரோடு துடக்கி முடக்கிய சூலை நோயின் கொடு மைக்கு ஆற்றாது அஞ்சி ஒடுங்கிச் சுழன்று துடித்து உயிரைக் கையிற் பிடித்த பகழிக்கூத்தருக்கு மருந்தும் மந்திரமும் பலன் தராது போகவே எந்த முருகன் திருச்செந்தூரிலே அருள் சுரந்து பொல்லாத சூலைநோயை நில்லாது போக்கித் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழைக் கேட்டு மகிழ்ந்தானோ அந்தச் செவ்வேளின் அருட்கோலத்தைத் தானே நல்லூரில் நாம் கண்டு மகிழ்கின்றோம்.

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றிஞல்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

ஆம்! இந்தச் சங்கத் தமிழாம் திருமுருகாற்றுப் படையை எந்த முருகன் ஒரு நக்கீரனைக் கொண்டு பாடு வித்துக் கற்கிமுகியைக் கொன்று எல்லோருக்கும் வாழ்வு அளித்தானே அந்த முருகனே நல்லவர் போற்ற நாவலர் ஏத்த அருளே ஒழுகும் திருமுகம் பொலிய அமுதே உருவாம் தேவியர் சூழ நல்லூராம் ஞானப்பதியிலே காட்சி தருகிருன்.

''எத்துணைக் காலம் திருப்பித் திருப்பிப் படிப்பினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாதது தித்தித்து அமுதூறும் அத்தி அற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணம். இந்தக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பலன்களைத் தாம் தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினுல் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம்; முக்காலும் சத்தியம்.''

— ஆறுமுகநாவலர்

இந்த அரிய கந்தபுராணத்தைத் திகடசக்கர'என எடுத்துப் பாடுக என்று கச்சியப்பருக்கு எந்தக் கந்தப்பிரான் அடி எடுத்துக் கொடுத்தானே அந்தக் குருநாதனைக் தானே நல்லைக்கந்தனுக நாம் இன்று வழிபட்டு நிற்கிறோம்.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவர் உயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்புஎன்று அறிவோம்யாம்
நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கு நம்
நிசிக்கரு அறுக்கும் பிறவாமல்
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும்
நிறைப்புகழ் உரைக்கும் செயல்தாராய்

என்ற சந்தத் தமிழாம் திருப்புகழை அருணகிரியார் பாடவேண்டும் என்ற திருவுள்ளக் குறிப்பால் ''முத்தைத் தரு பத்தித் திருநகை'' என்று அவருக்கு அடி எடுத்துக் கொடுத்துப் பதினாறாயிரம் திருப்புகழையும் கடல் மடை திறந்தால் போல் பாடுவித்த முருகப் பெருமான் தானே இன்று அந்தத் திருப்புகழை நாம் பாடக் கேட்டுக்கொண்டு நல்லூரில் கோலாகலமாக எழுந்தருளி இருக்கிறான்.

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தொடு நாம்பணிந்தால் — நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி — கிளியே
இரவுபகல் காணேனடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி — கிளியே
கவலைஎல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கத்தன் திருவடிகள் — கிளியே
காவல் அறிந்திடெடி.

என்று சிவயோக சுவாமிகள் நம்மை எந்த நல்லூரானிடம் ஆற்றுப்படுத்தினாரோ அவன் திருச்சந்நிதியில் தானே நின்று கொண்டு

பஞ்சம் படைவந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களேடி — கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி.

என்று நாம் பாடுகிறோம்.

நமது சைவாகமத்தின் காவலர் - இன்பக் கனி தமிழ் அமுதம் ஊறும் பாவலர் ஆறுமுகநாவலர் அவதரித்த பழம்பதி அல்லவா நல்லூர்! இங்கே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் சுப்பிரமணியப் பெருமானின் தெற்கு வீதியில் 29-6 69 ஞாயிற்றுக்கிழமை தொடங்கி நாவலர் பெருமான் சிலை உருவில் நிலையாக இருந்து உற்சவங்களைத்

தரிசித்துக்கொண்டே இருக்கிறார். பூத உடலோடு இருந்து மகோற்சவங்களைப் பார்த்து நாவார மனமார நல்லைக் கந்தனை ஏத்திப் போற்றி வழுத்திய நாவலர் ஐயா அவர் கள் இன்று சிலை உருவிலே இங்கே இருப்பதைப் பார்க்க ஆனந்தமாக இருக்கின்றது.

அக் காலத்திலே நெற்றியிலே திருநீறு, தலையிலே சிரமாலை, கழுத்திலே கண்டிகை, கையிலே பவித்திரம் என்பன தரித்துச் சிவ வேடப் பொலிவுடன் நாவலர் பெருமான் நல்லூர்க் கந்தவேளை வழுத்தி வாழ்த்தியமை யைக் கண்ணால் கண்டவர்கள் புண்ணியவான்கள்; மகா பாக்கியசாலிகள். நல்லூர்த் திருக்கோயிலையும் முருகன் திருவடியையும் நாளும் மறவாத நாவலர் எந்தக் கலியுக வரதராகிய சுப்பிரமணியப் பெருமானைத் தோன்றாத் துணையென நினைந்து வாழ்ந்தாரோ அந்தப் பெருமானைத் தானே இன்று நாமும் ஏத்திப் போற்றுகிறோம்.

**நல்லூரில் நாவலரின் புராணபடனம்:**

நல்லூர்க் கந்தசாமி கோவிலிலே புராண படனம் நடைபெற்று வருகின்றது. ஒருநாள் சூரன் அமைச்சியற் படலம் பயன் சொல்லும் கட்டம் வருகிறது. வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை வாசிக்கிறார். பொருள் கேட்க அடியார் கூட்டம் திரண்டு அங்கே வந்திருக்கின் றது சுப்பிரமணியப் பிரபாவம் பேசுகின்ற பாடல் ஒன்று வருகின்றது. பாடல் இதுதான்:

**வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த**
**போதக் காட்சிக்கும் காணலன் புதியரிற் புதியன்**
**மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்**
**ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்.**

பதப்பொருள் சொல்லி வந்த நாவலர் பொழிப்புரை யையும் சொல்கின்றார். அவருக்குத் திருப்தி இல்லை. ''வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த போதக் காட்சிக்கும் காணலன்'' என்ற பகுதிக்குப் பெரியதொரு வியாக்கியானம் தொடங்குகிறார் நாவலர்.

வேதக்காட்சி பாசஞானம்; போதக்காட்சி பசுஞானம். பதிப்பொருள் இவ்விரு ஞானங்களுக்கும் அப்பாற்பட்டது; இவ்விரு ஞானங்களாலும் அறிய முடியாதது பதிப்பொருளை அந்த ஞானங்களால் அறிய முடியவில்லை என்றால் அது சூனியமோ என்ற வினா எழலாம். பதிப்பொருள் சூனியம் அன்று. பதிஞானத்தினாலேயே பதிப்பொருளை அறியமுடியும்.

சுத்தாத்துவித சைவ சித்தாந்த உண்மையாகிய இந்தக் கருத்தை நாவலர் வியாக்கியானம் செய்கிறார். வியாக்கியானம் விரிந்து பரந்து செல்கின்றது எங்கும் நிசப்தம். வியாக்கியான உலகில் எல்லோரும் கண்ணீர் ததும்ப உரோமம் சிலிர்ப்பத் தம்மை இழந்து இருக்கிறார்கள். சிங்கமுகன் முருகன் பெருமையைக் கூறுகின்றபோது,

ஞானந் தான்உரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும்என் றால்அஃ தெளிதோ
மோனம் தீர்கலா முனிவரும் தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெரும் தலைமை.

என்று பாராட்டுகிறான். அவ்வாறே நாவலரின் விளக்கத்தைக் கேட்ட வித்துவ சமூகங்கள் திருமுருகன் பெருமையை நாமும் அறிய முடியுமா என்று மூக்கின்மேல் விரலை வைத்தார்களாம்.

நாவலரின் பொன்னான வியாக்கியானத்தை நல்லூரில் நாம் கேட்கும் பாக்கியம் பெறவில்லையே என்பதுதான் எம்குறை. எத்தனை நாவலர்கள் தோற்றினாலும் அந்த நல்லூர் நாவலருக்கு நிகர் அந்த நாவலரே என்று சொல்ல ஆசைப்படுகிறோம்.

### நல்லைப்பதியில் ஒரு கலியுகவரதன்:

நல்ல மலர் எடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் நல்ல மயில் ஏறிவந்து முருகன் காட்சி கொடுப்பான்; திருவருள் தருவான். அப்பெரு

மான் கற்றோர்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பாய் இலங்குவான்.

கலியுகம் பிறப்பதற்கு முன் முனிவர்கள் எல்லோரும் வேதவியாசரிடம் ஒரு பெரிய வினாவைக் கேட்டார்கள்: ''இனி, கலியுகம் பிறக்கப் போகின்றது. தர்மம் குன்றி அதாமம் மேல் எழும் கலியுகத்தில் இந்தக் கலியின் கொடுமையை எப்படி நாம் சமாளிக்கப் போகின்றோம்'' என்பதுதான் அந்த வினா. முனிவர்கள் எழுப்பிய வினாவுக்கு வியாச பகவான் உடனடியாக விடை சொன்னார் விடை இதோ: ''கலியுகத்தில் வருகின்ற பாவங்களை எல்லாம் போக்க வல்லது கந்தப்பெருமானது இணையற்ற கீர்த்தி'' முனிவர்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சி; ஒரே ஆனந்தம்.

அந்தக் கலியுக வரதன் நல்லூரிலே இடம் பிடித்திருக்கிறான். அவனுடைய அழியா அழகும் அடங்கா ஆற்றலும் அடியார்க்கு அருளும் அருமையும் சொல்ல முடியாதது; சொல்லி முடியாதது. அவன் வினை தீர்க்கும் வெற்றி வடிவேலன்; அறியாமை இருளை அறவே போக்கிப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியினைத் தரும் ஞானமூர்த்தி; கருணையே உருவமானவன்; விதியாக முன்னின்று தண்ணளி சுரந்து வேண்டிய வரம் கொடுக்கும் கண் கண்ட தெய்வம். அவன் துன்பத்தைத் துரத்தித் துயர்களை விலக்கி அன்பரைக் காக்கும் அருட்பெரு முருகன்; நோய் நொடி இன்றி நூறாண்டு இருக்கத் தூய நல்லுடலைத் துலக்கிடும் முருகன்; எண்ணிய நல்வினை இனிது கைகூடத் திண்ணிய துணைசெய் புண்ணிய முருகன்; கல்வியும் கலையும் காசினிப் புகழும் செல்வமும் திருவும் நல்கிடும் முருகன்; இல்லறமாகிய நல்லறம் ஓங்கச் செல்வக் குழந்தைகள் சேர்த்திடும் முருகன்; மாயத்தைப் போக்கி மனத்தினை அடக்கி தூய சிற்போதம் துலக்கிடும் முருகன்; மடமையை மாற்றி வறுமையைப் போக்கிக் கடமை செய்திடவே கருணைசெய் முருகன். அந்த அருளாளன் எங்கள் வாழ்வுப் பயிருக்கு மழைபோல வருவான். அவமான சிந்தை அழிகாமநோய் இன்றிச் சிவமான நவமான வாழ்வைத்

திருவோங்கத் தருவான். கைவந்த கனிபோல உதவிச் சைவந் தழைத்தோங்க வருவான். அவனால் பெரு வாழ்வு பெற்றார் பலர்? அவனை நெஞ்சத்து இருத்தி நினைத்ததெல்லாம் பெற்றார் பலர். அவனைப் புகழ்ந்து பாடிப் பேரருளும் பெரும்புகழும் பெருநிலையும் பெற்றார் பலர். ஆம்! அவனைச் சேர்ந்து விட்டால் நமக்குத் துன்பம் ஏது? கவலை ஏது? சோர்வு ஏது? சோகம் ஏது?

கருணையினில் உனக்குளவரே ஒப்பார்சூரன்
கவின்மயிலாய்க் கோழியாய் எந்தநாளும்
மருவுநினை அகலாமல் நிற்கும்இன்ப
வாழ்வினைப்பெற் றிலங்குகின்றான் இளமைமாறுத்
திருவுருவம் எழில்உருவம் அதனைநெஞ்சில்
தியானிப்போர் மனத்தாலே இளைஞர் ஆவார்
வருவினைகள் தீர்த்தருளும் தெய்வமேநல்
வளஞ்சாரும் நல்லூரிற் கோவேபோற்றி.

முருகனின் திருநாமங்களுள் கந்தன் என்பது தனிச் சிறப்பு உடையது 'ஸ்கந்த' என்ற சொல்லுக்குப் பகை வர்களுடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கின்றவன் என்பது பொருள்.

ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாக விளங்குபவன் கந்தன். கந்து என்பதற்குப் பற்றுக்கோடு, தூண், யானை கட்டும் தறி என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். எல் லோருக்கும் அந்தப் பெருமான் பற்றுக்கோடாக இருப்ப வன். பாசம் என்கின்ற சேற்றிலே அழுந்திக் கிடந்து துயருறும் உயிர்கள் அதனின்றும் விடுபட்டு வெளிவருவ தற்கு நான் பற்றுக்கோடாக இருக்கிறேன் என்று நல் லூரிலே அப்பெருமான் காட்சி தந்து கொண்டிருக்கிறான். ஆறு திருவுருவங்களாக இருந்த குழந்தையை உமை அம்மை வாரி அணைக்க ஆறு திருமுகங்களுடன் ஒரு குழந்தை ஆன தால் கந்தன் என்ற பெயர் வந்தது என்று கந்தபுராணம் சொல்கின்றது. இதோ அந்தப்பாடல்:

எந்தை சத்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லே
மூந்து போலஒன் ருகியே கூடிய முறைபோல்
அந்தம் இல்லதோர் மூவிரு வடிவும்ஒன் ருகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.

நம்முடைய உள்ளத்துக்கு எத்தனே எத்தனே பற்றுக்கள். இப்பற்றுக்களிஞலேயே உள்ளம் சிதறுண்டு அங்கும் இங்கும் எங்கும் பேயாய் அலேகின்றது. விரிந்து பரந்து சிதறுண்டு கிடக்கும் மனத்தை ஒன்று படுத்தும் பேராற்றலே நமக்குத் தருப்வன் கந்தப்பெருமான். வினேப் பயன்களே விட்டொழிக்க வழி தெரியாது துயரில் அலே மோதித் தடுமாறித் தத்தளிக்கும் உலகத்து உயிர்களே அன்போடு அணேத்து ஆறுதல் அளிக்க அவன் ஆறு தலே யோடு வருகின்ருன். அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்.

சிவபரம்பொருளின் முற்றிய திருவும் மூவா இளமையும் முடிவில் ஆற்றலும் மேலாம் ஞானமுமே கந்தப்பெருமானின் திருவவதாரம். அப்பரம்பொருள் கண்ணுக்கு இனியனுய்க் கலியுக வரதனுய் அடியவர்க்கு எளியனுய் நம்மை வாழ்விக்க நல்லூருக்கு வந்த வண்ணத்தை என்னென்போம்!

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணேகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்திஞல்
அளக்கொ ணுமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி ஞனே.

அருளார் முகமும் அடியார்க்கு அபயம் தரு பொற் கரமும் கருணைப் பொலிவும் கனிவாய் நகையும் திருமார்பு அழகும் திகழும் நல்லைப்பெருமானைப் பார்க்கிறபோது,

ஓங்கொளியாய் விசும்பாதி தொறும் இயலும்
தனதியல்பை உருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோல் பலபொறியாப்
பரமர்விழி பயந்த ஞான்று
தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்
ளொளிபடர்ந்து தெளிநீர்ப் புக்கு
நீங்கிவிளை யாட்டயர்ந்து தணிகைஅமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம்.

என்ற தணிகைப் புராணம் நம் நினைவுக்கு ஓடி வருகின்றது. அப்பெருமானைச் சந்திப்போம்; மலர் சொரிவோம்; புகழ்ந்திடுவோம். அவன் கமலத்தாளும் தோளும் சிந்திப்போம். அதனால் நமது பழவினைகள் எல்லாம் சிந்திப் போம்.

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித்துணைவர் அருளும் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயில்எடுத்து வரும்செவ் வேளைச்
சந்திப்போம் மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோம்
அவன்கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினல் நமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே.

— திருவிரிஞ்சைப்புராணம்

இங்கிருக்கும் அடியவர்களின் உள்ளத்துக்கு உள்ளே அந்த அமுதப் பெருங்கடல் புகுந்துவிட்டது. உள்ளத் துக்குள்ளே மட்டும் அல்ல; உயிருக்குள்ளேயும் புகுந்து விட்டது. உயிரை நிரப்பிய பெருங்கடல் புலன்களை நிரப் புவதைப் பற்றிப் பேசவா வேண்டும்?

அடியார் பரவசம் :

ஒளிபடைத்த திருமேனி தோன்றும் தோன்றும்
ஓங்கார மாமஞ்ஞை தோன்றும் தோன்றும்
களிபடைத்த விண்ணோர்கள் பணிந்து போற்றும்
கமலமலர்த் தாளிணைகள் தோன்றும் தோன்றும்
அளிபடைத்த பன்னிரண்டு கண்கள் தோன்றும்
ஆறுமுகத் தாமரைகள் அலர்ந்து தோன்றும்
நளிபடைத்த அன்பர்தம் கூட்டம் தோன்றும்
நல்லூரில் எழுந்தருளும் கந்த னுக்கே.

என்று அடியவர்கள் பக்தி மேலிடப் பாடுகிருர்கள். முருகனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனுல் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே என்னுரிமை நாயகனே என்று அடியவர்கள் இங்கே உருகி நிற்கின்ருர்கள். அருளாளன் முருகன் தன்னை அடைந்த அன்பர்க்கு அருள் பாலிக்கின்ற கருணைப்பெருங் கடல். வினைதீர்க்கும் வெற்றி வடிவேலன். அறியாமை இருளை அறவே போக்கி மெய்ஞ்ஞான ஒளியினைத் தரும் ஞானமூர்த்தி. கற்பனை கடந்த சோதி. கருணையே உருவமான கண்ணுதற் கடவுள் நல்கும் கலியுகவரதன்.

வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே என்பதை இங்கே இருக்கும் அடியவர்கள் நன்ருக அறிவார்கள். எங்கு பார்த்தாலும் முருகப்பெருமானைப் போற்றும் நினைவு முதிர்ச்சியினுல் அவனைத் துதிக்கும் பாடல்களே கேட்கின்றன. அவன் துணைதான் நமக்கு எதனையும் தரவல்லது என்ற ஒரு பெரு நம்பிக்கையினுல் துள்ளிக் குதிக்கிருர்கள். பக்தியில் முறுகி நிற்பவர்கள் பக்கத்தில் நிற்பவர்கள் பரிகசிக்கப் போகின்ருர்களே என்று எண்ண மாட்டார்கள். அந்த உள்ளக் கிளுகிளுப்பில் ஆடுகிருர்கள்; பாடுகிருர்கள்,

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடு இன்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்
றறியேனே

என்று தம்மையே நொந்து நொந்து ஆனந்தக் கூத்தாடுகிறார்கள் 'தோலெலாம் குழைந்திடச் சூழ் நரம்பு அனைத்தும் மேலெலாம் கட்டவை விட்டுவிட்டியங்கிட என்பெலாம் நெக்கு நெக்கியலிடை நெகிழ்ந்திட மென்புடைத் தசையெலாம் மெய்யுறத் தளர்ந்திட இரத்தம் அனைத்தும் உள்ளிறுகிட' ஆடுகிறார்கள். 'தத்துவம் அனைத்தும் தாம் ஒருங்கு ஒழிந்திடச் சத்துவம் ஒன்றே தனித்து நின்றோங்கிட' ஆடுகிறார்கள். தம்மை மறந்து கூத்தாடுகின்ற இந்தப் பக்தர்களைப் பார்க்கின்றபோது நாமும் கூத்தாடவேண்டும் என்ற ஓர் உணர்ச்சி நமக்கும் எழுகின்றது. மாசு மறு இல்லாத பக்தியினால் உண்டாகின்ற உள்ளக் கிளுகிளுப்பினால் 'முருகா, முருகா' என்று பக்திக் குரல் எழுப்புகிறார்கள். ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். கூத்தாடுகிறோமே என்ற எண்ணமே இவர்களுக்கு இல்லை.

இறைவன் திருவருள் கிடைக்கவில்லையே என்று சிலர் ஏங்கி அழுகின்றார்கள். சிலர் தேங்கி அழுகின்றார்கள். முதலில் வருவது ஏக்கக் கண்ணீர்; பின்னால் வருவது ஆனந்தக் கண்ணீர். இந்த இரண்டு கண்ணீரும் இந்தப் பக்தர்களிடமிருந்து ஓடிப் பெருகுவதை நாம் பார்க்கிறோம்.

நின்னுடைய திருவுருவைக் கண்ணாற் கண்டு
நின்இனிய திருப்புகழை வாயாற் பாடி
மன்னுகின்ற அடியார்நினைத் துதிக்கும் காலை
மலிஆர்வத் துடன்காதால் கேட்டு நின்றன்
இன்னியல்சேர் சோதியுரு உள்ளத் தின்கண்
எழுந்தருளச் செய்வித்துத் தியானம் செய்து
பன்னரிய இன்பஅநு பூதி எய்தப்
பார்த்தருள்வாய் நல்லூரில் கந்த வேளே.

என்று பாடுவதில் எவ்வளவு கருத்தாழம் அடங்கிக் கிடக்கின்றது. 'உண்ணகை தோற்றிட உரோமப் பொடித்திடக் கண்ணில் நீர் பெருகிக் கால்வழிந்தோடிட வாய் துடித்து அலறிட மெய்யெலாம் குளிர்ந்திட மென்மார்பு அசைந்திடக் கையெலாம் குவிந்திடக் காலெலாம் சுலவிட மனம் கனிந்து உருகிட மதிநிறைந்து ஒளிர்ந்திட' ஆடிப்பாடுகின்ற இந்த அடியார்கள் மணிவாசகரின் இதோ இந்தத் திருவாசகத்தையும் பாடாமலா இருப்பார்கள்?

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுஎன் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

'ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி அநுபூதி அடைவித்ததொரு பார்வைக்காரனும்' என்றுதானே அருணகிரிநாதரும் பாடுகிறார். மெய்யடியார்கள் சிவபெரும் போகத்தை நிழல் எனக் கடவாத நேர்மையோடு பொருந்தி எனது அற - நினைவு அற - இருவினை மலம் அற - வரவொடு செலவு அற-இருள் அற-இரவொடு பகல் அற - இகபரம் அற முருகனை ஏத்திப் போற்றுகிறார்கள்.

உரைஅவிழ உணர்வுஅவிழ உளம்அவிழ உயிர்அவிழ
உளபடியை உணரும்அவர் அநுபூதி யானதுவும்

என்று அருணகிரியார் திருவகுப்பிலே பாடுகின்ற நிலையிலே இந்த அடியார்கள் நிற்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், 'சும்மா இருசொல் அற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்ற நிலையிலே நிற்கின்றார்கள்.

பொறிஅடங்கப் புலன்அடங்க உணர்வடங்கப்
புவனம்எலாம் மறைந்தடங்கப் பேதம்காணும்
நெறிஅடங்க நிலைஅடங்க நிலையில்விஞ்சி
நெகிழுகின்ற மனம்அடங்கக் கலைஅடங்கக்

குறிஅடங்கக் குணம்அடங்கக் கோதடங்கக்
கொள்கையெலாம் நனிஅடங்க நிற்பார்மாட்டே
கிறிஅடங்க இணைந்தின்பம் கூட்டுகின்ற
கேண்மையுடை யோய்நல்லூர்க் கந்தாபோற்றி

முருகனின் அருட்காப்பு:

முருகனின் வேல் ஞானசக்தியைக் குறிக்கின்றது. மயில் ஓங்காரத்தைக் குறிக்கின்றது. சேவல் நாதத்தைக் காட்டி நிற்கின்றது. ஆறுமுகன் சூரனை ஏறுமயிலாகக் கொண்டு அவனுடைய மாயாமலத்தைப் போக்கினான். சேவலைக் கொடியாக உயர்த்தி சூரனது கன்ம வினைமலத்தைக் களைந்தான். ஞானசக்தியாகிய தனது வேலால் சூரனுடைய உயிரைத் தீண்டி ஆணவ மலத்தைக் கெடுத்தான். இவ்வாறு சூரன் மும்மலங்களும் ஒழியப்பெற்று இறைவன் இணையடி சேர்ந்து எல்லை இல்லா இன்பம் எய்தினான்.

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் னுற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்று
உய்ந்தான்

என்பது கந்தபுராணப் பாடல். முருகனை அவன் வெற்றிவேலைக் கொற்ற மயிலைச் செஞ்சேவலை வழிபட்டால் கதிர்வேலன் திருவருள் கைகூடும்.

முருகனுடைய திருவருளினால் அருட்காப்பினால்தான் இந்த உலகம் வாழ்வைப் பெறுகின்றது. அசுரரை அழித்துச் சுரர்க்கு வாழ்வு கொடுத்த பெருமான் உயிர்களுக்கு வரும் இன்னல்களைப் போக்கி நன்மையைத் தந்து என்றைக்குமே பாதுகாக்கும் காவல் தெய்வமாக இருக்கின்றான். அவனை விட நல்ல காவற்காரன் நமக்கு இல்லை. அவனே காவற் தெய்வம். அவனுடைய அருட்காப்பு இல்லையானால் உலகம் ஒருநாள் கூட வாழமாட்டாது. உயிர்கள் இன்பத்தை அடையவேண்டும் என்பது அவனுடைய தனி

விருப்பு. மரம், செடி, கொடி, மக்கள், விலங்கு, பறவை மற்றும் ஏனைய எல்லாம் அவனுடைய அருட்காப்பினுலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. முருகப் பெருமானின் காவல் இல்லாமல் போனுல் உலகில் இருளே மண்டிவிடும்; உலகுக்கு முன்னே கருவாய்த் தோன்றி அது வளர வளர எல்லாவற்றையும் காட்டும் கண்ணுக உதவும் பெருமான் காலமாகி நிற்கிருன். அடைந்தார்க்கு இன்பப் பொருளாய் விளங்குகிருன். எல்லோர்க்கும் உள்நின்ற நாவுக்கு உரையாடியாய்த் திகழ்கின்ருன். உலகம் இன்று நிலைபெற்று இருக்கிறதென்ருல் அதற்கு முருகன் திருவருளே காரணம்.

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்ருல் உலகே;

இது குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து; பெருந்தேவனுர் பாடல்,

முருகா, நீ மெய்யான தெய்வம், கலியுகத்திலே கண் கண்ட தெய்வம். வேண்டிய வரம் கொடுக்கும் மெய் கண்ட தெய்வம் அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரன். வரையாது வழங்கும் வள்ளல். வள்ளிக்கு வாய்த்தவன். தெய்வயானை பங்கன். தேவசேனுதிபதி. தகப்பன் சாமி, முற்றும் அறிந்த மூதறிவினன், அருள்தரும் பெருமான், தனிப் பெருங் கடவுள்; வெற்றிவடிவேலன். வீரத் திருக்குமரன். சிங்காரவேலன், முத்துக்குமரன், செந்திலாண்டவன், பரங்குன்றிற் பன்னிருகைப் பெருமான். ஆவிநன்குடி அழகிய வேலன். திருவேரகப் பெருமான். பழநிப் பதிவாழ் பாலகுமாரன், அலைவாய் உகந்த வடிவேலன், சுவாமிமலைச் சுவாமி நாதன், குன்று தோறுடும் குமரன், சமராபுரி வாழ் சண்முகத்தரசன். குரவை ஆடும் கூத்தன்; சோலைமலை நின்ற சுந்தரப் பெருமான், அழகர் மலை

அழகன்; குற்றாலக் குமரன், திருத்தணிகைச் செல்வன். கருவூர்ப்பெருமான், கதிர்காமக் கந்தன், மாவை முருகன், மண்டூர்க் கந்தன், கந்தவனக் கடவுள், சிதம்பர சுப்பிர மணியன், நல்லைநகர்ச் செவ்வேள். இன்னும் எத்தனை எத் தனை திருத்தலங்களில் எல்லாம் எழுந்தருளி அடியார் களுக்கு வேண்டிய வரம் கொடுக்கும் நின் கருணைக்குத் தான் எல்லை ஏது?

நீ வருகின்ற கோலாகலமான காட்சியைப் பார்க்கிற போது எங்கள் குறையைச் சொல்லாமல் இருக்க முடிய வில்லையே! வாழ்விலே நமக்கு ஆதிதைவிகம், ஆதிபௌதி கம், ஆத்தியான்மிகம் என மூவகைத் துன்பங்கள் வருகின் றன. கருப்பவேதனை, திரை, மூப்பு என்பனவற்றால் வரும் துன்பம், இயமனால் வரும் மரணம் எல்லாம் ஆதிதைவிகம். பூதத்தால் வரும் இன்பத் துன்பம் ஆதிபௌதிகம்; அதா வது மின் இடி குளிர் முதலியவற்றால் வருவது - சடம் வாயி லாக வருவது. ஆத்தியான்மிகம் சடத்தோடு கூடிய சேத னம் வாயிலாக வருவது; உடலால் உறுதுயர், மனக்கவலை முதலியன. இவை எல்லாம் நம்மை வந்து தாக்கும்போது நம்மைக் காக்கும் கருணையாளன் நீ அன்றி வேறு யார்? நீ அருந்துணை; வரும்துணை; பெருந்துணை. நல்லூர்ப் பெரு மானே,

> பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
> பல்கோடி விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி
> பாதகமும் செய்வினையும் பாம்பும் பிசாசும்அடற்
> பூதமுந்தீ நீரும் பொருபடையும் - தீதகலா
> வெவ்விடமும் துட்ட மிருகமுத லாய்எவையும்
> எவ்விடம்வந்து எம்மை எதிர்ந்தாலும் - அவ்விடத்தில்
> பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
> அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத்
> திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
> அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்
> சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்

எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாச மாக உளத்திருந்து - பல்விதமாம்
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும்இயல் பல்காப் பியத்தொகையும் — ஓசை
எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து
ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்நின்று அருள்

— கந்தர் கலிவெண்பா

பூரண சரணுகதி நமக்கு வேண்டும். எல்லா வல்வினைகளேயும் வேலின் காவலுக்கு உட்படுத்தி விட்டு, அந்த வீரத் திருக்குமரனின் வெற்றிவடிவேலின் காவலிலே எல்லாவற்றையும் மறந்து, துன்பங்களேப் பற்றிய கவலேகள் நம்மை அணுகாதவாறு நிம்மதி பெறவேண்டும்.

சூலம் பிடித்துஎம பாசம் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்குஒரு காலும்அஞ் சேன்கடல் மீதுஎழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு
மெய்த்துணையே

— கந்தர்அலங்காரம்

மரணம் வருவதற்கு முன்பும் மரணம் வரும்போதும் அப்பெருமானே மெய்த்துணை. வேலாயுதமும் விளங்கித் தோன்றும் அபயகரமும் என்றென்றும் அச்சம் வாராமல் காப்பாற்றி நெஞ்சைத் திண்மை உடையதாக்கி நல்வாழ்வுக்கு வகை செய்வன. ஆறுமுகத்தையும் அபய கரத்தையும் வேலாயுதத்தையும் தியானம் பண்ணிஞல் அச்சம் அகலும்; காலனுக்கும் சவால் விடலாம். 'அந்தகா, வந்து பார் சற்று என் கைக்கு எட்டவே' என்று தானே அருணகிரியார் வெற்றிக்குரல் எழுப்புகிருர்.

திருக்கை வேலே காவல் என்று முருகப் பெருமானை வாழ்த்தி வாய் மணக்கப் போற்றித் துதித்தல் வேண்டும். வேலே நம்மைக் காக்கும் காவலாக விளங்க வேண்டும்; இரவிலும் பகலிலும் ஏமத்திலும் சாமத்திலும் வேற்பெருமானே தஞ்சம் தஞ்சம் என்ற நீங்காத நினைவு நமக்கு வரவேண்டும். வந்தால், 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை' என்று நாமும் பாடலாம்.

இதோ தேவராய சுவாமிகளின் கந்தர் சஷ்டி கவசம்:

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரைஇருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க.

முருகனுடைய வெற்றிவேல் என்றும் பக்தர்களுக்குப் பாதுகாப்பாக நின்று உதவுகின்றது.

வேல் சென்ற இடம் எல்லாம் வெற்றியை நிலை நாட்டும். அது ஞானத்தின் திருவுருவம்; ஞானசக்தி அறிவின் அடையாளம்; அறியாமையைப் போக்கித் தூய இன்பத்தை நிலைநாட்டும் ஞானம் ஆதலின் அது பேரொளி உடையது. அதனைத் தியானித்தால் நெஞ்சில் இருள் நிற்காது; கவலை நீங்கும்; துன்பம் ஒழியும். முருகனுடைய திருவருளினால் நல்லறிவு கைவரப் பெற்றுத் தெளிவு உண்டானால் கவலை ஏது; துன்பம் ஏது? இருள் மண்டிக் கிடக்கும் மனத்திலே கப்பிக் கொண்ட துன்பங்களைப் போக்க நம் உள்ளத்தில் அவன் திருக்கை வேலைத் தியானம் செய்ய வேண்டும்.

ஓயாதோ என்கவலை? உள்ளேஆ னந்தவெள்ளம்
பாயாதோ? ஐயா, பகராய் பராபரமே!

என்று தாயுமானவர் நமக்காகத்தானே பாடி இருக்கிறார்.

கவலை அற்ற மன அமைதி ஞானவிசாரத்திஞல் உண்டாகும். அந்த ஞானவிசாரத்திஞல் உண்டாகும் தெளிவு திருவருளால்தான் பெறவேண்டும். இறைவன் ஒருவஞலேயே நம் கவலையைத் தீர்க்க இயலும். குறைவிலா நிறைவாகிய அவனே எல்லாக் குறைகளையும் போக்கி அருள்வான். இந்த ஞானத்தெளிவு வேண்டுமாஞல் வேலும் மயிலும் துணை என்ற நினைவு அல்லும் பகலும் அனவரதமும் நம்மிடம் இருக்க வேண்டும்.

எல்லாவற்றையும் மறந்து இறைவனையே சரண் அடைதல் பெரிய அறம்; அது பெரிய கடமை. இவ்வாறு சரண் அடைகின்றவர்களைக் காப்பாற்ற இறைவன் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறுன். இறைவன் சரணுகதரட்சகன். அவனுக்குத் தன்பால் அடைந்தாரைத் தாங்குவது பெருங் கடன்;

தன்கடன்அடி யேனையும் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே

என்பது அப்பர் திருவாக்கு:

உலக வாசனை மீதூர்ந்து நிற்கும் ஆன்மாவுக்கு உலகப் பற்று எளிதில் அழியாது. உலகப் போக்கை உண்மையாகத் துறந்தவர்களுக்கு உலகப்பற்று ஒழியத் தலைப்படும். சாத்திர விசாரம், அனுபவம் என்பன இதற்கு அடிகோலுவன.

இறைவனைச் சரண் அடைதல் எல்லோர்க்கும் எளிதில் கைவந்து விடாது. அருளின் சுவை தெரிந்தால் இறைவனை இறுகப் பற்றிக் கொள்ளும் உறுதி ஏற்படும். அப்போது இறைவன் திருவருள் நம்மைக் காக்கும்.

முருகன் தன்னைச் சரண் அடைந்தார்க்கு அருள் தந்து காப்பாற்றுவதற்காகவே ஆறுமுகங்களுடனும் ஒவ்வொரு திசையையும் நோக்கிக் கொண்டு எழுந்தருளி வருகிறுன்: சரண் என்று அடைந்தார்க்குப் புகல் அளித்துக் காப்பாற்றுவதற்கு ஆறுமுகவேலன் ஆயத்தமாக இருக்கிறுன். அருள் நிரம்பி வழியும் ஆறுதிருமுக அமுதத்தையும் கண்டு ஆனந்தித்த அருணகிரியார் "நெஞ்சக் கனகல்லு

நெகிழ்ந்து உருகத் தஞ்சத்து அருள் சண்முகனுக்கு'' என்று பாடுவது உளம் கொள்ளத் தக்கது.

முருகப் பெருமானைச் சரண் அடைதல் நம் கடன்; அருள் புரிந்து காத்தல் அவன் கடன். அவன் திருவருளை நுகர நமக்கு வாய்ப்பு வேண்டும். அருளை நுகரவிடாமல் எத்தனையோ இடையூறுகள் குறுக்கிடலாம். அப்போது முருகன் அவற்றைப் போக்கி ஆட்கொள்வான்.

அருளினால் வரும் இன்பத்தை நுகரும்போது தீய பண்புகள் மயக்கத்தை உண்டாக்க வரும். அப்பெருமான் தீயதைப் போக்கித் தூயதை அருள்வான். இதனைத்தானே அசுர சங்காரம் காட்டித் தருகின்றது. மயக்கத்தைப் போக்கிக் கருணையை எளிதில் வழங்கி அருளநுபவத்தை நுகருங்கால் இடையூறு வாராமல் காக்கும் அருளாளன் நல்லைநகர்ச் செவ்வேள்.

**முருகா வருக வருக:**

உலக வாழ்விலே செய்வன செய்யாது தவிர் வன தவிர்க்காது சிக்கி அல்லற்பட்டு ஆற்றாது துயருறும் உயிர்களுக்கு உற்றுழி உதவி இடுக்கண் எல்லாம பொடி படுத்தி ஒப்பற்ற பேரின்ப நலத்தைத் தந்தருளுவான் முருகப் பெருமான். அவனைச் சேர்ந்து விட்டால் துன்பம் இல்லை, கவலை இல்லை, சோகம் இல்லை, சோர்வு இல்லை. அப்போது அப்பெருமானுடைய அருள்நிலைகள், வெளிப் பாடுகள் நம் உள்ளத்திலே எழும். அவற்றின் எழுச்சியால் நம் உள்ளம் குதூகலிக்கும். பேசா அநுபூதி பிறக்கும். எனவே, அவன் வந்தருள வேண்டும் என்ற நினைவால் 'வருக வருக' என்று அழைப்போம்.

பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில்வே லால்எனைக் காக்கஎன் றுவந்து
வரவர வேலாயு தனார் வருக
வருக வருக மயிலோன் வருக.

— கந்தர் சஷ்டி கவசம்

முருகா நீ வரவேண்டும்; வரவேண்டும்.

நல்லூர் வீதியில் பல்லோர் காண
நல்லவர் போற்ற நாவலர் ஏத்த
அருளே ஒழுகும் திருமுகம் பொலிய
அமுதே உருவாம் தேவியர் சூழ
தேர்மேல் இவர்ந்து தேவே வருக
பார்மேல் அருளே பொலிய வருக
பத்தர் களிக்கப் பரமநீ வருக
சித்தம் உருக்கும் செல்வநீ வருக
நித்தம் உன்னை நினைந்திடும் அடியார்
புத்தி களிக்கப் புனிதனே வருக
ஓதி உணர்ந்து உருகுமெய் யடியார்
நீதி உணர நிமலனே வருக
தேர்மேல் பொலிதிருக் கோலம்நாம் காண
வருக முருக வருக வருகவே!

— சிவதொண்டன்

இவ்வாறு மெய்யடியார்கள் 'வருக வருக' என்று ஏத்திப் போற்றுகிறார்கள்; ''அப்பா வா வா என்று வரவழைத்தால் வாராதிருக்க வழக்கு உண்டோ?'' என்று கேட்கிறார்கள். இந்த மெய்யடியார்கள் மற்றவர்களின் உடை அலங்காரத்தையும் நடை அலங்காரத்தையும் பார்ப்பதாக இல்லை. முருகன் அருள் அலங்காரத்தையே பார்க்கிறார்கள்.

முருகா எனஓர் தரம்ஓ தடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே

என்ற திருப்புகழ் இவர்களுக்கு நல்லாகத் தெரியும்; ஒரு தரம் முருகா என்று அழைத்தால் அப்பெருமானின் திருவடிகள் தலைமீது படியும் என்ற பேருண்மையை அறிந்த இந்தப் பெருமக்கள் ''முருகா வருக வருக'' என்று அழைக்கிறார்கள்.

கருத்தே புகுந்து கதிகாட்டும்
கண்ணே வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக கருணைபொழி
காரே வருக ஆனந்தப்

பெருக்கே வருக யாங்கள்பெறும்
பேறே வருக மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்குதெய்வப்
பெருமாள் வருக குறமடந்தை

தருக்கே வருக மிடிஅகற்றும்
தருவே வருக மன்பதைக்கோர்
தஞ்சே வருக எமைஅளிக்கும்
தாயே வருக பவப்பிணிக்கு

மருந்தே வருக சமரபுரி
வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே

— திருப்போரூர்ச் சந்நிதி முறை

**வாராதிருக்க வழக்கு உண்டோ:**

முருகனைப் பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால் வாரா திருக்க வழக்கு உண்டோ?

பகழிக்கூத்தர் வைணவப் பார்ப்பன மரபினர். தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கசடறக் கற்ற பெரும்புலவர். இவர் வயிற்று வலியால் நலிவுற்று வருந்துகிறார். திருச் செந்தூர் முருகனைப் பாடித் தம் நோயைத் தீர்த்துக் கொள்ள உறுதி கொள்கின்றார்; பாடுகிறார்; திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் எழுகின்றது. திருவருள் பெருகுகின்றது. நோயும் நீங்குகின்றது.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் சொற்சுவை, பொருட் சுவை, சந்தச்சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய பல நலன்களும் அமைந்தது; பக்திப் பெருக்கும் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும் உடையது. இருந்தும், அரங்கேற்று விழாவில் இருந்தோர் பகழிக் கூத்தருக்குச் செய்யவேண் டிய மரியாதையைச் செய்யாது இருக்கிறார்கள். சபையினர் செய்யும் சிறப்பை எதிர் நோக்காது வயிற்று வலி தீர்த்த ஞானபண்டித சுவாமியின் திருவருளைப் பொருளாகக்

கொண்டு பேரின்பப் பெருவாழ்வில் துயில் கொள்கின்ருர் பகழிக்கூத்தர்.

தமிழில் தன்னேப் பாடுவார்க்கு வேண்டியவரம் கொடுக்கும் திருவருளேப் பிறர்க்கு அறிவிக்கத் திருவுள்ளம் கொள்கின்ருன் முருகப்பெருமான். தனது திருமார்பில் இருந்த மாணிக்கப் பதக்கத்தைக் கழற்றித் துயில்கொள்ளும் பகழிக்கூத்தரது மார்பில் அணிகின்ருன். சுவாமியின் மார் பிலிருந்த மாணிக்கப் பதக்கம் மறைந்தமையைக் கண்டு மதிமயங்கி எங்கும் காணுது போகவே எல்லோரும் தடு மாறுகிருர்கள். பகழிக்கூத்தரின் மார்பில் இருக்கக் காண் கிருர்கள். திருச்செந்தூர்ப்பெருமானின் திருவருளே வியக் கின்ருர்கள். பகழிக்கூத்தரைப் பல்லக்கில் ஏற்றி அநேக விருதுகள் வாத்தியங்கள் சூழ ஊர்வலம் வருகின்ருர்கள்.

மணங்கமழ் தெய்வத்து இளநல உருவத்து இறை யோன் முருகன்மேல் பாடப்பட்ட திருச்செந்தூர்ப் பிள்ளேத்தமிழிலே வருகைப் பருவத்திலே இதோ ஒரு பாடல்:

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும்பிள்ளேப்
பெருமான் என்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலேத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன்அப்
பாவா வாஎன் றுனேப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளரும் களபக் குருப்பைமுலை
வள்ளி கணவா வருகவே

வயிற்று வலியினால் சுழன்று துடித்த பகழிக்கூத்தர், "பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ?" என்று குரல் எழுப்பி இருக்கிறார். பிள்ளைத் தமிழைக் கேட்டு அவருக்கு இருந்த வயிற்று வலியைப் போக்கி விட்டு மாணிக்கப் பதக்கத்தையும் அணிந்து மகிழ்ந்திருக்கிறான் முருகன்.

எம்மிடம் இருக்கும் வயிற்று வலிகளுக்கோ அளவு இல்லை. அத்தனை வலிகளையும் அவன் மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீர்த்து அருள்வான். நல்ல வெற்றிப் பதக்கங்களை வேலவன் நமக்கும் அணியத் தந்து நம்வாழ்வை வளமாக்குவான்.

பாட்டுக்கு உருகும் சொக்கநாதனின் சுந்தர வடிவேலன் அல்லவா அவன்! எனவே, நாமும் "வாராதிருக்க வழக்கு உண்டோ? வடிவேல் முருகா, வருகவே" என்று பாடுவோம்; பாடிப் பரவுவோம்.

"முருகா, உன்னை விருப்புடன் பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால் வாராது இருக்க வழக்குண்டோ?" என்றுதானே இங்கிருக்கும் மெய்யடியார்களும் குரல் எழுப்புகின்றார்கள்.

## நல்லூரில் தித்திக்கும் அமுது:

பதினாறாயிரம் திருப்புகழ்களைக் கடல்மடை திறந்தாற் போல் பாடியவர் அருணகிரியார்.

ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்?

என்று தாயுமானவரே அங்கலாய்க்கிறார். அந்த அருணகிரியார் எந்த முருகனைப் பாடிப் பரவினாரோ அந்த

முருகனேத் தானே இன்று நாம் நல்லூரில் பாடிப் பரவி நிற்கிருேம். முருகனே-முத்துக்குமரனே அருணகிரியார் கண்ட போது அவருக்கு இருந்த உள்ளக் கிளுகிளுப்பை இன்று ஓரளவில் நாம் உணர முடிகிறது. 'பேரின்பத்தைக் கண்டு கொண்டேன்; இதுவரைக்கும் நான் அநுபவித்து அறியாத பரமானந்த சாகரத்தைக் கண்டு கொண்டேன்' என்று அவர் துள்ளிக் குதிக்கிருர். ஆறுமுகம் படைத்த ஓர் அமுதை—தித்தித்திருக்கும் அமுதைக் கண்டு இன்புற்றேன் என்று சொல்கின்ருர். அது ஒரு பரமானந்த சாகரம் என்று வியக்கின்ருர்.

> பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
> தித்தித் திருக்கும் அமுது கண்டேன்

என்று அலங்காரத்திலே அவர் பாடுகிருர்.

அமுதம் என்பது மரணத்தை ஒழிப்பது; மாருத இன்பத்தைத் தருவது; பிறவி, மரணம் ஆகிய இரண்டும் வாராமல் செய்கின்ற அருமருந்து; அது ஒரு தனிமருந்து.

மனம் கடந்த நிலேயிலே உள்ள இன்ப நிலேயை அருணகிரியார் சொல்ல வருகிருர். அவர் அடைந்த அநுபவநிலே திரிபுடி ரகிதம். காண்பான், காட்சிப்பொருள், காட்சி என்ற மூன்று வேறுபாடும் இல்லாத நிலே அது. இந்த மூன்றும் அற்ற நிலே திரிபுடி ரகிதம். இதனே இன்னும் விளக்கமாகச் சொன்னுல் ஞாத்ரு, ஞானம், ஞேயம் (அறிவான், அறிவு, அறியப்படும் பொருள்) என்னும் மூன்றும் இறைவன் அருள் அநுபவத்தில் மறைந்து போய்விடும்; அந்த அநுபவத்திஞல் மனேலயம் உண்டாகும். அது ஒரு தனி இன்பம். அப்போது போக்கு இல்லே, வரவு இல்லே, இரவு இல்லே, பகல் இல்லே, உள் இல்லே, வெளி இல்லே, வாக்கு இல்லே. வடிவு இல்லே, முடிவு இல்லே. அந்த இன்பமே கடவுள். அதுவே பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணுனந்தம். இந்த ஆனந்தத்தை,

9

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்புமஉள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்இல் லாதொன்று வந்துவந்து
தாக்கும் மனோலயம் தானே தரும்எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுக வாசொல் லொணாதுஇந்த ஆனந்தமே.

என்று அருணகிரிப் பரமகுருநாதர் பாடுவார். பத்தித் திருமுகம் ஆறினையும் பன்னிரு தோள்களையும் அவர் தரிசித்தபோது பரமானந்த சாகரத்தை இதுவரையும் அநுபவித்து அறியாத பேரின்பத்தைக் கண்டு கொண்டேன் என்று ஆனந்தம் மேலிடப் பாடுகிறார். தித்தித்திருக்கும் அமுது ஆறுமுகம் படைத்த அமுது. அந்த ஆனந்த வெள்ளம் பெருகி நிற்கும்போது எல்லாம் உடைந்து விடுகிறது. நான், எனது என்ற இரண்டும் போய்ச் செயல் மாண்டு ஒழிகின்றது. ஓர் ஆறுமுகமும் ஈர் ஆறு திருக்கரமும் பரமானந்தப் பெருங்கடலில் அமுதர்கத் தோன்றுவதை அழகாகப் பாடுகிறார் அருணகிரியார், இதோ அந்தப் பாடல்:

பத்தித்திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம்எற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.

இந்தப் பாடலை 'நான்' கெட்ட அடியார்கள் எல்லோரும் பாடுகிறார்கள். அவர்களின் நிலையைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர். கண்டவர் கண்டபடி அநுபவிக்கலாமே தவிர வேறு ஒருவருக்கு அந்த அநுபவத்தைச் சொல்லவும் முடியாது; சார்த்தவும் முடியாது. நல்லைநகர் ஆறுமுகப் பெருமானைப் பார்த்து ஏதேதோ சொல்கின்றோம். சொல்லிய அளவில் திருப்தி அடைகின்றோமா என்றால் அதுவும் இல்லையே! சொல்லச் சொல்லத் தித்திக்குமே சுந்தரனின் நாமம்! சொல்லச் சொல்ல ஆனந்தம், ஆனந்தம், பரமானந்தம்,

அவ்வாறு அறிவார் அறிகின் றதலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப் பதுவே.

என்றுதானே அநுபூதியில் பாடுகிறார் அருணகிரிநாதர்.

முருகப் பெருமானுடைய திருவருள் இன்ப அநுப வத்தை அருணகிரிநாதர் எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப் பதுவே என்று கேட்பார் என்றால் நாம் எம்மாத்திரம்? பர மானந்த சாகரத்தில் அமுத மயமாக இருக்கும் திருமுகங் களை அநுபவிக்கின்ற நிலையிலே அடியார்கள் நல்லூரிலே அப்பனை ஏத்திப் போற்றுகின்றார்கள்,

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே;

என்ற மணிவாசகரின் தித்திக்கும் திருவாசகம் இங்கு நினைவுக்கு வருகிறது. அடியார்களின் உள்ளத்துக்கு உள்ளே தித்திக்கும் ஆறுமுக அமுதக் கடல் புகுந்து விட்டது. உயிருக்குள்ளேயும் புகுந்துவிட்டது. உயிரை நிரப்பி விட்டது. உயிரை நிரப்பினால் உயிருக்கு அடங்கிய புலன்களைப் பற்றிப் பேசவா வேண்டும்? இது பெரிய வித்தை ஆயிற்று. இத்தகைய அநுபவம் சமாதி என்ற இன்ப நிலைக்கு அழைத்துச் செல்லும். கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் இருப்பவர்கள் எவ்வாறு இன்ப சமாதி அடைவார்களோ அந்த இன்பத்தைக் கண்ணைத் திறந்தபடியே மெய்யடியார்கள் நல்லூரிலே அடை கிறார்கள்.

தில்லை நடராஜன் திருக்காட்சியிலே சுந்தரர் கண்ணை யும் சிந்தையையும் பறிகொடுத்து நின்ற நிலையைச் சேக் கிழார் பாடுகிறார்,

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

'சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன் ஆடும் ஆனந்த மயமான எல்லை இல்லாத ஒப்பற்ற பெரிய கூத்தினால் தம்மாட்டு விளைந்த பேரின்ப வெள்ளத்திலே மூழ்கிச் சற்றேனும் மாறுபடுதல் இல்லாத ஆனந்த அநுபவத்தில் மலர்ச்சி பெற்றார்' என்பது சேக்கிழார் பாடலின் தாற்பரியம்.

தேரிலே ஆரோகணித்து வருகின்ற முருகனுடைய திவ்விய ஆறுமுக அமுதத்தை அள்ளிப் பருகியதனால் தம்மாட்டு விளைகின்ற பேரின்ப வெள்ளத்திலே மூழ்கி ஆனந்த அநுபவத்திலே நல்லடியார்கள் நல்லூரிலே நிற்கிறார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறோம்.

## அடியார் நடுவுள் இருக்கும் அருள்:

முருக பக்தர்களின் ஆரவாரத்தையும் பக்திப் பரவசத்தையும் எடுத்துச் சொல்ல முடியாத நிலையிலே நாம் நிற்கிறோம். 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்; இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்; துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்; தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்; சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்' என்றெல்லாம் திருப்பள்ளி எழுச்சியிலே மணிவாசகர் பாடிய காட்சியை நாமும் இங்கே காணமுடிகின்றது.

'வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்' என்று தேவாரம் பாடுகிறது. இதனை உணர்ந்த மெய்யடியார்கள்,

முருகன் குமரன் குகன்என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வுஎன்று அருள்வாய்
என்று முருகனை வாயாரப் பாடுகிறார்கள்.

விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரம்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வம்இத் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை என்றுணர்தி

என்ற பெரு நம்பிக்கையினுல் வேல் வேல் என்று உரக்கக் குரல் எழுப்பி நாத்தழும்பேறியவர்களின் பத்திமைச் செறிவை நேரிலே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த அடியார்களின் மத்தியிலே நாம் இருப்பதே பெரும்பேறு.

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானுல்
அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு ளைப்புரி யாய்பொன்
னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம்
முன்னின்றே

'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்று மணிவாசகரே கேட்கிறுர்; இந்த அடியார்கள் நடுவில் நாம் இருக்கும் பாக்கியத்தை என்றென்றும் முருகன் தந்து அருள வேண்டும் என்பதே எம் பிரார்த்தனை! அடியார்களின் நடுவில் இருப்பதே பெரும் பேறு என்று மணிவாசகர் பாடினுல்,

தேட்டரும்திறல் தேனினைத்தென் அரங்க னைத்திரு
மாதுவாழ்
வாட்டமில்வன மாலைமார்வனை வாழ்த்தி மால்கொள்
சிந்தையராய்
ஆட்டமேவி அலந்துஅழைத்துஅயர் வெய்தும் மெய்யடி
யார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமேலது காணும்கண் பயனுவதே
என்று குலசேகரப்பெருமாள் பாடுவார்.

இவ்விழாவுக்கு எல்லா ஊர்களில் இருந்தும் அடியார்கள் திரண்டு வந்திருக்கிறார்கள். அடியார்களின் அன்புப் பேச்சும் ஆடலும் பாடலும் இசைக் கருவிகளின் இன்னொலியும் நாம பஜனையும் எங்கும் முழங்குகின்றன.

**முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமும் கண்ணும்**
**குண்டல நிரையும் செம்பொன் மவுலியும் கோல மார்பும்**
**எண்டரு கரம்ஈ ராறும் இலங்கெழிற் படைகள் யாவும்**
**தண்டையும் சிலம்பும் ஆர்க்கும் சரணமும் தெரியக்**
**கண்டான்.**

இரண்டாம் நாள் நடந்த சூரன்போரிலே முருகனைச் சூரன் இவ்விதம் காண்கிறான். அடியார்களின் நடுவே இன்று அந்த முருகன் தேரேறிக் காட்சி தருகின்றான். அந்த மகிழ்ச்சியிலே அரோகரா அரோகரா என்று வானைப் பிளக்கும் பெருந்துதி கொண்டு பாடிப் பரவி ஏத்திப் போற்றுகிறார்கள்.

மகளிரும் மைந்தரும் குழந்தைகளும் நல்லாடை அணிந்து அணிகள் பல பூண்டு முகத்தில் புன்னகையும் வாயில் முருகா முருகா என்ற நாமமும் தவழ உலாவுகின்றார்கள். மக்களின் பக்திப் பரவசத்தினால் எங்கு பார்த்தாலும் ஒரு தனி அழகு தெரிகின்றது. விழாவின் பெருமை அதுதானே! ஏனைய நாள்களில் இல்லாத எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊக்கமும் ஊரவர்களுக்கு உண்டாக வேண்டும்; ஆலயத்துக்கு வர வாய்ப்பு இல்லாதவர்களுக்கும் அருள் கிடைக்கவேண்டும் என்று நம்முன்னோர் விழாக்களை அமைத்திருக்கிறார்கள். என்றும் அழகனாக, இளையவனாக, குமரனாக, நித்தியானந்தனாக இருக்கின்ற பெருமானுக்குப் புதிதாக ஒருமகிழ்ச்சி வரவேண்டும் என்பதில்லை. நெல்லைப் படைத்து நீரைப் படைத்து மண்ணைப் படைத்து விண்ணைப் படைத்துச் சாட்டி நிற்கும் அண்டம் எல்லாம் சாட்டை இல்லாப் பம்பரம் போல் ஆட்டி வைக்கும் அண்ணலுக்கு விழா எடுப்பதன் நோக்கம்தான் என்ன? நம்மை வாழ்விக்கவே நாம் விழா எடுக்கிறோம். இறைவன் திருநாமத்தைச் சொல்லி அவனை நினைந்து நினைந்து

உணர்ந்து உணர்ந்து இன்புற வேண்டும் என்பதற்காகவே நாம் விழா எடுக்கிறோம்; 'லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து' என்ற வேத ஒலி விழாவிலே கேட்பதன் பொருள் இதுதான். ஆண்டவன் பெயரைச் சொல்லி அடியார்கள் அடையும் மகிழ்ச்சி - தனித்தனியே ஒவ்வொருவருக்கும் இருக்கும் கவலைகளை மறந்து திருவருளை நினைந்து உருகும் நிலை - விழாவினால் வரவேண்டும். மனிதனுக்கு இருக்கும் கவலைகளுக்கு எல்லை ஏது? பட்டத்துக்குக் கவலை, பதவிக்குக் கவலை, மக்களால் கவலை, மனைவியாற் கவலை, பொருளால் கவலை, பொருள் இன்மையால் கவலை. நோயால் கவலை, முதுமையால் கவலை; இப்படிக் கவலை களுக்கு முடிவே இல்லை. இந்தக் கவலைகள் எல்லாவற்றை யும் மறந்து தானே விழா எடுக்கிறோம்; அத்திருவிழாவிலே திருவருள் நிலா எறிப்பதைப் பார்க்கிறோம்.

> மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
> அண்ண லாரடி யார்தமை அமுதுசெய் வித்தல்
> கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
> ........................................................................

என்ற பெரியபுராணப் பாடல் இந்த மெய்யடியார் களின் இரத்தத்திலே ஊறி இருக்கின்றது; இருதயத்திலே அடிக்கின்றது.

துன்பத்தைத் துரத்தி, துயர்களை விலக்கி, அன்பரைக் காப்பான் அருட்பெரு முருகன் என்ற நினைவிலேயே வைத்த கண் வாங்காமலே முருகனைத் தரிசித்த வண்ணம் நிற்கிறார் கள் மெய்யடியார்கள்.

> சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
> வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்கு வள்ளி
> காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
> சாந்துணைப் போதும் மறவா தவர்க்குஒரு தாழ்வில்லையே;

என்பது இவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்?

நல்லைநகர்ச் செவ்வேளின் பெருங்கொடை:

கருணையினில் உனக்கெவரே ஒப்பார்சூரன்
கவின்மயிலாய்க் கோழியாய் எந்தநாளும்
மருவுநினை அகலாமல் நிற்கும்இன்ப
வாழ்வினைப்பெற் றிலங்குகின்றான் இளமைமாறாத்
திருவுருவம் எழில்உருவம் அதனைநெஞ்சில்
தியானிப்போர் மனத்தாலே இளைஞர்ஆவார்
வருவினைகள் தீர்த்தருளும் தெய்வமேநல்
வளம்சாரும் நல்லூரிற் கோவேபோற்றி,

நல்லைநகர்ச் செவ்வேள் அற்புதத் தெய்வம். அவன் தரும் அருள் வாழ்வுக்குத்தான் எல்லை ஏது? "நல்லை நகர்ச் செவ்வேளே, நின் திருக்கோயில் திருமுன்றில் வந்த பேர்கள் தீராத பிணி தீர்வர். ஓராயிரம் பிறவி செய்த பாவங்கள் ஒழிவர்; எல்லை இல்லா இன்பம் எய்துவார். மலடிமார் இனிய மக்களைப் பெற்று எடுப் பார்கள். இரு கண்ணும் குருடான பேர்கள் விழி பெற்று ஒளி பெறுவர். தரித்திரர் தனவந்தர்களாகி இராச போகம் துய்ப்பார்கள். சொற்பொருள் தெரியாத மூடரும் ஞானப்பிரசங்க மழை பொழிவார்கள். நாளினாலும் கோளினாலும் வருகின்ற துயர் இல்லாமற் போகும். அவமிருத்து அகன்று போகும்" என்று பாடுகிறார் நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர். இதோ அவர் பாடல்:

தில்லைநட ராசன்அருள் சேயேஉன் அற்புதத்
திருமுன்றில் வந்தபேர்கள்
தீராத பிணிதீர்வர் ஓராயி ரம்பிறவி
செய்தபா வங்கள்ஒழிவார்
எல்லைஇல் லாஇன்பம் எய்துவார் மலடிமார்
இனியமகவு ஈன்றுஎடுப்பார்
இருகணும் குருடான பேர்கள்வாள் விழிபெறுவர்
இல்லார் இராசர்ஆவர்

சொல்லேஅறி யாமூடர் ஞானப்ர சங்கமழை
சொரிவர்நாள் கோள்துயர்கெடும்
துன்மரணம் அகலுமால் என்னுடைய பழவினைத்
தொடர்புஅறு வகைஎன்னையோ
வல்லேஎனை ஆளஉன் மனம்இனி இரங்குவாய்
வளமேவு நல்லைநகர்வாழ்
மங்கைஉமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே.

அவன் திருவடியே நமக்குத் தஞ்சம், புன்முறுவல் கொஞ்சித் தவளும் ஓராறு திருமுகமும் ஈராறு திருக்கர மும் பொலிய நல்லைநகர்ச் செவ்வேள் எழுந்தருளி ஆன்ம கோடிகள் அயரா அன்பில் அரன் கழல் சேரும் வண்ணம் சிவஞானத்தை வாரி வழங்குகிறுன். அவன் அன்புக்கு எளியனுய், கண்ணுக்கு இனியனுய், கலியுக வரதனுய், கண்கண்ட தெய்வமாய் நம்மை வாழ்விக்க வரும் வண் ணத்தை என்னென்போம்!

## நல்லூர்த் தேர்விழாக் காட்சி; நிறைவுரை:

நல்லூரில் வீற்றிருக்கும் நாடவொணுன் அறுமுகவன்
பல்லோரும் கண்கண்டே பணிந்துமிக இன்பமுற
எல்லூரும் தேர்மிசையே ஏறிவரும் காட்சிசொல
வல்லாரும் இங்குண்டோ வானேர்க்கும் அரிதேயாம்

— மகாவித்துவான் சி. கணேசையர்

ஆம்! அக்காட்சியை எடுத்துச் சொல்ல நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? எல்லாம் அந்த நல்லைநகர்ச் செவ்வேளின் திருவருள்!

10

# தீர்த்தோற்சவ வர்ணனை

நல்லைநகர்ச் செவ்வேளின் அருள்பெருகு தீர்த்தோற்சவ நன்னாளிலே பேசுகிறோம்.

பேசத்தொடங்கும்போதே மணிவாசகரின் திருவாசகம் நினைவுக்கு வருகின்றது:

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

முருகப்பெருமானை என்சொல்லி வாழ்த்தப்போகிறோம் என்றே தெரியவில்லை. ''கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'' என்றுதான் சொல்லத்தோன்றுகிறது. 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்... கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்' என்ற சேக்கிழார் வாக்குக்கு அமைய அடியார்கள் நல்லை நகர்ச் செவ்வேளின் விழாக்கள் அத்தனையையும் தரிசித்து வாயாரப் பாடி நெஞ்சாரத் தியானித்து அகம் மலர முகம் மலர இங்கே நிற்கிறார்கள்.

**முருகனின் சக்திகள்:**

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்று கந்தனுக்கு மூன்று சக்திகள் உண்டு. இச்சாசக்தி வள்ளி எம்பிராட்டி; கிரியாசக்தி தேவகுஞ்சரியாம் தெய்வயானை; ஞானசக்தி வேற்பெருமான். ஆசை, செயல், அறிவு என்ற மூன்றும் எல்லா மக்களிடத்திலேயும் இருக்கின்றன. ஆசை என்பது இச்சை; செயல் என்பது கிரியை; அறிவு என்பது ஞானம். ஆகவே, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய மூன்றும் எல்லாரிடத்திலேயும் உண்டு; அளவிலே வேறுபாடு உண்டு.

நாம் நம்முடைய குடும்பம் வளமாக வாழவேண்டும் என்று ஆசைப்படுகிருேம். இந்த உலகத்திலே இருக்கின்ற அத்தனே குடும்பங்களும் எம்பிரான் குடும்பங்கள். அந்தக் குடும்பங்கள் திருவருள் நலன் பெற்று நிறை நலனுடன் வாழவேண்டும் என்பது அவன் தனி விருப்பு. அதற் கேற்ற செயல்களேயே அவன் தன் திருவிளேயாடல்களாக நிகழ்த்துகிருன்.

மூன்று சக்திகளேயும் முருகப் பெருமான் காட்டி நிற் கிருன். குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியையும் மறுஇல் கற்பின் வாள்நுதல் தெய்வயானை யையும் வீர வேலினேயும் ஒருங்கே காட்டும் அரும்பெரும் தத்துவத்தை நாம் வியக்காமல், நினேந்து நினேந்து உருகா மல் இருக்க முடியுமா, என்ன?

வெற்றிவடிவேலினேப் பார்க்கின்றபோது சூரசங்காரம் நினேவுக்கு ஓடோடியும் வருகின்றது. ஒவ்வொருவரிடத்தி லேயும் சூரத்துவம் இருக்கின்றது. சூரசம்ஹாரம் நிகழ்ந் தால்தான் விடிவு உண்டு.

வள்ளி எம்பிராட்டியை வலப்புறத்திலே பார்க்கின்ற போது ஆன்மா பரமான்மாவுடன் இணேகின்ற பெரிய தத்துவம் தெரிகின்றது. வள்ளி தவம் செய்யவில்லே. சாதனே வகையில் ஈடுபடவில்லே. இந்திரகுமாரி இருக்கக் கலாமயில் கூத்தயர் குளிர் புனம் மொய்த்திட்ட சார லில் போய்க் குறவர் மகளாம் வள்ளிக்குச் சலாம் இட்டவன் முருகன். வள்ளி திருமணம் முருகனுடைய பெருங் கருணேத் திருவிளேயாடல். வள்ளியைத் தேடி வேடஞகி, விருத்தஞகி, வேங்கையாகி அந்நங்கையைத் தன் செங்கையால் பற்றியவன் நம்மையும் தேடி வந்து ஆட் கொள்வான் என்பதற்குச் சந்தேகம் இல்லே. அவனு டைய எளிவந்த தன்மையை என்னென்போம்!

முருகப்பெருமான் தேவர்களுக்காக எவ்வளவு பாடு பட்டான்! தேவர்களைச் சிறைமீட்க வேண்டிச் சூரன் உடல் அற வாரி சுவறிட வேலை விட்டான். அந்த நன்றிக்காகத்தானே தெய்வயானை அம்மை எம்பிரானுக்கு நல்ல பரிசாகக் கிடைத்தது நன்றி மறவாப் பெரும் பண்புடன் செய்வன எல்லாம் திறம்படச் செய்யக் கிரியா சக்தி தொழிற்பட வேண்டும் என்பதை அவன் திருவிளையாடல் காட்டித் தருகின்றது.

**பஞ்சகிருத்தியத்தில் அருளல்:**

பஞ்சகிருத்திய முறையிலே அதாவது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களிலே ஆரம்பம் தொடங்கிக் கொடியேற்றம் முடிய உள்ள அனைத்தும் படைத்தலையும் திருவீதியிலே பெருமான் எழுந்தருளி வருவது காத்தலையும் தேரில் ஆரோகணித்து வருவது அழித்தலையும் மௌன உற்சவம் மறைத்தலையும் தீர்த்தோற்சவம் அருளலையும் காட்டித்தருகின்றன. மகோற்சவ காலங்களிலே எம்பிரான் எழுந்தருளி வருவது ஆலய தரிசனம் பண்ணுதவர்களுக்கும் பண்ணமுடியாதவர்களுக்கும் அருள் பாலித்தற்காகவே என்பதை நாம் நன்ருக உணரவேண்டும். இதோ ஒரு திருவிசைப்பா:

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணரைச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

**விநாயகர் எழுந்தருளல் :**

முருகப் பெருமான் தீர்த்தம் ஆடி அருள் பாலிக்க வந்து கொண்டிருக்கிறுன். அவன் தன்னடியார் கூட்டத்துக்கு அருள் பாலிக்கத் தனியாக எழுந்தருளவில்லை. அந்தப் பெருமான் தன் அண்ணன் விநாயகப் பெருமானை முன்ணுக நிறுத்தி இருக்கிறுன். அக்குறமகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணம் அருள் பெருமான் அந்த விநாயகப்

பெருமான்! நன்றியால் நனைந்த உள்ளத்தை முருகன் நமக்கு எடுத்துக் காட்டுகிருன் போலும்! அதுமட்டுமா?

> திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
> பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
> ஆதலால் வானோரும் ஆனே முகத்தானைக்
> காதலால் கூப்புவர்தம் கை.

கணபதியின் காருண்யத்தை என்னென்போம்!

> விநாயகனே வெவ்வினையை வேர்அறுக்க வல்லான்
> விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
> விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினுல்
> கண்ணிற் பணிமின் கனிந்து.

என்று நம்மை எல்லாம் குட்டிக் குட்டிக் கும்பிட வைக்கின்ருன் அந்தப் பெருமான்.

சைவர்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினுலும் விநாயகரை முதலில் வந்தித்து வணங்கிச் செய்வது பெரு வழக்கம். அவன் விக்கின விநாயகன் அல்லவா! விக்கினங் களைத் தீர்த்து வைக்கும் அந்தப் பெருமான் முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை இரதம் அச்சது பொடிசெய்த அதிதீரன்! சட்டத்தை ஆக்கியவனும் சட்டத்தை மீறிஞல் தண்டம் உண்டு என்பது தர்மம். அந்தத் தர்மத்தை ஒரு திருவிளையாடலினுல் காட்டி இருக்கிருர் சிவபெருமான். திரிபுர தகனம் செய்யப் புறப்பட்டபோது சிவ பிரானே விக்கின விநாயகரை நினைக்கவில்லை. அதனுல் அவரின் தேரின் அச்சு முறிந்த கதைதான் நமக்குத் தெரியுமே! இதனைக் காட்டித் தருவோன் போல் முருகன் விநாயகருக்கு முதல் இடம் கொடுத்து இருக்கிருன். எக் கருமத்தைத் தொடங்கும் போதும் அவனுக்கு ஒரு தோப்புக்கரணம் போட்டு விட்டால் காரியம் சிறப்பாக நிறைவேறுவதைச் சொல்லவா வேண்டும்?

அந்த விநாயகர் வருகின்ற வருகையைப் பார்க்கின்ற போது ஔவையாரின் விநாயகர் அகவலை நாமும் பாடாமல் இருக்கமுடியாது.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்துஅழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் துரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
..................................

துதிக்கையினால் தூக்கிக் கைலையில் வைக்கப்பட்ட ஒளவையாருக்கு அன்றைக்குத் தெரிந்த திருவுருவம் இன்று நமக்கும் தெரிகின்றது.

அஸ்திரதேவர் வருகை:

அஸ்திரதேவருடைய வருகையையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசனுடைய செங்கோலைக் கருதுவது போலே ஆண்டவனுடைய ஆணையாகிய செங்கோலை காட்டித் தருகிறது அஸ்திரதேவரின் வருகை. ஆலயத்தில் மூல மூர்த்தி எதுவோ அதன் ஆயுதமே அஸ்திரதேவர் என்று கொள்ளப்படும்.

பரமானந்த சாகரம்:

நாம் உலகியலில் கட்டுப் பட்டுப் பிரபஞ்சச் சேற்றில் உழல்கின்றோம். விடிவுஏது? முருகனிடத்திலே உண்மையான அன்பு பூண்டு நெஞ்சம் நெகிழ்ந்து மனம் உருகினால் முருகன்

திருவருள் கிடைக்கும். பக்தித் துறையில் இருந்தால் பரமானந்த சாகரத்தில் மூழ்கலாம், பிறவிப் பெருங்கடலுக்கும் ஆனந்தக் கடலுக்கும் நடுவிலே வாழ்க்கை என்ற மேட்டிலே இருக்கின்ற நாம் பரமானந்த சாகரத்தில் மூழ்குவதற்காக நல்லைநகர்ச் செவ்வேளின் திருக்குளத்துக்கு வந்திருக்கிறோம். ஞானத்துறை வழியாக அல்லது கர்மத் துறை வழியாகப்போக முடியாது என்றால் பக்தித்துறை வழியாகப் போகவேண்டியதுதானே! நாம் செல்ல வேண்டிய இலட்சியக் கடலை முருகன் காட்டித் தருகிறான். ஆனந்த வாரியோடு கலப்பதனால் அறிவாகிய சிற்றாறு சுத்தமாகும். அப்போது காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பனவற்றினால் நாற்றம் எடுக்கும் வாசனை அங்கே இருக்கமாட்டாது. ஆனந்த வாரியுடன் கலந்தால் ஆனந்த வாரியின் மணம் அன்றி வேறு எந்த மணம் வீசும்? புத்தித் தரங்கம் பக்தித்துறை வழியே செல்ல வேண்டும். எந்தப் படியில் நின்றாலும் பக்தித் துறையில் இறங்கி விட்டால் இறைவனாகிய ஆனந்த வாரியுடன் சங்கமம் ஆகி விடலாம். சிவகோசாரியாரும் கண்ணப்பரும் வெவ் வேறு படியில் நின்றார்கள். பக்தித்துறையில் இறங்கினார் கள்; பரமானந்த சாகரத்தில் மூழ்கினார்கள்.

> பத்தித் துறைஇழிந்து ஆனந்த வாரி படிவதினால்
> புத்தித் தரங்கம் தெளிவது என்றோ?

என்று தானே அருணகிரியார் பாடுகிறார். நாமும் அதனைப் பாடிக்கொண்டு தீர்த்தக் குன்றின் அருகே செல்லலாம்.

பரமானந்த சாகரம் அகண்டமான கடல். முருகப் பெருமானை ஆறுமுகத்துடன் அடியவர்கள் அன்பொழுகத் தரிசித்தார்கள். அழகிய வேலுடன் கண்டார்கள். அந்த நல்லமுதத்தை அள்ளிப் பருகினார்கள். அடியவர்களின் செயல்கள் எல்லாம் அடங்கின. புத்திக் கமலத்தில் உருக்கம் எழுந்தது. பரமானந்த சாகரம் தெரிந்தது. இனித் தோய வேண்டியதுதானே!

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.

என்ற அலங்காரப் பாடலை நாம் எத்தனை முறை பாடினாலும் தகும்.

பாசக்கட்டில் கட்டப்பட்டிருக்கின்ற ஆன்மா தன்னுடைய உள்ளத்தில் சிறிது அன்பைக் கொண்டு முருகா முருகா என்று சொல்லி உள்ளம் உருகினால் அந்த அன்பை ஏற்றுக்கொண்டு ஆன்மாவைப் பிரபஞ்சச் சேற்றினின்றும் எடுத்துத் தன் திருவடித் தாமரையோடு ஒன்ற வைக்கும் பெருங்கருணை படைத்தவன் முருகப்பெருமான். இந்த நம்பிக்கையுடன் தான் மெய்யடியார்கள் இங்கே திரண்டு வந்திருக்கிறார்கள்.

சண்முகதீர்த்தம்:

இங்கே இருக்கின்ற திருக்குளம் சண்முகதீர்த்தம். அதன் பெருமையையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

கருணைமுகம் ஓராறுடனும் காக்கும் கரம் ஈராறுடனும் ஆறுமுகப் பெருமான் தெற்கு நோக்கிய வண்ணம் இருக்கிறான். ஏறுமயில் ஏறி விளையாடும் முகம், ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம், கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம், குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம், மாறுபடு சூரரை வதைத்த முகம், வள்ளியை மணம் புணர வந்த முகம் என்ற இந்த ஆறு திருமுகங்களினின்றும் வழிந்து ஓடும் கருணை வெள்ளம் திருக்குளத்திலே பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கின்றது. மயில் கம்பீரமாக எழுந்து நின்று திருக்குளத்தைப் பார்க்கின்றது. போகமுறும் வள்ளியும் புத்தேளிர் பூங்கொடியாம் தெய்வயானை அம்மையாரும் வளமாக வலமும் இடமுமாக எழில் பொழிய நின்றுகொண்டு சண்முக தீர்த்தத்தை கடைக்கண் நோக்கம் செய்கின்றார்கள்.

திருக்குளத்துக்குத் தெற்குப் பக்கத்திலே பழநி ஆண்டவன் வடக்கே பார்த்துக்கொண்டு எழுந்தருளி இருக்கிறான். வள்ளி என்ற வஞ்சியிடம் நலமாகக் காதல் மொழி பேசி அவள் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற நிலையையும் கிழக்கோலம் புனைந்து சென்று அம்மங்கை தன் செங்கையால் தந்த தேனையும் தினைமாவையும் அருந்தி மகிழ்ந்த செய்கையையும் மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி அம்மடவரல் வள்ளியை மணந்துகொண்ட மாண்பையும் இந்த ஆண்டிப் பண்டாரத்தைப் பார்க்கின்றபோது நினையாமல் இருக்க முடியுமா, என்ன? ஈராறு கை அழகன், இசைவான மயில் அழகன், கருணை வேலழகன், கமலப் பூப்போல் கால் அழகன், மார்பழகன், கோவணாண்டியாகத் தண்டு கொண்டு இங்கே நின்று திருக்குளத்தை - சண்முக தீர்த்தத்தை - பரமானந்த சாகரத்தைத் திருவருள் நோக்கம் செய்கிறான்.

சண்முக தீர்த்தம் இன்னொரு வகையிலும் புண்ணிய தீர்த்தம் ஆகி விடுகின்றது. ஆறுமுக ஐயனை, நல்லூர் வாழ் நல்ல குமரனை, தரிசிக்க வரும் அடியார்கள் திருக்குளத்துக்கு அருகே இருக்கும் பழநி ஆண்டவனையும் தரிசிக்காமல் ஒருபோதும் செல்வதில்லை. பழநி ஆண்டவனைத் தரிசிக்க வரும் மெய்யடியார்கள் திருக்குளத்தை வலம் வந்தே செல்வார்கள்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே

என்று குலசேகராழ்வார் பாடுவார். கோயில் வாசல் படியாக வேண்டும் என்று வரம் கேட்கிறார் ஆழ்வார். நல்லை நகர்ச் செவ்வேளின் திருக்குளத்துப் படிகள் எத்தனை எத்தனை அடியார்களின் திருப்பாதங்களைக் கண்டு களித்திருக்கும்! இந்தப் படிகள் எத்தனை எத்தனை வருடங்கள் கந்தப் பெருமான் தீர்த்தமாடும் திருவிழாவைக் கண்டு களித்திருக்கும்! இத்தகைய மாபெரும் பாக்கியம் பெற்ற

படிகளினாலும் திருக்குளம் புண்ணியத் தீர்த்தம் ஆகின்றது.

திருக்குளத்துக்கு மேற்குப் பக்கத்திலே திருப்புகழ் மண்டபம் அமைந்து இருக்கின்றது. உற்சவ நாள்களில் இங்கே முருகா முருகா என்று ஒலிக்கின்ற நாம ஒலி சண் முக தீர்த்தத்திலே பக்குவமாகப் படிந்து கிடக்கின்றது. நாமத்தின் மகிமைதான் நமக்குத் தெரியுமே.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

என்று சம்பந்தர் பாடினால்,

பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்தன் நாமம் நவிலவே

என்று அப்பர் பாடுவார்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு தும்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலம்அடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே

என்று அருணகிரியார் பாடுவார் இத்தகைய பெருமை பெற்ற திருநாமத்தின் அருள் ஒலி படிந்து சண்முக தீர்த்தம் புண்ணியத் தீர்த்தம் ஆகின்றது.

### அடியார்களின் பக்திப் பரவசம்:

அடியார்கள் படிகளிலே வேற்பெருமானின் வருகைக்குக் காவல் இருக்கிறார்கள்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே

என்பது இந்த மெய்யடியார்களுக்குத் தெரியாமலா இருக்கும்?

திருக்குளத்தின் அருகே நிற்கின்ற அடியார் கூட்டத்தின் எண்ணிக்கை சொல்ல முடியாது. வடம் பிடித்தால் முத்தியிலே இடம் பிடிக்கலாம் என்ற பெரு நம்பிக்கையுடன் தேர்வடம் பிடிக்க எவ்வளவு ஆராக் காதலுடன் இருந்தார்களோ அத்துணைப் பெருவிருப்புடன் முருகன் தீர்த்தமாடி அருளுகின்ற காட்சியையும் கண்டு தரிசித்து விட்டால் முத்தியில் இடம் தப்பாமே கிடைத்து விடும் என்ற இந்த அடியார்களின் அசையா நம்பிக்கையைப் பற்றி எளியேன் என்ன சொல்ல முடியும்? இவர்கள் தேவலோகத்தில் கணநாதராக இருக்கின்ற பெரும்பேற்றைப் பெறுவார்கள். சந்தேகமே இல்லை; இதனைக் காஞ்சிப்புராணம் அழகாகச் சொல்கின்றது.

**இத்தகு கடவுட் சாறு நோக்கிஅங்கு இறைஞ்சு வோரும்**
**அத்தகு விழாவின் ஈற்றில் தீர்த்தநீ ராடு வோரும்**
**பைத்தபாம்பு அல்குல் செவ்வாய்ப் பனிமொழி ஒருபால் மேய**
**வித்தகன் கயிலை நண்ணி விறற்கண நாத ராவார்**

**பஞ்சமூர்த்திகள் தீர்த்தம் ஆடல்:**

பஞ்சமூர்த்திகளும் வருகின்ற காட்சியைக் காணாத கண் என்ன கண்? காணாத கண் புண்கண், அக்காட்சியைப் பேசாத நாக்குப் புண்நாக்கு. விநாயகப் பெருமான் வெள்ளி ஆகுவாகனத்திலும் தெய்வயானை அம்மன் வெள்ளி மயில்வாகனத்திலும் வேற்பெருமான் தங்கமயில் வாகனத்திலும் வள்ளி அம்மன் வெள்ளி அன்னவாகனத்திலும் சண்டேசுரர் வெள்ளி ரிஷபவாகனத்திலும் தீர்த்த மண்டபத்துக்கு எழுந்தருளுகிறார்கள். கொடி, குடை, ஆலவட்டம் எல்லாம் முறையாக வருகின்றன.

**சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும**
**மறக்குறத்தி வள்ளி மணாள—நிறக்கொடிகள்**
**ஆடும் அழகுடைய நல்லூர்வாழ் ஆண்டவனே**
**நீடும் அருள்தருவாய் நீ**

இப்படி யோகசுவாமிகள் அன்றைக்குப் பாடினார். இதனை இன்று நாம் பாடுகின்றோம். சேவற்கொடி உயரப் பறக்கிறது. வெற்றிவேற்கொடி அசைந்தாடுகிறது. வேற் பெருமான் தீர்த்தமாடி அருள் பாலிக்கத் துள்ளி வருகிறான்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை

என்ற நம்பிக்கையினால் அடியார்கள் பக்தி மேலிட உரக்கப் பாடுகிறார்கள்.

கார்தடிந்து துய்க்கும் கனைகடலின் நீர்வறப்பப்
போர்தடிந்து செல்லும் புகர்வேல் தனைவிடுத்துச்
சூர்தடிந்தாய் அன்றே தொழும்அடியேம் வல்வினையின்
வேர்தடிந்தாய் மற்றெமக்கு வேறோர் குறையுண்டோ

செய்யும்அவ னும்புலனும் செய்வித்து நிற்போனும்
எய்த வரும்பொருளும் யாவையும்நீ யேஎன்கை
ஐய அடியேங்கள் அறிந்தனமால் அன்னதனால்
வெய்ய பவம்அகன்று வீடும்இனிக் கூடுதுமால்.

என்று தேவர்கள் சூரன்போர் முடிவில் போற்றினார்களே! இன்று நாமும், 'தீது பல உளவும் தீர்ந்தோம்; பழி அகன்றோம். தேறும் முகம் இன்றித் திரிந்தேமை ஆள அன்றோ ஆறுமுகம் கொண்டே அவதரித்தாய்' என்று பாடலாம்தானே? எம்முடைய தீவினையின் மூலவேரினைச் சங்காரம் செய்ய இந்த வேற்பெருமானைவிட வேறு யார் இருக்கிறார்கள்?

ஆன்மாவானது தத்துவங்களோடு கூடிய வினையை ஈட்டி அவ்வினைப்பயனை அநுபவிக்கச் செய்யுங்கால் இறைவனே அவ்வான்மாக்களிலும் தத்துவங்களிலும் வினைகளிலும் வியாபித்து நின்று தொழிற்படுத்துவார் என்ற பேருண்மையை அறிந்தால், பிறவி ஒழிந்து வீடுபேறு எய்தலாம். தீர்த்தமாடி அருளைக் காட்டித்தர எழுந்தருளி

வருகின்ற பெருமான் தொண்டு பூண்டு நிற்கும் மெய்யடியார்களுக்கு அந்தப் பேருண்மையைச் சொல்லிக் கொடுக்கிருன். துன்புற்றுச் சரண் புகுந்தவர்க்கு ஆறுதல் தந்து, அபயம் தந்து காக்கின்ற பெருமான் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் தருவான் என்ற நம்பிக்கை நெஞ்சிலே நீங்காத இடம் பிடிக்கப் படியிலே இடம் பிடித்திருக்கிருர்கள் மெய்யடியார்கள்.

வேற்பெருமான் திருவருளால் நமக்கு இனிப் பகை ஏது? துயர் ஏது? துன்பம் ஏது? முருகன், சூரியன் சந்திரன் அக்கினி வாயிலாகப் புற இருளைப் போக்குபவன்; ஆணவ மலத்தை அகற்றுபவன்; அன்பு மிக்கோர் ஏத்த, வேண்டியன வேண்டியாங்கு வழங்குபவன்; புலப்படாதன அனைத்தையும் தன் திருவருட் செறிவால் விளக்குபவன்; வீட்டின்பம் நல்குபவன்; உலகம் உய்ய வேள்வி காப்பவன்; வாழ்வு வளம் பெறவேண்டி அசுரத்துவத்தை ஒழித்து வளவாழ்வு தருபவன்; இல்லற இன்பம் செழித்தோங்கி வளரப் போகியாய்க் காட்சி அளிப்பவன்.

தீர்த்தமாடலாகிய அருளல் நிகழ்ந்து விட்டால் இனி நமக்கு வளவாழ்வு வந்து வாய்க்கும்; முருகன் திருவருள் எம்மை ஆக்கப் பாதையில் வழி நடாத்தும் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

பெண்கள் ஒரு பக்கமாகவும் ஆண்கள் ஒரு பக்கமாகவும் சதுர வடிவமான தீர்த்தக் குளத்தில் இடம் பிடித்து இருக்கிருர்கள். திருப்புகழ் மண்டபத்திலே நடைபெறுகின்ற முருக நாம பஜனையுடன் தாமும் சேர்ந்து பாடுகிருர்கள்.

ஐந்து மூர்த்திகளும் இதோ தீர்த்தக்குள மண்டபத்தை அடைந்து விட்டார்கள். பழநி ஆண்டவன் திருமுன்பு வரிசையாக வடக்கே பார்த்துக்கொண்டு எழுந்தருளிப் பஞ்ச மூர்த்திகளும் நிற்கிருர்கள். அஸ்திரதேவர் திருக்குளத்துக்குள்ளே அவரோகணம் செய்கின்ருர். செய்ய வேண்டிய கிரியைகள் எல்லாம் நிறைவேறுகின்றன. அஸ்திரதேவர்

தீர்த்தமாடுகிறார். அறங்காவலர் தீர்த்தம் ஆடுகிறார். படியில் இருந்த அடியவர்கள் எல்லோரும் திருக்குளத் துக்குள்ளே, பரமானந்த சாகரத்துள்ளே இறங்கித் தீர்த்தம் ஆடுகிறார்கள். ஒருவர்மேல் ஒருவர் தீர்த் தத்தை வாரி இறைத்து இன்பம் காண்கிறார்கள். வானொலி வர்ணனை செய்வோரும் இக்கட்டத்திலே தீர்த்தம் ஆட்டப் படுகிறார்கள். அதனால் வர்ணனையைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலையில் நிற்கிறார்கள். பக்தி முறுக்கு ஏறினால் செய்வது இன்னதென்பது தெரியாதுதானே? ஒலி வாங்கும் கருவி கூடத் தீர்த்தம் ஆடும் பெரும் புண்ணியத்தையும் பெற்று விடுகிறது. அதனால் அக்கருவியே சும்மா இருக்கும் நிலைக்கும் வந்து விடுகிறது.

சும்மா இருசொல் அறஎன் றலுமே
அம்மா பொருள்ஒன் றும்அறிந் திலனே

என்று ஒலிவாங்கும் கருவியும் பேச்சு ஒழிந்து மூச்சு ஒழிந்து நிற்பதில் வியப்பு என்ன இருக்கின்றது?

ஐந்து மூர்த்திகளும் திருக்குளத்து மண்டபத்தை விட்டு வெளியே எழுந்தருளுகிறார்கள். தீர்த்தம் ஆடிய மூர்த்திகளைத் தரிசித்துவிட வேண்டும் என்ற பேரெண்ணத் துடனும் பெருவிருப்புடனும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வீதிகளிலே குழுமி நிற்கிறார்கள்.

ஆதியந்தம் இல்லாத முதலாய் எல்லா
ஆருயிர்க்கும் தாயாகித் தந்தை யாகி
மாதுமையாட் இலஞ்சியமாய் மாதே வர்க்கு
வாய்த்தமெய்ஞ் ஞானகுரு வாகி நின்றாய்
காதலம ரர்கரிக்கும் வள்ளித் தாய்க்கும்
கணவனெனச் சுடர்கின்றாய் நல்லூர் வாழும்
சீதளவி லாசலடி யுடைய கந்தா!
திருவருளை ஈந்தெம்மைக் காத்தல் வேண்டும்

என்று கரங்குவித்துப் பாடிக்கொண்டே வைத்த கண் வாங்காமல் பக்தர்கள் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிற்கின்றார்கள்.

**விழாக்களின் உட்பொருள்:**

இருபத்தைந்து நாள்களிலும் 'காப்பது விரதம்' என்று இருந்து நல்வழி தேடிய அடியார்களுக்குத் திருவிழாக் களின் பெரிய தத்துவம் தெரியாமலா இருக்கும்? நாடெங்கும் விழாக்கள் நடைபெறுகின்றன. எல்லா விழாக்களையும் விடச் சிறந்த விழா கோயில்களில் நடை பெறும் திருவிழாவேயாகும். திருவிழாக்கள் பெரும் தத்து வங்களை உள்ளடக்கி இருக்கின்றன. உற்சவம் என்பதற்குச் சுகத்தைக் கொடுப்பது, மேலான கொண்டாட்டம், மேலான வேள்வி என்றெல்லாம் பல பொருள் கொள்ளலாம். படைத்தல் முதலிய ஐந்தொழில்களைக் குறிப்பது, உயிர் களின் மலத்தைப் போக்கி வீடுபேறு பயப்பது என்றும் பொருள் கொள்ளலாம்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெரும் தொழில்களையும் திருவிழாக்கள் குறிக்கின்றன. திருவிழாக் காலத்திலே இறைவன் தம்பம் (கொடிமரம்), விம்பம் (மூர்த்தியின் திரு வுருவம்), கும்பம் ஆகிய மூன்று இடத்திலும் வெளிப் பட்டு அருள் செய்வான். திருவருள் கூடுதலால் அடியவர் கள் சிவ விளக்கம் பெற்றுச் சீரோங்கி வாழ்வார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பதங்களில் நிற் போர் அப்பதங்களுக்கு உரிய பேறுகளை எல்லாம் பெறுவர். ஏனையோரும் அவரவர் பக்தியின் அளவுக்கு ஏற்பத் திருவருள் நலன் பெற்றுச் சிவநெறியில் நிற்பார்கள். ஆண்டவன் அகில உலகிலும் உள்ள உயிர்கள்மேல் கொண்ட கருணை யினால் திருவிழாக் கொண்டு பக்குவம் உள்ள ஆன்மாக்களை முத்தியில் சேர்க்கின்றார். திருவிழாக்களில் நடைபெறும் கிரியைகள் எல்லாம் நாட்டினை நன்கு செயற்படுத்துவதற் காகவே அமைந்திருக்கின்றன.

**கிரியைகளுக்கு ஒரு விளக்கம்:**

முதலிலே நடைபெறும் அனுஞ்ஞை குருக்கள் மகோற் சவத்தை ஆரம்பித்து நடாத்த அருள்தர வேண்டும் என்று பெருமானை வேண்டுதலாகும். கிராம சாந்தியினால் நோய்

துன்பம் என்பன நீங்கி இலட்சுமி கடாட்சம் ஏற்படுகின்றது. வாஸ்து சாந்தியினுல் குற்றங்கள் நீங்குகின்றன. மிருத்சங்கிரகணம் (மண் எடுத்தல்) என்பது புண்ணிய தீர்த்தக்கரை, நந்தவனம், வில்வ விருட்சத்து அடி போன்ற இடங்களில் சுத்திகரிப்புச் செய்து முளை இடுவதற்கு வேண்டிய மண்ணை எடுத்தலாகும். அங்குரார்ப்பணம் முளை இடுதல் ஆகும். முளையின் செழிப்பால் நாட்டுக்கு வர இருக்கும் நன்மை தீமைகளை ஓரளவு அறிய முடியும். தீமை தெரிந்தால் அதற்கு நிவிர்த்தி செய்வர். இரட்சா பந்தனம் காப்புக் கட்டுதலாகும். தொடங்கிய கிரியைகள் இனிது நிறைவேறற் பொருட்டுக் காப்புக் கட்டப்படும். சேயின் நோய் நீக்கத்துக்குத் தாய் மருந்து உண்பதுபோலே ஆன்மாக்களது மலப்பிணியைப் போக்குவதற்காக இறைவனே காப்புக் கட்டிக் கொள்கின்ருன். பேரிதாடனம் என்பது மேளம் அடித்தலாகும். மேளத்துக்குப் பூசை செய்து எல்லா உலகங்களுக்கும் உயிர்களுக்கும் நன்மை பெருக வேண்டும், தீமை ஒழிய வேண்டும் என்று குருக்கள் மேளம் அடித்து ஓசை எழுப்புவார்.

கொடி ஏற்றுதல் உயிர்களின் மலநீக்கத்தையும் சிவபதப் பேற்றினையும் குறிக்கும். கொடிமரம் வெறுமையாக இருக்கும்போது சிவம் ஒடுக்க நிலையில் தானே தனித்து நிற்கும் நிலையைக் காட்டித் தருகின்றது. கொடிமரம் - சிவம். கொடிச்சீலை - ஆன்மா; தருப்பைக் கயிறு - பாசம்; வெண்கயிறு - சத்தி. ஆன்மா பாசத்தினின்றும் நீங்கி இறைவனை அடைய வேண்டின் சிவசத்தி வாயிலாகவே அடைதல் வேண்டும். ஆன்மாவாகிய கொடிச்சீலை திருவருளாகிய வெண்கயிறு வழியாகச் சென்று தம்பத்தில் ஆறு ஆதாரத்தை ஆசனமாகக் கொண்டு அங்கே வீற்றிருக்கும் பரம்பொருளை, பரமசிவத்தை அடையும். தம்பத்தில் சீலை சுற்றப்பட்டு இருத்தல் ஆன்மா சிவத்தில் இரண்டு அற்று நிற்கும் அத்துவித நிலையைக் குறிப்பதாகும். கொடியேற்றும் ஆசாரியராகிய குருக்கள், வழிபடும் அடியவர்களுக்குத் தாம் செய்யும் கிரியைகளினுல் மலம் நீக்கம் உண்

டாக்கிச் சிவபதப் பேற்றுக்கு இட்டுச் செல்கின்றார் என்பது சொல்ல வேண்டியதில்லையே!

மகோற்சவம் முடியும் வரையும் யாகசாலையில் அக்கினி வளர்த்து யாகம் செய்வார்கள். யாகசாலையில் அக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அநுபவத்துக்கு வர ஒட்டாது சுத்தமாக்கும் பாவனை என்க. மலம் நீங்கிய ஆன்மாக்களைச் சிவத்தோடு சேர்க்கும் பாவனையாகச் சுத்தமான நெல்மலர்களை (நெற்பொரி) ஆசாரியர் சுவாமிக்குச் சமர்ப்பிப்பார். அட்டபாலகர் பூசை திரோதான சத்தியால் கர்மங்களைப் பரிபாகப் படுத்துதலைக் குறிக்கும்.

வாழ்த்து:

அழகினில்ஆ ரும்சமமாய் அறைய வாகா
　　அழகுடையாய் அருளினிலும் யார்க்கும் மேலாய்
விழைஅருளை வழங்குகின்ற வள்ளால் ஞான
　　வேலுடையாய் நூலுடையாய் மறைகள் பேசும்
தழைபுகழோய் ஆறுமுகம் படைத்த தேவே
　　தாரகமந் திரமேநன் மயிலாய் ஏறும்
பழையவனே புதியவனே ஈழ நாட்டில்
　　பலர்போற்றும் நல்லூரிற் கந்தா போற்றி!

நல்லைநகர்ச் செவ்வேளே,

நின்னை வந்தித்து வணங்கிய மெய்யடியார்கள் எல்லோருக்கும் நீ மயில் ஏறி வந்து அருள்சேரத் தர வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். 'லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து' என்ற வேத ஒலியுடன் நாமும் சேர்ந்து அகில உலகமும் சகல சம்பத்தும் பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

பொய்யற்ற கீரன் முதலாம்புல வோர்பு கழ்ந்த
ஐயற் கெனது சிறுசொல்லும்ஒப் பாகும் இப்பார்
செய்யுற் றவன்மால் உமைபூசைகொள் தேவ தேவன்
வையத் தவர்செய் வழிபாடு மகிழும் அன்றே

இலங்கையெனும் வளத்தீபம் வாழி! இங்கே
இலங்குபதி பலவாழி! நல்லூ ரென்று
துலங்குநகர் மிகவாழி! அதன்பாற் கோயில்
தூய்மையுடன் என்றும்ஒளிர் தரவே வாழி!
நலம்கெழும் அக்கோயிற் குள்ளே வேலின்
நலஉருவில் எழுந்தருளும் கந்தன் வாழி!
அலங்கலணி வள்ளிதெய்வ யானை வாழி!
அடியார்கள் குடியோங்கி வாழி! வாழி!

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

திருவடி வாழ்க! செந்தமிழ் வாழ்க! சிவநெறி வாழ்க!

வணக்கம்.

உ

# நல்லைநகர்ச் செவ்வேள் துதிப் பாடல்கள்

## திரு. கி. வா. ஜகந்நாதன்

வளம்நிறைந்த யாழ்ப்பாண நாட்டில், மக்கள்
மனமுருகி வழிபட்டு விருப்பம் யாவும்
உளம்நிறையப் பெறவைக்கும் தேவே! விண்ணோர்
உயர்வாழ்வைப் பறிகொடுத்து நின்றே ஏங்கக்
களம்நிறைந்த அவுணர்களை மாய்த்து மீட்டும்
கவின்நிறைந்த வாழ்வுபெற வைத்த வள்ளால்!
தளம்நிறைந்த கடம்பலங்கல் அணிந்த மார்பா!
தயையாளா! நல்லூரிற் கந்தா! போற்றி! 1

ஆரணமெல் லாம்புகழ, ஆக மத்தின்
அகமெல்லாம் பெருமையினை விரித்துப் பேசச்
சீரணவும் திருமாலாம் மாமன் நின்றன்
திருவெழிலைக் கண்டுகண்டு வியந்து நிற்க,
ஏரணவும் சிவபெருமான் உபதே சத்தை
இருசெவியும் குளிரும்வணம் கேட்டு வக்க,
நாரணவும் அன்பர்பணிந் திடநல் லூரில்
நண்ணிநில வும்கந்த சாமி! போற்றி! 2

ஓங்காரப் பேரொளியின் உள்ளே சோதி
உருவாக நின்றபிரான் நீஎன் கின்ற
பாங்காரும் உண்மையினை மஞ்ஞை மீதே
பரிதியென எழுந்தருளிக் காட்டும் மூர்த்தி!

## நல்லைநகர்ச் செவ்வேள்

தேங்கார்வத் துடனருண கிரியார் ஓதும்
திருப்புகழால் பன்னிரண்டு செவியும் இன்பம்
வாங்கா நின் றிடநல்லூர்த் தலத்தில் ஓங்கும்
வடிவேலா! நின்சரணம் போற்றி! போற்றி! 3

ஆதாரம் ஆறினிலும் அமர்ந்தாய் நீயே,
ஆறான சமயத்தின் தெய்வம் நீயே,
கோதேதும் இல்லாத அங்கம் ஆறும்
குறித்தறியும் பொருளுக்குச் சார்பு நீயே,
வாதேறு உள்ளத்து ஞானச் செல்வர்
மகிழ்ந்தத்து வாவாறும் பயின்றே ஏறச்
சீதார விந்தமல ரடியைக் காட்டும்
சேயேநல் லூர்வளரும் கந்தா! போற்றி! 4

பிறவியெனும் கடல்கடக்க வைக்கும் தோணி,
பெருமையெலாம் இருளையடர்க் கின்ற தீபம்,
இறவியினைக் கடந்தவர்கட் கினிதாம் முத்தி,
எழில்மலரால் அருச்சிப்போர்க் கேற்ற தண்பூ,
மறவியிலா தமரரெலாம் கூடி வந்து
வணங்குமுடி மேற்பதிக்கும் ஒளிமா ணிக்கம்,
அறமரிய பொருள்காமம் வீடு நல்கும்
ஆறுமுகன், நல்லூரில் கந்தன் தானே. 5

ஆயிரமா யிரங்கோடிக் கதிர்கள் தோன்றி
அடர்ந்ததுபோல் சோதியொளிர் மேனி கண்டு
மாயைமகன் சூரனன்று மனம்நெ கிழ்ந்து
வனப்புக்கிங் கிவனைப்போல் உளர்ஆர் என்று
மேயஅன்பில் சொற்றானென் றாலுன் தன்மை
விளைகருணைக் கோரெல்லை உண்டோ? ஈழத்
தேயநல்லூர்க் கோயிலுக்குள் வேலி னூடே
எழுந்தருளும் கந்தபிரான், நின்தாள் போற்றி! 6

ஞானசக்தி எனும்வேலைக் கையிற் கொண்டாய்,
நண்ணுமந்த வேலினிலே நினைய மைத்து
மேனவிலும் ஆவாக னத்தைச் செய்து
விழைந்துபெரி யோர்போற்ற நல்லூ ரின்கண்
வானவரும் போற்றஇடங் கொண்டாய், நின்றன்
மகிமைக்கோர் அளவுண்டோ? கலியு கத்தில்
ஊனமறக் கண்கண்ட தெய்வ மென்றே
உரைக்கின்ற பெருமானே, போற்றி! போற்றி! 7

உலகத்தில் எங்கெல்லாம் மலைகள் உண்டோ,
உவ்விடமெல் லாம்நீயே உறைந்தாய், கோயில்
நிலவுற்ற இடங்களிலே உருவத் தோடு
நிமிர்கின்றாய் பிறர்கோயில் இருக்கு மேனும்
குலவுற்ற கோயிலொன்றும் இலையா னாலும்
குமரன்நீ அங்கும்இருந் துறைவாய் ஐயா!
கலைகற்றோர் இதையுணர்ந்தார் குறிஞ்சித் தெய்வம்
காண்மினென்றார் நல்லூரில் உறையும் வேளே! 8

ஆதியந்தம் இல்லாத முதலாய் எல்லா
ஆருயிர்க்கும் தாயாகித் தந்தை யாகி
மாதுமையாட் கிலஞ்சியமாய் மாதே வர்க்கு
வாய்த்தமெய்ஞ் ஞானகுரு வாகி நின்றாய்,
காதலம ரர்கரிக்கும் வள்ளித் தாய்க்கும்
கணவனெனச் சுடர்கின்றாய், நல்லூர் வாழும்
சீதளவி லாசவடி யுடைய கந்தா!
திருவருளை யீந்தெம்மைக் காத்தல் வேண்டும். 9

முப்பத்து முக்கோடி தேவ ரெல்லாம்
முன்னாளில் அவுணர்களால் ஏதம் உற்றுத்
செப்பத்தா னியலாத படிதுன் புற்றார்
சிவனென்னும் அழலிடத்தே கொழுந்தாய்த் தோன்றித்

தர்ப்பத்தால் தருக்கிநின்ற சூர ஞதி
　　தைத்தியரை வேற்படையால் அழித்த எந்தாய்,
கர்ப்பத்தில் வாராமல் அன்பர் தம்மைக்
　　காக்கின்ருய் நல்லூரிற் கந்தா போற்றி! 10

காணரிய தெய்வமென்றும் மனவாக் கெட்டாக்
　　கடவுளென்றும் மறைநாலுக் கரியா னென்றும்
வீணவனை ஆராயப் புகுதல் என்றும்
　　வித்தகர்கள் உரைத்தாலும் கருணை யாலே
மாணுருவில் ஆறுமுகம் ஆறி ரண்டு
　　மலர்விழிகள் வேலெடுத்த திருக்கை கொண்டே
ஏணுறவே எழுந்தருளும் எம்மான், நல்லூர்
　　எழிற்கோயில் நிலவுகின்ற கந்தா போற்றி! 11

நின்னுடைய திருவுருவைக் கண்ணுற் கண்டு
　　நின்னினிய திருப்புகழை வாயாற் பாடி
மன்னுகின்ற அடியர்நினைத் துதிக்குங் காலை
　　மலியார்வத் துடன்காதால் கேட்டு, நின்றன்
இன்னியல்சேர் சோதியுரு உள்ளத் தின்கண்
　　எழுந்தருளச் செய்வித்துத் தியானம் செய்து
பன்னரிய இன்பஅநு பூதி எய்தப்
　　பார்த்தருள்வாய், நல்லூரிற் கந்த வேளே! 12

தேவரிறை வன்மகளாம் தேவ யானை
　　திகழெழில்ஓங் குறநிற்கத் தேவர் எல்லாம்
சேவைசெய நீயுலகிற் கிறங்கி வந்து
　　சிறுதொழிலும், சிற்றறிவும் உடைய வேடர்
பாவையினைப் பணிந்தவள்தன் இன்சொற் காகப்
　　பரிதவித்தாய், ஏங்கிநின்ருய், என்ப எல்லாம்,
மாவியப்புத் தருநின்றன் கருணை யாலே
　　வயங்குவிளை யாட்டன்ருே? நல்லூர் வேளே! 13

கோடிபல கோடிவினை வந்து சூழ்ந்து
குவலயத்தில் எனையிடர்க்குள் அழுத்தி னாலும்
நாடிநினைப் பணிந்திட்டால் கதிரோன் முன்னே
நண்ணுபனி போலவே நில்லா தோடும்
ஆடிவரும் மயிலுடைய ஐயா, மேனி
அழகினிலும், இளமையிலும் ஒப்பே இல்லாய்
பாடிவரும் அன்பர்தமக் கமுதே, நல்லூர்ப்
பதியினிலே கோயில்கொளும் கந்த வேளே! 14

சொல்லாகிப் பொருளாகிப் பொருளி னூடே
தோய்ந்தமைந்த உணர்ச்சியாய் உணர்ச்சி தன்னால்
எல்லாரை யுங்கவரும் இன்ப மாகி
எழில்மலராய் மணமாகி வித்து மாகிப்
புல்லேனும் மலையேனும் அவற்றி னுள்ளே
பொலிபொருளாய் நிற்கின்ற நின்னை நெஞ்சம்
கல்லேனும் நினைந்துருகும் படிவைத் தாள்வாய்
கவினிலங்கை நல்லூரிற் கந்த வேளே! 15

பொறியடங்கப் புலனடங்க உணர்வ டங்கப்
புவனமெல்லாம் மறைந்தடங்கப் பேதம் காணும்
நெறியடங்க நிலையடங்க நிலையில் விஞ்சி
நெகிழுகின்ற மனமடங்கக் கலைய டங்கக்
குறியடங்கக் குணமடங்கக் கோத டங்கக்
கொள்கையெலாம் நனியடங்க நிற்பார் மாட்டே
கிறியடங்க இணைந்தின்பம் கூட்டு கின்ற
கேண்மையுடை யோய், நல்லூர்க் கந்தா போற்றி! 16

மானெடுத்த திருக்கரத்து வள்ளல் மைந்தா!
மான்விழியாள் உமையணைக்கும் இளைய சேயே
மானளித்த வள்ளியெனும் கொடிசார் கின்ற
வனப்புடைய கற்பகமே, மானி டர்கள்

ஊனளித்த பிறவியினைக் கடக்கும் வண்ணம்
உருக்காட்டி அருள்தோணி ஏற்றும் ஐயா!
தேனளித்த கடம்பலங்கல் திருமார் பத்தோய்,
சீரார்ந்த நல்லூரிற் கந்தா போற்றி! 17

அழகினிலா ருஞ்சமமா யறைய வாகா
அழகுடையாய், அருளினிலும் யார்க்கும் மேலாய்
விழையருளை வழங்குகின்ற வள்ளால், ஞான
வேலுடையாய், நூலுடையாய், மறைகள் பேசும்
தழைபுகழோய், ஆறுமுகம் படைத்த தேவே!
தாரகமந் திரமேநன் மயிலாய் ஏறும்
பழையவனே, புதியவனே, ஈழ நாட்டிற்
பலர்போற்றும் நல்லூரிற் கந்தா போற்றி! 18

வேலழகா, மயிலழகா, விண்ணோர் போற்றும்
மேனிநலந் தனிலழகா, கமலப் பூப்போற்
காலழகா, மார்பழகா, கைகள் என்னும்
கடிமலரால் பேரழகா, மார்பி லார்முந்
நூலழகா, கிரியெல்லாம் கோயில் கொண்டு
நுனிப்போர்க்குள் சோதியென ஓங்கி நிற்கும்
வாலழகா, வள்ளியணை மணவா ளாசீர்
மல்குநல்லூர் தனில்நிலவும் கந்தா போற்றி! 19

ஞானமுறு துறவியரால் பலரும் வேட்டு
நல்லுபதே சம்பெறுவர்! அவர்கள் மேலாம்
மானமுறு பெருமுனிவர் பாலே ஞானம்
வாய்த்திடுவார்! ஆதலினால் முனிவர் மிக்கார்!
ஆனமுனி வோர்தமிலே சனக னாதி
அவர்நால்வர் மிக்கார்கள்! அவர்க்கா சானாய்
ஈனமறத் தென்முகத்தே வன்மே லானான்
எனின்அவற்கும் குருவானாய், நல்லூர்க் கந்தா! 20

ஒளிபடைத்த திருமேனி தோன்றும் தோன்றும்,
ஓங்கார மாமஞ்ஞை தோன்றும் தோன்றும்,
களிபடைத்த விண்ணோர்கள் பணிந்து போற்றும்,
கமலமலர்த் தாளிணைகள் தோன்றும் தோன்றும்,
அளிபடைத்த பன்னிரண்டு கண்கள் தோன்றும்,
ஆறுமுகத் தாமரைகள் அலர்ந்து தோன்றும்,
நளிபடைத்த அன்பர்தம் கூட்டம் தோன்றும்,
நல்லூரில் எழுந்தருளும் கந்த னுக்கே! 21

செந்தமிழை அகத்தியர்க்கு முன்னர் ஓதித்
திசையெல்லாம் புகழ்மணக்கச் செய்த தேவே!
பைந்தமிழின் அகப்பொருளில் களவு மன்றல்
பாடுபெறும் அதனுக்கோர் காட்டாய் வள்ளி
சந்தமுறு தோளணைந்தாய்! கற்பு மன்றல்
சார்தேவ யானையின்பால் நிகழ்த்தி நின்றாய்,
இந்தவகை தமிழுக்கே தெய்வ மாகி
இருக்கின்றாய், நல்லூரில் தேவ தேவே! 22

சூரபன்மன் றனையடியோ டழித்தா யல்லை!
துணிவுடைய அவன்மாவாம் உருவம் ஏற்று
வாரியிடை யேமறைய வேலை வாங்கி
மல்குபுன லைச்சுவற வடித்துப் பின்னை
நேருறுமவ் வவுணனையே இருகூ றாக்கி
நிகழுமவன் மயிலாகிச் சேவ லாகி
ஏருருவம் கொள்ளநீ ஊர்தி யோடே
எடுத்தகொடி யெனக்கொண்டாய், நல்லூர்க் கந்தா! 23

கருணையினி லுனக்கெவரே ஒப்பார்? சூரன்
கவின்மயிலாய்க் கோழியாய் எந்த நாளும்
மருவுநினை யகலாமல் நிற்கும் இன்ப
வாழ்வினைப்பெற் றிலங்குகின்றான்! இளமை மாறாத்

திருவுருவம் எழிலுருவம்! அதனை நெஞ்சில்
    தியானிப்போர் மனத்தாலே இளைஞர் ஆவார்!
வருவினைகள் தீர்த்தருளும் தெய்வ மே,நல்
    வளஞ்சாரும் நல்லூரிற் கோவே போற்றி! 24

இலங்கையெனும் வளத்தீபம் வாழி! இங்கே
    இலங்குபதி பலவாழி! நல்லூ ரென்று
துலங்குநகர் மிகவாழி! அதன்பாற் கோயில்
    தூய்மையுடன் என்றுமொளிர் தரவே வாழி!
நலங்கெழும அக்கோயிற் குள்ளே வேலின்
    நலவுருவில் எழுந்தருளும் கந்தன் வாழி!
அலங்கலணி வள்ளிதெய்வ யானை வாழி!
    அடியார்கள் குடியோங்கி வாழி! வாழி! 25

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

076080

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

SITHY VINAYAGAR
GF/26
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

50

அன்பளிப்பு : க. நந்தகுமாரன்

“வானொலியில் திருவிழா நிகழ்ச்சிகளை நேர்முக வர்ணனையாகச் செய்வது ஒரு தனிக்கலை; அது திருவருள் கூட்டவரும் பெருங்கலை. அன்பர் திரு. செ. தனபாலசிங்கன் அவர்களுக்கு இது முருகன் அருளால் கைவந்தகலை என்றுதான் சொல்ல வேண்டும் திரு. தனபாலசிங்கன் பலகாலம் செய்துவந்த வர்ணனைகள் புத்தக உருவில் வெளிவருவதில் பெருமகிழ்ச்சிகொள்கின்றேன். வேண்டிய நேரத்தில் ரதத்தில் ஆரோகணித்து வரும் முருகனையோ அருள்பாலிக்கும்



நல்லைக்கந்தனையோ பக்தியுடன் காணத்தக்க வகையில் இந்நூல் பக்தர்களுக்கு நிச்சயம் உதவும்.

– அறங்காவலர்
நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்

.. வானொலிப் பேச்சு என்றால் இதுவே மேல்வரிச் சட்டமாக அமைகின்றது. ஆசிரியர் தத்துவச் சாற்றையும் இலக்கியப் பாகையுமே பிழிந்து தருகின்றார். அவருடைய அறிவின் அகலமும் அன்பின் ஆழமும் இலக்கிய உள்ளத்தின் உயர்வும் இந்நூலில் எங்கும் காணலாம். தமிழர்கள் இந்நூலினை வாங்கி முருகப்பேரின்பத்தை உண்டு களிப்பாராக.

– தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

திருத்தேரின் தத்துவத்தையும் முருகப் பெருமானுடைய சிறப்பையும், அன்பர்களின் பக்தி உணர்ச்சியையும் கருத்துத் தெளிவோடு எடுத்துக்காட்டும்பயனுள்ள நூல் இது. சமயக் கருத்துக்களை இலக்கியச் சுவையோடு விளக்கும் இந்த நூலைப் படித்துவிட்டு நல்லூர்த் திருத்தேர் விழாவைக் கண்டால் ஒவ்வொரு காட்சியையும் கூர்ந்து அவதானித்து இன்புற முடியும். திரு. தனபாலசிங்கனுக்கு இலக்கிய உலகமும் சமய உலகமும் இந்தப் புத்தகத்தை உருவாக்கித் தந்ததற்காக நன்றி பாராட்ட வேண்டும்.

கி. வா. ஜகந்நாதன்

மேல் அட்டை அச்சு : விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்